சுதந்திரப் போரின் எழுச்சிக் களம்

அரங்க. சீனிவாசன்

தமிழ் வளர்ச்சித் துறை

சுதந்திரப் போரின் எழுச்சிக் களம்

அரங்க. சீனிவாசன்

தமிழ் வளர்ச்சி இயக்ககம்
எழும்பூர், சென்னை - 600 008.

நூல் விவரக் குறிப்பு

நூலின் பெயர்	:	சுதந்திரப் போரின் எழுச்சிக் களம்
ஆசிரியர்	:	அரங்க. சீனிவாசன்
வெளியீட்டாளர்	:	இயக்குநர் தமிழ் வளர்ச்சி இயக்ககம் எழும்பூர், சென்னை-600 008
பதிப்புரிமை	:	தமிழ்நாடு அரசு
மொழி	:	தமிழ்
பதிப்பு	:	2017
விலை	:	100
பக்கம்	:	160
படிகள்	:	1500
தாள்	:	70 ஜிஎஸ்எம், டிஎன்பிஎல்
நூலின் அளவு	:	1/8 டெமி
அச்சிட்டோர்	:	உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் இரண்டாம் முதன்மைச் சாலை சி.ஐ.டி. வளாகம், தரமணி சென்னை - 600 113
நூல் கிடைக்குமிடம்	:	தமிழ் வளர்ச்சி இயக்ககம் தமிழ் வளாகம், ஆல்சு சாலை, எழும்பூர், சென்னை-600 008.

முனைவர் **கோ.விசயராகவன்** எம்.ஏ., எம்.ஃபில்.,எம்.பி.ஏ.,பி.எட்., பி எச்.டி
இயக்குநர் (பொறுப்பு)
தமிழ் வளர்ச்சித்துறை
எழும்பூர், சென்னை-600 008

அணிந்துரை

தமிழக அரசு சிறந்த தமிழறிஞர்களின் நூல்களை நாட்டு உடைமை ஆக்கி, அதன் மூலம் அந்நூல்கள் எல்லோருக்கும் எளிதில் கிடைத்துப் பயன்பெறுமாறு அவற்றை மறு அச்சுச் செய்து வெளியிட்டு வருகின்றது. இவ்வரிசையில் **'சுதந்திரப் போரின் எழுச்சிக் களம்'** என்னும் இந்நூலும் அடங்கும்.

'பாரதநாடு பழம்பெரும் நாடு' என்றார் மகாகவி பாரதியார். பாரதநாடு பல்வளம் செறிந்த நாடு. இந்த நாட்டின் வளங்களை வாரிச் சுருட்டிக் கொள்ள வந்தவர்கள் சூழ்ச்சியால் மக்களைச் சுரண்டி அடிமைப்படுத்தி நாட்டை அடிமையாக்கினர். அந்த அடிமைத் தளையிலிருந்து விடுபட பல ஆண்டுகள் விடுதலைப் போர் நடத்த வேண்டிய நிலை ஏற்பட்டது. வாராது வந்த மாமணிபோல தோன்றியவர் மகாத்மா காந்தியடிகள். அவருடைய தலைமையில் மக்கள் வீறு கொண்டெழுந்த வரலாற்றில் ஜாலியன் வாலாபாக் படுகொலை ஒரு கறுப்புத் திரையாக உள்ளது. அந்த ஜாலியன் வாலாபாக் படுகொலையின் தியாக வரலாற்றை விளக்க எழுந்ததே சுதந்திரப் போரின் எழுச்சிக் களம் என்னும் இந்த நூல்.

கம்பனுக்கு இணையான கவிஞர் எனப்போற்றப்படும் மகாகவி **அரங்க. சீனிவாசன்** அவர்கள் இந்த நூலைப் படைத்துள்ளார். சுதந்திரப் போராட்டக்களம் கண்டவர். காந்தியின் மீது அளவற்ற ஈடுபாடு கொண்டவர். "மனித தெய்வம் காந்தி காதை" என்னும் பெருங்காப்பியம் எழுதியவர். கவிக்கடல், அருட்கவி போன்ற விருதுகளைப் பெற்றவர். சுதந்திரப் போர்க்களங்களைக் கண்டு கண்ணீர் சிந்தியவர். அதன் விளைவாக உணர்ச்சியின் வெளிப்பாடாக விளைந்ததே "சுதந்திரப் போரின் எழுச்சிக்களம்" என்னும் இந்த நூல். காந்தியக் கவிஞர் எனப் போற்றப் பெறுபவர்.

இந்நூல் மறு அச்சாகி மக்களுக்கு எளிதில் கிடைத்திட வேண்டும் எனும் அரிய வாய்ப்பினை ஏற்படுத்தித் தந்துள்ள தமிழும், தமிழ்நாடும் வாழ்ந்திட, அல்லும் பகலும் அயராது உழைத்த மேனாள் தமிழ்நாட்டு முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கும் மற்றும் இந்நாள் தமிழ்நாட்டு முதலமைச்சர் மாண்புமிகு எடப்பாடி கே. பழனிச்சாமி அவர்களுக்கும் இதயம் கனிந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ் மொழி வளர்ச்சிக்கு ஆக்கமும், ஊக்கமும் அளித்து வரும் மாண்புமிகு தமிழ் மொழி, தமிழ் பண்பாட்டுத் துறை, அமைச்சர் **கே. பாண்டியராஜன்** அவர்களுக்கும் நன்றி.

தமிழ் வளர்ச்சிப் பணிகளில் ஆர்வத்தோடு நாட்டம் செலுத்தித் தமிழ்த் தொண்டாற்றிவரும் தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறைச் செயலாளர் **இரா.வெங்கடேசன் இ.ஆ.ப.** அவர்களுக்கும் இதயம் கனிந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூல் சிறப்பான முறையில் மறு அச்சுப் பெற முனைந்து உழைத்த உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இயக்குநர் மற்றும் அனைத்துப் பணியாளர்களுக்கும் அச்சகத்தார்க்கும் நன்றி.

இயக்குநர்

உள்ளே...

1. பாரதத்தின் பழமை 1
2. அன்றைய பஞ்சாப்பின் ஆட்சி அமைப்பும் நிலவரமும் 5
3. ரௌலட் சட்டம் 26
4. அமிருத சரசு 37
5. லாகூர் 93
6. காசூர் 108
7. குஜ்ரன் வாலா 113
8. வாசீரா பாத் 117
9. நைசாமா பாத் 120
10. அகல்கார் 121
11. ராம் நகர் 123
12. ஹாபிசா பாத் 125
13. சாங்லா ஹில் 128
14. மணியன் வாலா 130
15. நவான் பிண்டு 132
16. சுகர் கானா 134
17. செயிக்கு புரா 136
18. லையால்பூர் 139
19. குஜ்ரத்து 141
20. மலாக் வால் 142
21. நிறைவுரை 143

இணைப்பு: ஒளிவிளக்கு உதம்சிங் 147

சுதந்திரப் போரின் எழுச்சிக் களம்

1 பாரதத்தின் பழமை

நாகரிகச் சூரியனின் நல்லொளிக் கதிரில் முதன் முதலாகக் குளித்த நல்லிடம், நாவலந் தீவு என்னும் பாரதமே!

தான் பெற்ற ஒளியைத் தரணிக்கெல்லாம் வழங்கிச் சால்பு பெற்றதும் நம் தாயகமே! பாரதத்தின் பழமையை வரலாறு இன்னும் வரையறுக்கவில்லை. ரொன்று நிகழ்ந்தது அனைத்தும உணர்ந்த வரும் அது என்று பிறந்தது என்று கூற இயலவில்லை.

'கிரீசும்ரோமாபுரியும்எகிப்தும்பண்டையநாகரிகத்தின்பிறப் பிடங்கள்' என்று மேனாட்டினர் வியந்து பாராட்டுவர். ஆனால், அவை தோற்றிய நாகரிகங்கள், இன்று இருந்த இடம் தெரியாமல் மறைந்துவிட்டன. அந்த நாகரிகங்கள் தோன்றுவதற்குப் பன்னெடுங் காலத்துக்கு முன்பே தோன்றியது, பாரதப் பண்பாடு ஆகையால்தான், கிரேக்கப் பேரறிஞன் அரிஸ்டாட்டில் தன் மாணவனாகிய அலெக்சாண்டர் மூலம் பாரத நாட்டுபபாண்டிதர் களையும் நூல்களையும் வர வழைத்தான் எப்து வரலாறு.

கிரேக்கரின் வீரம் விழுந்துவிட்டது . ரோமாபுரியின் அறிவு மங்கிப் போயிற்று. கிப்தில்சில கல்லறைக் மட்டுமே காட்சிப் பொருளாக - நாகரிகத்தின் மிச்ச சொச்சங்களாக உள்ளன. ஆனால் பாரதப் பண்பாடு - வீரம், அறிவு - இன்னும் உலகுக்கு ஒளி விளக்காக வழிகாட்டிக் கொண்டுள்ளது.

பாஞ்சாலம்

இத்தகைய பாரதத்துக்கே உயிர் நாடியானது பாஞ்சாலம். இந்தியாவை நாடி வந்தோர் அனைவரையும் முதன் முதலாகக் கவர்ந்திழுத்த இடம், பாஞ்சாலமே!

விவேகானந்தரின் புகழாரம்

"தூய்மையான பாரதத்தின் முகம் பாஞ்சாலமே! மனுவால் கொண்டாடப்பட்ட 'பிரமாவர்த்தம்' என்பதும் அதுவே! ஆன்மிகத்தின் பிறப்பிடமும் உறைவிடமும் அது!"

"பாஞ்சாலத்தில் பல வளமான நதிகள் தோன்றியது போலவே, ஆன்மிகத்துக்குரிய உயரிய கண்ணோட்டங்களும் அங்கிருந்துதான் தோன்றி உலகினைச் சீர்ப் படுத்தின.

"பாரதத்தின் மீது படையெடுத்து வந்த பகைவர்களை எதிர்த்து மார்பினைக் காட்டி, அடியும் உதையும் பட்டு, தேசப் பற்றினை முதன்முதலாக அறிமுகம் செய்த இடம் பாஞ்சாலமே!

"சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்த போதும், தன் வீரத்தையும் பெருமிதத்தையும் இன்றும் இழக்காமல் காத்து நிற்பது அந்தப் புனித நிலம்!

"அங்குத்தான் குருநானகர் பிறந்தார். உலகிற்கு அன்பினைப் போதித்தார். தம் அன்புக் கயிற்றால் இந்துக்களையும் முகமதியரையும் பிணைத்து ஒன்றுபடச் செய்தார்.

"குரு கோவிந்தசிங், பிற மதத்தினர் செய்த கொடுமைகளை எதிர்த்துக்குருதி சிந்திப் பாரதப் பண்பாட்டைக்காப்பாற்றிய புண்ணியபூமி பாஞ்சாலம்."

சுவாமி விவேகானந்தர் தொடுத்த பாஞ்சாலத்தின் புகழாரம் இது.

உலக முதல் இலக்கியம்

ஆசியாவின் நடுப் பகுதியிலிருந்து ஆரியர்கள் முதன் முதலாகக் குடியேறிய இடம் ஞ்சாலமே என்று சில மேனாட்டு ஆசிரியர் கணித்துள்ளனர்.

ஆனால் நம் நாட்டு அறிஞர் பலர் அதை ஏற்பதில்லை.

உலகின் முதல் இலக்கியம் என்னும் பெருமை பெற்றது இருக்குவேதம். அது தோன்றிய காலம் கி.மு. 4000 என்பது அறிஞர் பலரும் ஒப்பிய உண்மை. அந்த இருக்கு வேதம் தோன்றிய இடம் பாஞ்சாலமே!

இந்தியாவின் போர்க்களம்

பாஞ்சால நாட்டில் நடந்த போர்கள்தாம் எத்தனை! எத்தனை! 'இந்தியாவின் போர்க்களம்' என்றே அதனைக் கூறலாம்.

மகாபாரதப் பெரும் போர் நடந்த இடம் பாஞ்சாலமே!

மகா அலெக்சாண்டரை எதிர்த்துப் புருஷாத்தமன் போரிட்டதும் இங்குதான்.

முதலில் அலெக்சாண்டர் வென்றாலும் புருஷோத்தமனின் வீரத்தைக் கண்டு மெச்சி, வென்ற நாடுகளைத் திருப்பித் தந்துவிட்டு, மீண்டு செல்லக் காரணமான வீர நிலம் அது. அன்று புருஷோத்தமன் காட்டிய வீரமே இன்றும் வீரப்பயிர் விளையும் நிலமாகப் பாஞ்சாலத்தைப் பாதுகாத்து வருகின்றது என்பர் அறிஞர்.

சந்திரகுப்தன்

மௌரியப் பேரரசன் சந்திரகுப்தன், அலெக்சாந்தரைச் சந்தித்தது இங்குதான்!

ஆரியா வர்த்தம் முழுவதும் ஒரு குடைக் கீழ்க் கொணரும் ஆற்றலைச் சந்திரகுப்தனுக்குத் தந்தது அந்த நிலந்தான்!

அந்த மண்ணின் காடுகளும் நதிகளும் நகரங்களுமே சந்திரகுப்தனுக்குப் புதிய வீரத்தையும் ஆற்றலையும் அளித்தன என்பர் வரலாற்று அறிஞர்.

வீரத்தின் சுவை

பாரசீகர்கள், தார்த்தாரியர்கள் முதலியோர், உலகையெல்லாம் தங்கள் காலடிக் கீழ்க் கொணர வேண்டும் என்று படையெடுத்து வந்தபோது, இந்திய வீரத்தின் சுவையை அறிமுகம் செய்த இடம் அது. மகமதிய வெறியர்களான சபக்திஜன், கஜினி மகமது, மகமது கோரி முதலியோர் நாட்டின் உள்ளே புகுந்தபோது, அரணாக நின்று தடுக்க முயன்றது பாஞ்சாலமே!

முதல், இரண்டாம் உலகப் போர்களில் கணிசமான அளவில் படை வீரர்களைத் தந்துதவிய வீரநிலம் அது!

அறிவின் முதன்மை

வீரத்தைப் போலவே அறிவினும் முதன்மை பெற்று விளங்கியது பாஞ்சாலம்!

உலக முதல் இலக்கியம் தந்த இந்த மண்ணில்தான், உலக முதற் பல்கலைக் கழகம் அமைந்தது. உலகினரின் அறிவுத் தாகம் தீர்க்கும் அமுத தடாகமாக விளங்கிய அந்தப் பல்கலைக் கழகமே தட்சசிலை. அக் காலத்தில் காசி, காஞ்சி முதலிய இடங்களிலும் பல்கலைக் கழகங்கள் இருந்தன. ஆனால், அவற்றுக்கெல்லாம் தலைமை வகித்தது தட்சசிலைப் பல்கலைக் கழகமே!

பாஞ்சாலி பிறந்த இடம்

பாரதப் பெரும் போருக்கும் பாரதப் பெருமைக்கும் காரணமான பாஞ்சாலி பிறந்த இடம் பாஞ்சாலம்!

கண்ணபிரான் பற்பல திருவிளையாட்டுக்கள் புரிந்ததும் இந்தப் பாஞ்சாலத்தில்தான்!

பஞ்சாபில் இந்துக்கள், முகமதியர், சீக்கியர் என முப்பெரும் பிரிவினர் வாழ்கின்றனர். சீக்கிய சமயத்தின் பிறப்பிடமே பாஞ்சாலந்தான்!

ஐந்து நதிகள்

சட்லஜ், பியாஸ், ரவி, சினாப், ஜீலம் என்னும் ஐந்து நதிகள் பாஞ்சால மண்ணைப் பசுமையாக்கிக் கொண்டுள்ளன. ஐந்து (பஞ்ச) நதிகள் பாய்வதனால், பஞ்சாப் என்பது காரணப் பெயராக அமைந்தது. இந்த ஐந்து நதிகளுக்கும் தாயான சிந்துநதி, இந்த மாநிலத்தின் அருகிலேயே அரவணைத்துச் செல்கின்றது.

எல்லைகள்

பாரதத்தின் வடமேற்கில் உள்ள இந்தப் பஞ்சாபுக்கு இமாலயமும் காசுமீரமும் வடக்கு எல்லை. யமுனைப் பெருநதி கிழக்கு எல்லை. சிந்துப் பிரதேசமும் இராஜ புதனமும் தெற்கு எல்லை. சிந்துநதி மேற்கு எல்லை1.

நாடு துண்டாடப் படுவதற்கு முன்பு இந்த மாநிலத்தின் பரப்பளவு 135773 சதுரமைல். இவற்றுள் ஓர் இலட்சம் சதுரமைல் பிரதேசத்தைப் பிரிட்டிஷார் நேரடியாக ஆண்டனர். மீதிப் பகுதி சுதேச மன்னர்களின் ஆட்சிக்குட்பட்டிருந்தது. 1919இல் மக்கள் தொகை 2,41,87,750 என்று கணக்கிடப்பட்டுள்ளது.

பஞ்சாப் பிரிவினை

1901 ஆம் ஆண்டு பஞ்சாபின் வடமேற்குப் பகுதி தனியே பிரிக்கப்பட்டு, வடமேற்கு எல்லைப்புற மாநிலம் உருவாக்கப்பட்டது.

1911இல் பஞ்சாப் மீண்டும் பிரிவினைக்கு உள்ளானது. அதுவரை இந்தியாவின் தலைநகரம் கல்கத்தா. அந்த ஆண்டு, தலைநகரம் டில்லிக்கு மாற்றப்பட்டது. பஞ்சாப் மாநிலத்தின் சில பகுதிகள் டெல்லியுடன் சேர்க்கப்பட்டு, டெல்லிமாநிலம் உருவானது.

★★★

2 அன்றைய பஞ்சாப்பின் ஆட்சி அமைப்பும் நிலவரமும்

நாம் எடுத்துக்கொண்ட வரலாற்றினை அறிந்துகொள்வதற்கு, அன்றைய பஞ்சாப்பின் ஆட்சி அமைப்பினை ஓரளவு விளக்குவது நலம்.

பஞ்சாப் மாநிலம், ஒரு லெப்டினண்டு கவர்னரின் (துணை நிலை ஆளுநரின்) அதிகாரத்தின் கீழ் இருந்தது. பஞ்சாபுக்குத் தனியான ஒரு சட்ட சபை உண்டு. மக்கள் பிரதிநிதிகளும் அரசு அதிகாரிகளும் பிறரும் அதில் உறுப்பினர்கள்.

ஆளுநருக்கென்று தனியாக நிருவாக சபை இல்லை. அம்பாலா, ஜலந்தர், லாகூர், ராவல்பிண்டி, மூல்டான் என ஐந்து டிவிஷன்களாகப் பஞ்சாப் பிரிக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு டிவிஷனுக்கும் ஒரு கமிஷனர் இருந்தார்.

இந்த ஐந்து டிவிஷன்களிலும் மொத்தம் இருபத்தெட்டு மாவட்டங்கள். மாவட்ட ஆட்சித் தலைவர்கள், டிப்டி கமிஷனர்கள் அல்லது மாவட்ட மாஜிஸ்ரேட்டுகள் என்று அழைக்கப்பட்டனர்.

தலைநகரம்

பஞ்சாப் மாநிலத்தின் தலைநகரம் லாகூர். இங்கேயே ஆளுநர் இருப்பார். அவரின் கோடை வாசத்தலம் சிம்லா.

லாகூர் மிகப் பெரிய நகரம் அப்போது அதன் மக்கள் தொகை இரண்டரை இலட்சம். அது, மிகப் பெரிய இரயில்வே சந்திப்பு. பிஷாவர், கல்கத்தா, கராச்சி, பம்பாய் முதலிய இடங்களுடன் இரயில் பாதைத் தொடர்பு உண்டு. லாகூரிலிருந்து இந்தியத் தலை நகரம் டில்லி 298 கல் தொலைவு.

மக்கள் தொகையில் முகமதியரே பெரும்பாலோர் முகமதியரில் மூன்றில் ஒரு பங்கினரே இந்துக்கள்.

கல்லூரிகளும் இதழ்களும்

பன்னிரண்டு கல்லூரிகளும் பற்பல உயர் பள்ளிகளும் இருந்தன. பஞ்சாப் பல்கலைக் கழகம் லாகூரில்தான் இருந்தது.

ஆங்கிலத் தினசரிகள் இரண்டு லாகூரில் வெளிவந்து கொண்டிருந்தன. ஒன்று பிரிட்டிஷ் ஆட்சியை ஆதரிப்பது. அதன் பெயர், 'சிவில் அண்டு மிலிடெரி கெஜட்' இன்னொன்று 'டிரிபியூன்'. அது இந்திய சுதேசி இயக்கங்களை ஆதரிப்பது. இவை இரண்டும் தவிர, வேறு சில நாட்டு மொழி இதழ்களும் வெளி வந்தன.1

பஞ்சாப்பையும் அதன் தலைநகரையும் ஆட்சி அமைப்பையும் சுருக்கமாக ஒருவாறு அறிந்து கொண்டோம். இனி எடுத்துக் கொண்ட வரலாற்றினுள் நுழைவோம்.

பிரிட்டிஷாரின் இயல்பு

பிரிட்டிஷார் பல நாடுகளை அடிமைப் படுத்தி ஆண்டனர். ஆயினும், குடியாட்சிக் கொள்கையில் அசைக்க முடியாத நம்பிக்கை உடையவர்கள் அவர்கள். முடியாட்சியின்கீழ் வாழ்ந்தாலும், மக்களின் கருத்துணர்ந்து ஆளுதல் வேண்டும் என்பது அவர்களின் குறிக்கோள்.

பிரிட்டிஷாரின் இந்தக் குடியாட்சிக் கொள்கை, உலகிலுள்ள பல நாடுகளுக்கும் வழி காட்டியது.

நாகரிகம் வளருந்தோறும் குடியாட்சிக் கொள்கை, உலகில் மிகமிக வலுப்பெற்று வருவதைக் காணலாம்.

சர்வாதிகார முறையைக் கையாண்ட கெய்சரின் ஜெர்மனி அழிந்தது. ரஷிய ஜார் ஆட்சி கவிழ்ந்தது. ஆஸ்திரியாவின் நிலை தாழ்ந்தது.

சர் மைக்கேல் ஓட்வியர்

இவ்வாறு குடியாட்சிக்கு வழி காட்டிய பிரிட்டிஷ் ஆட்சியின்கீழ், பஞ்சாப்பில் அதிகாரம் பெற்றிருந்தவன் லெப்டினண்ட் கவர்னர் சர் மைக்கேல் பிரான்சிஸ் ஓட்வியர் என்பான். பிரிட்டிஷ் ஆட்சிக்கே பெருங் களங்கம் ஏற்படுத்திவிட்டான் அவன்.

சர் மைக்கேல், இந்தியாவில் முப்பத்து நான்கு ஆண்டுகள் பதவி வகித்தான். அதில் பெரும் பகுதி பஞ்சாப்பில் கழிந்தது.

சிறு பதவியில் அமர்ந்து படிப்படியாக உயர்வு பெற்று, 1913 இல் லெப்டினண்டு கவர்னராக உயர்ந்தான்.

தான் இத்தகையவன் என்பதை வெளியே காட்டிக்கொள்ளும் வாய்ப்பினை, இப் பதவியே அவனுக்கு அளித்தது. இராணுவ பலத்தைக் கொண்டு எதையும் சாதித்து விட முடியும் என்பதில் அசையாத நம்பிக்கை கொண்டவன் அவன்.

அந்த நம்பிக்கையில் விளைந்த அனர்த்தமே, இந்த நூலாக இப்போது உருப்பெறுகின்றது.

கலகங்களின் காரணம்

பஞ்சாப்பில் 1919 ஏப்ரலில் தோன்றிய கிளர்ச்சிகளுக்கும் அதன் காரணமாக எழுந்த அடக்குமுறைகளுக்கும் மகாத்மா காந்தியடிகளின் சாத்துவிக ஒத்துழையாமை இயக்கமே காரணம் என்று சிலர் வாதிடலாம்.

ஆனால், உண்மையான காரணம் அது அல்ல! சர் மைக்கேல் கையாண்ட ஆணவ அதிகார வெறியே முறுகி முதிர்ந்து, பஞ்சாப்பையே எரிமலையாக்கி விட்டது.

அதிகார அடக்கு முறைக்கு அஞ்சி, தங்கள் மனக்குமுறலை வெளிக்காட்டாமல் மக்கள் அடங்கியிருந்தனர்.

> "ஒரு சமூகத்தாரைச் சில காலம் அடக்கியாளலாம். ஆனால் நிரந்தரமாக அடக்கியாள்வது இயலாது. என்றாவது ஒருநாள் மக்களின் வெறுப்பு வெளிப்பட்டு, அதிகாரத் திமிரை அசைத்து ஒழித்துவிடும்"

என்பது ஆபிரகாம் லிங்கனின் அமரவாக்கு.

இந்தப் பொன் மொழி, செயலுக்கு வந்த கதைதான் பஞ்சாப்பின் எழுச்சி.

கிளர்ச்சிக்கு விதை

பஞ்சாப்பின் வெறுப்பை வளர்ப்பதற்குப் பஞ்சாப் ஆட்சியர் எப்படியெல்லாம் செயல்பட்டனர் என்பதை முதலில் தெரிந்து கொள்வது அவசியம். ஏனெனில், அச் செயல்கள்தாம், பஞ்சாப்பின் கிளர்ச்சிகளுக்கெல்லாம் விதை.

நிலவுடைமைச் சட்டம்

1907 இல் பஞ்சாப் சட்ட சபையில் ஒரு புதிய சட்டம் கொண்டு வரப்பட்டது.

'ஓர் உழவன் தனக்குரிய நிலத்தைச் சமயத்துக்காகவோ அறத்துக்காகவோ மாற்றித்தரக் கூடாது' என்பது அச் சட்டத்தின் முக்கிய பகுதி.

மேலும், நில உடைமை சம்பந்தமாகச் சிவில்கோர்ட்டுகளுக்கு உள்ள உரிமைகள் பறிக்கப்பட்டன. கமிஷனர்களின் அதிகாரங்கள் அதிகரிக்கப்பட்டன.

ஏற்கனவே சர்வாதிகாரிகளாகச் செயல்படும் கமிஷனர்கள், மேலும் அதிகாரங்கள் பெறுவதைக் கண்டு மக்கள் அஞ்சினார்கள்.

இந்தச் சட்டத்தைக் கண்டிப்பதற்காக, லாகூரில் ஒரு பெரிய பொதுக் கூட்டம் நடந்தது. பத்திரிகைகளும் கண்டித்து எழுதின.

குடியேற்றச் சட்டம்

அடுத்துக் குடியேற்ற மசோதா கொண்டு வரப்பட்டது.

சினாப், ஜீலம் நதிப் பகுதிகளில் குடியேறியவர்கள், குறித்த இடத்தில் இவ்வளவு மரங்கள் வளர்த்தல் வேண்டும். மரம் வளர்த்தவர்கள் அந்த மரங்களிலிருந்து ஒரு சிறு பல் குச்சியும் எடுத்தலாகாது. அது தண்டனைக் குரிய குற்றம். மூன்று மாதச் சிறை வாழ்வு கிடைக்கும். இப்படிப் பல கட்டுப்பாடுகள், அச் சட்டத்தில் இடம் பெற்றிருந்தன.

மக்கள் இந்த மசோதாவை, ஒருமுகமாக எதிர்த்தார்கள். சட்டசபையில் இருந்த இந்திய உறுப்பினர் மூவரும் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

தண்ணீர் வரி உயர்வு

அடுத்து தண்ணீர் வரியை உயர்த்துவதற் கென்று ஒரு மசோதாவும் கொண்டு வரப்பட்டது. வரி உயர்வு சாதாரணமல்ல. ஒன்றுக்கு மூன்று மடங்கு! அந்த வரி உயர்வு, உழவர்களின் சக்திக்கு அப்பாற்பட்டது.

உழவர்கள் ஒன்று கூடினர். வரி உயர்த்தப்பட்டதால் இனி வாய்க்கால் தண்ணீரைத் தங்கள் நிலங்களுக்கும் பாய்ச்சுவதில்லை என்று முடிவெடுத்தனர். இந்தியா அரசுக்கும் இந்தியா அமைச்சருக்கும் தங்கள் குறையைக் கூறிற முறையிட்டனர். லாகூரில் ஒரு கூட்டம் கூடி இந்த வரி உயர்வைக் கண்டித்து, ஒரு விண்ணப்பம் தயாரித்து அரசுக்கு அனுப்பினர்.

பஞ்சாபி இதழ் வழக்கு

இந்தச் சமயத்தில் மக்களின் வெறுப்புத் தியை விசிறி விடுவதற்கு வேறொரு செயலும் நிகழ்ந்தது.

மக்களின் அன்புக்குப் பாத்திரமாகிய 'பஞ்சாபி என்ற இதழின் மேல் அரசு வழக்குத் தொடுத்தது. அதிகார வர்க்கத்தின் அடக்குமுறைப் போக்கைக் கண்டித்து எழுதியதற்காக, அந்த இதழ் தடையும் செய்யப்பட்டது.

இதை எதிர்த்துச் சில இளைஞர்கள் ஊர்வலமாக சென்றனர். போலீசார் அவர்களைத் தடுத்து நிறுத்தினர்.

வக்கீல்கள் கைது

ராவல் பிண்டியின் பிரபல வக்கீல்களான லாலா ஹன்ஸ்ராஜ், லாலா குருதாஸ்ராம், லாலா ஆமலகராம் ஆகிய மூவரும் காரண மில்லாமல் கைது செய்யப் பட்டனர். முதலில் இவர்களை ஜாமீனில் விடவும் மறுத்தனர். பின்னர், ராவல் பிண்டி மாவட்ட நீதிபதி அவர்களை விடுதலை செய்தார்.

அந்த வக்கீல்கள் காவலில் இருந்தபோது, ராவல் பிண்டி டெப்டி கமிஷனர் அவர்களை மிகவும் இழிவாக நடத்தினார். இதுவும் மக்களின் மனக்கொதிப்பை அதிகப்படுத்தியது.

எரிகிற நெருப்பில் எண்ணெய் வார்க்கும் பணியைச் சிவில் அண்டு மிலிடெரி கெஜட் முதலிய அரசுச் சார்பு இதழ்கள் தொடர்ந்து செய்து வந்தன.

லாலா லஜபதிராயை வெளியேற்றல்

பஞ்சாப் மக்ளின் இதயதெய்வமாக விளங்கியவர் லாலா லஜபதிராய். 'பஞ்சாப்பின் முடிசூடா மன்னர்' என்று அவர் பாராட்டப்பட்டார். இன்னொரு தலைவர் அஜீத்சிங். இந்த இருவரையும் வெளியேற்றி, மக்களின் வெறுப்புக் குறைந்து போகாமல் பார்த்துக் கொண்டனர் ஆட்சியினர்.

இதழ்களுக்குக் கட்டுப்பாடு

நாட்டு மொழி இதழ்களிடமிருந்து, பணயத்தொகை வாங்கப்பட்டது. பெற்ற பணயத் தொகை பறிமுதல் செய்யப்பட்டது. அரசுக்கு விரோதமாக எழுதும் இதழ்கள் அச்சுறுத்தப்பட்டன.

இதழ்களைத் தடுத்து நிறுத்தியதோடு, சர் மைக்கேலின் வெறி தணியவில்லை. வெளி மாநிலங்களிலிருந்து வெளிவருகின்ற நியூஇந்தியா, அமிருத பஜார், இண்டி பெண்டண்ட் முதலிய தேசிய இதழ்கள் பஞ்சாப்பிற்குள் நுழையலாகாது என்றும் தடை விதித்தான்.

மைக்கேலின் கருத்து

"குற்றம் செய்யும் போதேனும் குற்றம் செய்ய முயலும் போதேனும் பிடிபட்ட கிளர்ச்சிக் காரர்களும் இராஜத் துரோகிகளும் விசாரணையின்போது, வக்கீல் வைத்துக் கொள்ள அனுமதிக்கக் கூடாது. தண்டனை கொடுத்தே தீர வேண்டும். அப்பீல் முதலிய முறைகளினால் தண்டனையைத் தாமதப் படுத்துவதும் கூடாது" என்பது சர் மைக்கேலின் கட்டளை.

சில விதி முறைகள்

குற்றவாளிகளை உடனே தண்டிப்பதற்குரிய சில விதிகளையும் அவனே வகுத்தளித்தான்.

1. அரசியல் தொடர்பான குற்றங்களில் விசாரணை முறை வேண்டியதில்லை.
2. அக் குற்றங்களுக்கு அப்பீல் செய்து கொள்ளும் உரிமை தரக் கூடாது.
3. சாதாரணச் சட்டப்படி அல்லாமல், அவசரச் சட்ட மூலமே ஜாமீன் பெறப்படல் வேண்டும்.
4. கிளர்ச்சியாளர்க்குப் புகலிடம் தரும் கிராம அதிகாரிகள் தண்டிக்கப் பெறுதல் வேண்டும். அந்தக் கிராமங்கள் அபராதம் விதிக்கப் பெறுதல் வேண்டும்.

இந்த விதிமுறைகளால், சர் மைக்கேலின் அகம் பாவ அதிகார வெறி எத்தகையது என்பதைத் தெரிந்து கொள்ளலாம்.

திலகருக்குத் தடை

பிரிட்டிஷ் ஆட்சி வகுத்த இந்தியப் பாதுகாப்புச் சட்டப்படி, தனக்குக் கிடைத்த அதிகாரத்தைக் கொண்டு, லோகமான்ய பாலகங்காதரத் திலகரையும் விபின் சந்திர பாலரையும் பஞ்சாபிற்குள் நுழையலாகாது என்று தடை விதித்தான் சர் மைக்கேல்.

நூற்றுக்கணக்கான பஞ்சாப் வாசிகளைக் காரணம் கூறாமல் பாதுகாவலில் வைத்தான்.

மைக்கேலின் ஜம்பம்

இந்தக் காட்டுத் தர்பார் மூலம் தங்கள் கருத்துக்களை ஒருவருக்கு ஒருவர் பரிமாறிக் கொள்ளவும் தங்கள் குறைகளை ஏடு களின் மூலம் வெளியிடவும் மக்களுக்கு உரிமையில்லாமல் போனது.

மனம் திறந்து பேசுவதையும் எழுதுவதையும் தடுத்து விட்ட மைக்கேல், தன் ஆட்சியில் மக்கள் மனமகிழ்வுடன் வாழ்கின்றனர் என்று தம்பட்டமும் அடித்துக் கொண்டான்.

வாய்மொழிக் கட்டளை

இவ்வாறு அவசரச் சட்டத்தைத் தவறாகப் பயன்படுத்திய மைக்கேல், உயர்ந்த பதவியிலுள்ளவர்களையெல்லாம் அழைத்துப் பயமுறுத்தி எச்சரித்து வைத்தான்.

பொதுக் கூட்டங்கள் நடத்த முயன்றால், அதைத் தடுக்க முயன்றான். பொதுக் கூட்டங்களுக்கு இன்னாரைத்தான் அழைத்தல் வேண்டும் என்று வாய்மொழிக் கட்டளையிட்டான் மைக்கேல்.

இந்துக்களும் முகமதியரும் ஒன்றுபடாமலிருப்பதற்கும் அயராது முயற்சி செய்து வந்தான்.

தலைவர்களை இகழ்தல்

தேசியப் பெருந் தலைவர்களாகிய அன்னி பெசன்ட், திலகர் முதலியோரையும் அவர்தம் தேசியப் பணிகளையும் அவன் எள்ளி நகையாடினான்.

படித்தவர் பகை

சர் மைக்கேல் செய்த தவறுகளில் மிகப் பெரியது, படித்த வர்க்கத்தாரைப் பழித்தும் இழித்தும் பேசி, அவர்களின் பகையைத் தேடிக் கொண்டதுதான்!

1917 செப்டம்பர் 13இல் பஞ்சாப் சட்ட சபையில், அதன் உறுப்பினரான மகமது சாபி என்பவர், ஒரு தீர்மானம் கொண்டு வந்தார். 'பஞ்சாப் சட்ட நிர்வாகம் பிற மாநிலங்களின் சட்ட நிர்வாகங்களோடு ஒத்திருத்தல் வேண்டும்' என்பதே அந்தத் தீர்மானம். எவ்வித மறுப்புக்கும் அதில் இடம் இல்லை.

அந்தத் தீர்மானத்தை ஆதரித்துப் பேச எழுந்த மைக்கேல் சந்தர்ப்பத்துக்குப் பொருந்தாத வகையில், படித்த வர்க்கத்தினரைப் பற்றி வசை புராணம் பாடத் தொடங்கிவிட்டான்.

மன்னிப்புக் கேட்டல்

கூட்டத்தில் இருந்த பண்டித மதனமோகன மாளவியா, மைக்கேலின் உளறலைப் பொறுக்க முடியாமல் இடைமறித்துத் தடுத்து நிறுத்தினார். அவ்வாறு அவதூறாகப் பேசியதற்காக, மன்னிப்புக் கேட்டல் வேண்டும் என்றும் வற்புறுத்தினார். இறுதியில் வேறு வழியின்றி, மைக்கேல் மன்னிப்புக் கேட்க நேர்ந்தது.

மன்னிப்புக் கேட்பது, மீண்டும் அதே குற்றம் செய்யாமல் இருப்தபற்கே யாகும். ஆனால் மைக்கேலின் ஆணவம், இந்தச் சாதாரண நடை முறையையே மீறச் செய்தது. மீண்டும் அதே குற்றத்தை - வசை பாடுதலைச் செய்தான். முன்னைவிட அதிகமாகவே குரைத்தான்.

அற்புதமான உருவகம்

"அனேக ஆடுமாடுகள், பிரிட்டிஷ் ஆட்சியாகிய பெருமர நிழலில் படுத்து நிம்மதியாக அசைபோட்டுக்கொண்டுள்ளபோது, ஓர் இலையின் கீழ் ஐந்து ஆறு வெட்டுக்கிளிகள் பேரிரைச்சலிடுவதைக் கண்டு, வெட்டுக்கிளிகள் மட்டுமே அங்கு உள்ளன என்று எண்ணிவிடக் கூடாது"

என்பது படித்த வர்க்கத்தாரை இழிவுபடுத்துவதற்கு அவன் கையாண்ட உருவகம்.

வெட்டுக்கிளிகள் என்று அவன் குறிப்பிட்டது பெசண்டு அம்மையார், திலகர், மாளவியா முதலிய தலைவர்களையேயாகும். ஆடுமாடுகள் என்றது சாதாரண மக்களையே என்பது வெளிப்படை. என்னே மைக்கேலின் அகம்பாவம்!

முதல் உலகப் பெரும் போர்

1914 இல் முதல் உலகப் பெரும்போர் தொடங்கியது. அந்தப் போரில் இந்தியா பிரிட்டிஷாருக்குப் பல வகையிலும் உதவியது. பிரிட்டிஷாருக்கு உதவுவது கடமை எனக் கருதினர் மக்கள். இந்திய இரத்தம் ஐரோப்பிய மண்ணைச் சேறாக்கியது. இந்தியப் பணம் வெள்ளம் எனப் பயன்பட்டது.

இராஜ பக்தி

பிரிட்டிஷ் ஆட்சியின்பால் தாங்கள் கொண்டிருக்கும் இராஜ பக்தியைக் காட்டுவதற்குக் கிடைத்த வாய்ப்பாகவே, அந்தப் போரினை இந்தியர் கருதினர்.

அறத்தைக் காப்பதற்காகவே, பிரிட்டன் போரில் ஈடுபட்டிருப்பதாகப் பிரசாரம் செய்யப்பட்டது. அதே அறத்தில் தனக்கும் எவ்வளவு அக்கறை உண்டு என்பதைக் காட்டிக் கொள்ள, இந்தியா முன்வந்தது.

பஞ்சாப்பின் போர் உதவி

முதல் உலகப் பெரும்போருக்குப் பிற மாநிலங்களைக் காட்டிலும், பஞ்சாப் மாநிலமே அதிகமாக உதவியுள்ளது என்று சர் மைக்கேல் பெருமைப் பட்டுக் கொண்டான்.

போருக்கு ஆள் சேர்ப்பதிலும் பணம் திரட்டுவதிலும் பல தவறான வழிகளை அவன் கையாண்டான். போருக்குப் படையும் பணமும் திரட்டும்போது, இப்போது, இப் பெருஞ் சுமையைப் பஞ்சாப் மாநிலம் தாங்குமா என்று அவன் சிந்தித்துப் பார்க்கவே இல்லை.

இந்தியாவிலிருந்து, ஐரோப்பியப் போர்க் களத்திற்குச் சென்ற படையில் பெரும் பகுதி பஞ்சாபைச் சேர்ந்தது என்பது உண்மை. ஆனால் இந்தப் படை எங்ஙனம் திரண்டது! மக்கள் தாமே மனமுவந்து படையில் சேர்ந்தனரா? தாமே விரும்பிப் போர்நிதி தந்தனரா? என்ற வினாக்களுக்குக் கிடைக்கும் விடைகள், மனத்துக்கு இனிக்ப்பைத் தர மாட்டா!

பஞ்சாப் மட்டும் தந்த போர்நிதி ரூபாய் 3,55,000. இது அக் காலத்து மதிப்பில் மிகமிகப் பெரிய தொகையாகும்.

படை வீரரும் பிற மாநிலங்களைக் காட்டிலும் மிக மிக அதிகம்.

மகமதியர்	1,70,000
சீக்கியர்	90,000
இந்துக்கள்	90,000
கிறிஸ்துவர்	4,000

ஆக மொத்தம் 3,54,000 வீரர்களைப் பஞ்சாப் மாநிலம் போருக்கு உதவியது. இது சர் மைக்கேலே தந்த கணக்கு.

மைக்கேலின் குறிக்கோள்

"எனக்கு இரண்டு லட்சம் பேர் வேண்டும். கூடுமான வரை, படையில் தாமே விரும்பிச் சேருவோரை மட்டும் சேர்த்துக் கொள்ளும் முறை கையாளப்படும்.

"அவசியம் நேருமாயின், கட்டாய இராணுவச் சேவை முறை மூலமும் ஆள்கள் சேர்க்கப்படுவர்"

என்று பிரகடனம் செய்தான் சர் மைக்கேல்.

படைக்கு அதிகமாக ஆள் சேர்த்தல் வேண்டும் என்று சர் மைக்கேல் முனைந்துள்ளமை அறிந்த பிற அதிகாரிகளும், தங்கள் அதிகாரத்தையும் செல்வாக்கையும் தவறாகப் பயன்படுத்தத் தொடங்கி விட்டனர்.

எழுத்தாளரின் கணிப்பு

"படைக்கு ஆள் சேர்க்க முயன்ற அதிகாரிகளின் பழைய தவறுகள் கவனிக்கப்படாமல், சலுகைகள் தரப்பட்டன. படைக்கு ஆள் சேர்ப்பதற்காகப் பாதிரிமார்களின் உதவி நாடப்பட்டது. பஞ்சாப்பிலுள்ள ஆண்களில் பாதிப்பேர், மற்றையவரைப் படையில் சேரும்படி கட்டாயப் படுத்தினர்"

என்பது ஓர் எழுத்தாளரின் கணிப்பு.

கட்டாய ஆள் சேர்ப்பு

படைக்கு ஆள் சேர்ப்பதற்காகப் பலவித முறைகள் கையாளப்பட்டன. இந்தியன் பினல் கோடு 109, 110 விதிகளின்படி, சிலரிடம் நன்னடத்தை ஜாமீன் கேட்டுப் பயமுறுத்தினர். படையில் சேர முன் வராதவர் அனைவரும் நன்னடத்தை இல்லாதவர் என்பது ஆட்சியாளரின் கருத்துப் போலும்!

கிரிமினல் விவகாரத்துறை அறிக்கை

"இந்த ஆண்டு வக்கீல்கள், படைக்கு ஆள் சேர்ப்பதில் அதிகமாக ஈடுபட்டார்கள். இந்தியன் பினல் கோடு 110 ஆம் பிரிவுப்படி நன்னடத்தை ஜாமீன் கட்டுவோரின் தொகை மிகவும் குறைந்து போனதற்குக் காரணம், படைக்கு அதிகமான பேர் சேர்க்கப்பட்டமையே யாகும்"

என்பது பஞ்சாப் மாநிலக் கிரிமினல் விவகாரத் துறையின் அறிக்கையில் கண்ட செய்தி.

ஆல்பிரட் நந்தியின் கருத்து

"சந்தேகிக்கப்பட்ட நபர்களின் நன்னடத்தைக்காக நிர்வாக அதிகாரிகள், கிரிமினல் புரோசீஜர் கோடிலுள்ள பினல் பிரிவுகளைப் பயன்படுத்தத் தொடங்கினர். அந்தப் பிரிவுகளுக்குப் போலீஸ் துறையினர், தங்கள் கருத்துக்கு ஏற்றவாறு பொருள் செய்து கொண்டனர்.

"சேனையில் சேருகின்றாயா? சிறையில் கல் உடைக்கிறாயா?" என்று போலீசார், மக்களைப் பயமுறுத்திப் படையில் சேர்க்கலாயினர். இதனால் குற்ற இயல்பினர் பலர் படையில் சேர்ந்தனர். அதனால், தற்காலிகமான நன்மையும் உண்டானது. மக்கள், குண்டர்களின் தொந்தர வில்லாமல் அமைதியாக வாழ முடிந்தது.

"சிறையில் இருப்போர் படையில் சேர்ந்து கொள்ள விருப்பம் தெரிவித்தால், அவர்களின் தண்டனை நீக்கப்பட்டது"

என்பது ஆல்பிரட் நந்தி என்ற எழுத்தாளர் தந்துள்ள செய்தி.

ஆள் சேர்த்த முறை

படைக்கு ஆள் சேர்த்த முறை பற்றிய பல செய்திகள் ஆதாரத்துடன் இன்னும் பல கிடைக்கின்றன.

கர்நால் மாவட்டம் பாரா என்ற ஊரில் ஆள் சேர்ப்பதற்காக ஓர் அதிகாரி சென்றார். பல இளைஞர்களை வற்புறுத்திப் படையில் சேர்த்தார்.

ஓர் இளைஞனுடைய தந்தை, 'எனக்குள்ள ஒரே மகனைப் படையில் சேர்த்தல் வேண்டா!' என்று மன்றாடினார்.

அதிகாரி செவிசாய்ப்பாரா? செவி சாய்த்தால் அவரது கௌரவம் என்னாவது! அந்த இளைஞன் கட்டாயமாகப் படையில் சேர்க்கப்பட்டுவிட்டான்.

இதனால், ஊரில் சலசலப்பு ஏற்பட்டது. அவனைப் படையில் சேர்த்தது தவறு என்று ஊரார் தகராறு செய்தனர். இந்தியப் பாதுகாப்புச் சட்டப்படி, ஐவர் கைது செய்யப் பட்டனர். தண்டனையும் கிடைத்தது. மாவட்ட நீதிபதி ஹாமில்டன் என்பவரின் வெளிப்படையான தலையீட்டினால், விசாரணையின்றியே தண்டனை விதிக்கப்பட்டது.

பின்னர், அவர்கள் அப்பீல் செய்து விடுதலை பெற்றனர். விடுதலைக்கு உத்தரவிட்ட நீதிபதிகள், கீழ்வருமாறு தீர்ப்பில் குறிப்பிட்டனர்:

"மாவட்ட நீதிபதி அவ்வப்போது செய்து வந்த உத்தரவுகளால் தெரிவது என்னவென்றால், இந்த அப்பீல் தாரர்கள் தங்கள் உற்றார் உறவினரைப் படையில் சேர்த்திருந்தாலும் தாங்களே சேர்ந்திருந்தாலும் தண்டிக்கப்படாமல் இருந்திருப்பர்."

இதனால் தெரிவது, படைக்கு ஆள் சேர்ப்பதோ சேர்வதோ செய்யாமலிருப்பது, தண்டனைக்குரிய குற்றமாக அதிகாரிகள் கருதினர் என்பதே யாகும்.

தாசில்தார் கொலை

ஷாபூர் மாவட்டத்தின் தாசில்தார் சையது நாதிர் உசேன், ஆள் சேர்ப்பதற்குப் பல கொடிய முறைகளைக் கையாண்டான். அதனால் வெறுப்படைந்த சிலர், அவனைக் கொலை செய்துவிட்டனர். கொலை செய்தவர்க்கு மரண தண்டனையும் ஆயுள் தண்டனையும் கிடைத்தன.

"காலம் சென்ற சையது நாதிர் உசேன், மக்களைத் துன்புறுத்தினார் என்று சொல்லப்பட்டது. ஆனால் அவர் ஆள் சேர்த்த முறையானது, கட்டாய இராணுவ சேவையை ஒட்டியதாகவே இருந்தது. அவர் தவறு ஏதும் செய்யவில்லை"

என்று உசேனுக்குப் புகழாரம் சூட்டினான் சர் மைக்கேல். இதன் மூலம் உசேன் கட்டாயப்படுத்தி ஆள் சேர்த்தான் என்பது வெள்ளிடைமலை அன்றோ!

தாசில்தாரின் கொடுமை

அதே தாசில்தார் ஆள்சேர்த்த முறைக்குச் சில சான்றுகளைப் பார்ப்போம்.

அவன் ஏதாவது ஒரு சிற்றூருக்குப் போவான். கிராமத் தலைவரிடமிருந்து, கிராமத்து இளைஞர்களின் பெயர்களைக் கேட்டு எழுதிக் கொள்வான்.

அந்தப் பட்டியல்படி இளைஞர்களை அழைத்து வற்புறுத்திப் படையில் சேர்த்துக் கொள்வான். ஒரு குடும்பத்தில் மூவர் நால்வர் சகோதரர்கள் இருந்தால், ஒருவர் இருவராவது படையில் சேர்தல் வேண்டும் என்று உத்தர விடுவான்.

இதனால், அவன் செல்லும் ஊரிலுள்ள இளைஞர்கள். ஊரைவிட்டே ஓடிப் பதுங்கிக் கொள்வார்கள்.

படையில் சேர்வதற்கு மறுப்பவரை, அவர்கள் வீட்டுப் பெண்களின் கண்ணெதிரே நிருவாணமாக நிறுத்துவான்; முட்கள் நிறைந்த புதர்களில் தள்ளச் செய்வான்.

உறவினர்களைப் படையில் சேரும்படி தூண்டுவதற்காகப் பெண்களைப் பக்கத்து ஊர்களுக்கு அழைத்துச் செல்வான். அவ்வாறு வர மறுக்கும் பெண்களைத் துன்புறுத்துவான்; அவமானப்படுத்துவான்.

படையில் சேர மறுப்பவர்களின் பயிர்களைக் கால் நடைகளை மேயவிட்டு அழித்துவிடுவான். அவர்களுடைய சொத்துக்கள் கொள்ளையிடப்படும்; சேதப்படுத்தப்படும்.

படையில் சேர முன்வராதவர்களிடம் பெருந்தொகை இலஞ்சமாகப் பெறுவான். இவ்வாறு இலஞ்சமாகப் பெற்ற பணம் பதினேழாயிரமாகலாம் என்று ஒரு கணக்குக் கூறுகின்றது. அது அக் காலத்தில் மிகப் பெருந்தொகை அன்றோ!

இந்தத் திருவிளையாடல்களை நடத்திய உசேன், தன் செயல்களுக்காகப் பெருமைப்பட்டுக் கொள்வானாம்.

விலைக்கு ஆள்கள்

வேறு சில இடங்களில் சர் மைக்கேலின் ஆட்சி அதிகாரிகள், விலை கொடுத்தும் ஆள்களை வாங்கியுள்ளனர்.

“தங்கள் எல்லைக்கு உட்பட்ட ஆள்களைப் படையில் சேர்ப்பதற்காக, ஐந்நூறு முதல் ஆயிர ரூபாய் வரை விலை கொடுத்தார்கள்”

என்று அம்பாலா டிவிஷன் கமிஷனர், ஓர் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

சர்தார்கான் வாக்கு

குஜரன் வாலா பகுதியில் மட்டும் படையில் சேர்ந்தவர் 3,888 பேர். இது அந்தப் பகுதி மக்கள் தொகையில் 150க்கு ஒருவர் என்ற வீதமாகும். அவர்கள் எப்படிச் சேர்க்கப்பட்டனர்? அப் பகுதியைச் சேர்ந்த சர்தார்கான் என்பவரிடம் கேட்டு அறிந்து கொள்வோம்.

"வைகாசி மாதம் தாசில்தார் பதேகான் என்பவன் எங்கள் கிராமத்துக்கு வந்தான். மறுநாள் காலை கிராமப் பொதுவிடத்துக்கு அனைவரும் வர வேண்டும் என்று தண்டோரா போடப்பட்டது.

"அது அறுவடைக்காலமானதாலும் படையில் சேர நேருமே என்ற அச்சத்தாலும் மிகச் சிலரே வந்தனர். அதனால் சினம் கொண்ட தாசில்தார், வராதவர்கள் அறுபது எழுபதின்மரைப் பிடித்து வரச் செய்து, அவர்களிடம் அபராதம் வசூல் செய்தான். வசூல் செய்த பணம் ரூபாய் 1600 ஆகும்.

"அதோடு விட்டானா தாசில்தார்? அங்கிருந்து பதினெட்டுக் கல் தொலைவிலுள்ள குஜரன்வாலா தலைமையகத்துக்கு எல்லோரும் வருதல் வேண்டும் என்று கட்டளை யிட்டான். குறித்த தினத்தன்று எல்லோரும் அங்குச் சென்று சேர்ந்தனர். அனைவரும் வரிசையாக நிறுத்தப்பட்டனர்.

"அவர்களிலிருந்து ஏழு இளைஞர்கள் பொறுக்கப்பட்டுப் படையில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். மற்றவர்கள் படைக்கு ஆள் கொண்டு வருதல் வேண்டுமென்று கட்டளையிடப்பட்டு அடிக்கப்பட்டனர்; அவமானப்படுத்த பட்டனர். சிலருக்குச் செருப்படியும் கிடைத்தது. தாடிகள் பிடித்து இழுக்கப்பட்டன.

"உடல்வளைந்து இரு கைகளையும் இரு கால்களுக்கு வெளிப்புறமாகக் கொண்டுவந்து, அதைக் கைகளால் இரு காதுகளையும் பிடித்துக் கொள்ளுமாறு துன்புறுத் தப்பட்டனர்."

செருப்பு அடி

அதே பதேகான், மஜுசாக் என்ற மற்றொரு கிராமத்துக்குச் சென்றான். அனைவரையும் தம் முன்னே வரும்படி ஆணையிட்டான்.

இருபது இருபத்தைந்து பேர் வந்தனர். அலி குகார் என்ற வயோதிகரை அழைத்துப் படைக்கு ஆள் தரும்படி கேட்டான். படைக்கு ஆள் தரத் தமக்குப் பிள்ளைகள் இல்லை என்று அவர் கெஞ்சினார். கெஞ்சியும் அவரை விடவில்லை. பகல் முதல் இரவு ஒன்பது மணிவரை தொடர்ந்து அவர் செருப்பால் அடிக்கப்பட்டார்.

கால்நடைகளின் கண்ணீர்

வேறொரு கிராமத்தில் அதே தாசில்தார் முகாம் செய்தான். தன்னை வந்து காணாதவர்களின் கால் நடைகளைப் பிடித்து வரச் செய்து, அவற்றை வெயிலில் கட்டிப் போடச் செய்தான். அவற்றுக்குத் தீனியோ தண்ணீரோ தரப்படவில்லை. யாரேனும் இரக்கப்பட்டுத் தண்ணீரும் வைக்கோலும் தர முன்வந்தால், அவர்கள் அடிக்கப்பட்டனர்.

கரும்புள்ளி செம்புள்ளி

பின்னர் இருவயோதிகர்களை அழைத்து, அவர்களின் புதல்வர்களைப் படைக்கு அனுப்பும்படி கேட்டான். அவர்கள் மறுத்தனர்.

அந்த இருவரின் தாடிகளையும் ஒன்றாகப் பிணைத்து, நிலத்தில் அடிக்கப்பட்ட ஒரு முளையில் கட்டும்படி செய்தான்.

பகல் பன்னிரண்டு முதல் இரண்டுமணி வரை கடிய வெயிலில் அந்த அப்பாவி வயோதிகரகள் வாடி வதங்கினர்.

இத்துடன் தாசில்தார் மன நிறைவுற்றானா? அவனது இராஜ விசுவாசம் என்னாவது! ‘அந்த வயோதிகர்கள் முகத்தில் கரும்புள்ளி செம்புள்ளிகள் குத்தி, வீடுதோறும் பிச்சை யெடுக்கும்படி செய்!’ என்று போலீசார் வசம் ஒப்படைத்தான்.

கால்நடைகள் வெயிலில் வாடுவதை யறிந்து மனம் தாளாமல், அவற்றின் உரிமையாளர்கள், தாசில்தார் முன்பு ஆஜர் ஆயினர். அவர்களுள் இருபத்தாறு பேர் படையில் சேர்க்கப்பட்டனர்.

மகளிர்க்கு ஆணை

பின்பு சில பெண்களை வரவழைத்து, “நீங்கள் ஒளித்து வைத்துள்ள உங்கள் கணவன்மாரை ஒப்படைத்து விடுங்கள்” என்று கட்டளையிட்டான். ஒப்படைக்காவிட்டால், கிராமத்துப் பெண்களை யெல்லாம் வரவழைத்து அவர்கள் முன்னால் அவமானப்படுத்தப் போவதாக உறுமினான்.

அங்கு எதிர்ப்பட்டவர்களை யெல்லாம் இழிவான சொற்களை வீசி ஏசினான்.

மற்றொரு கிராமத்தில் கால்நடைகள், போலீஸ் பவுண்டில் தீனியும் தண்ணீரும் இன்றிப், பதினைந்து நாள்கள் வைக்கப்பட்டிருந்தன.

பலவித தந்திரங்கள்

மக்கள் தாமாகவே விரும்பிப் படையில் சேர்ந்தனர் என்று, உலகம் நம்புவதற்காகப் பலவித உபாயங்கள் கையாளப்பட்டன.

சிலசமயங்களில் படைக்குச் சேர்க்கப்பட்டவர், தப்பி ஓடிப் போவதும் உண்டு. உடனே போலீசார் அவர்களைத் தேடிப்பிடித்து, ஜாமீன் இல்லாத வழக்குத் தொடுப்பர்.

அவ்வாறு பிடிக்கப்பட்டவர்களைத் திருடன் என்றும் கொள்ளையன் என்றும் மக்கள் எதிரே தூற்றுவார்கள்.

தண்டனைக்குப் பயந்தவர்கள், வேறு வழியின்றிப் படையில் சேர்ந்துவிடுவர்.

படையில் சேர விருப்பமில்லததவர்கள் செல்வர்களாக இருப்பின், நாலாயிரம் ஐயாயிரம் ரூபாய் ஜாமீனாகக் கட்டும்படி வற்புறுத்தப்படுவர். தொகை சிறிது குறைந்தாலும் சிறைவாழ்வு உறுதி.

சிறையா! சேனையா!

சிறையா! சேனையா! இவை இரண்டைத் தவிர வேறு வழியே இல்லை. வன்முறையினால் கைது செய்யப்பட்டவர்களைக் கோர்ட்டுகளில், 'படையில்சேர விருப்பமா?' என்று நீதிபதிகள் கேட்பர். பொதுவாக ஆறுமாதம் மட்டுமே தண்டிப்பதற்கு அதிகாரம் பெற்ற நீதிபதிகள், ஐந்து ஆறு ஆண்டுக் கடுங்காவல் விதிப்பதாகப் பயமுறுத்துவர். தண்டனைக்குப் பயந்தவர், படையில் சேர்ந்தேயாக வேண்டும்.

படையில் சேரப் பரிசு

ஒருவர் தம் சொத்துக்களை அடமானம் செய்து கடன் பெற்றிருப்பார். அந்தப் பணத்தை அரசே கொடுத்து அந்தச் சொத்தை மீட்டுத் தந்து, அவனை படையில் சேர்த்துக் கொள்வது வேறொரு முறை.

படைக்கு ஆள் சேர்த்துத் தந்தவருக்குப் பலவித பரிசுகளும் விருதுகளும் தரப்பட்டன.

பஞ்சாயத்து முறை

பஞ்சாயத்து முறை என ஒன்று ஏற்படுத்தப்பட்டது. கிராமத்க்இருவர் பஞ்சாயத்தாராக நியமிக்கப் பட்டனர். எந்தக்

கிராமமாவது நிர்ணயித்த அளவு ஆள்களைத் தாராவிட்டால், இந்தப் பஞ்சாயத்தார் அங்கு ஆள்களைத் திரட்டித் தரல் வேண்டும்.

கிராமத்தினர் படைக்கு ஆள் கொடுத்தது போக, மேலும் பத்தொன்பதுபேர் தருதல் வேண்டியிருந்தது. எனவே சிலரை விரட்டிப் பிடித்து, அவர்கள் அழுவதையும் பொருட்படுத்தாமல் படையில் சேர்த்தனர். படைக்குச் சேர்க்கப்பட்டவர் தப்பியோடி விடாதபடி, துப்பாக்கி வீரர் காவலுடன் அழைத்துச் செல்லப் பட்டனர்.

இதுகாறும் படைக்கு ஆள் சேர்த்த முறைபற்றிச் சிறிது கண்டோம். இனிப் போர் நிதி வசூலித்த முறை பற்றிக் குறிப்பிடுவோம்.

போர்நிதி பற்றிய சுற்றறிக்கை

மக்களிடம் போர் நிதி வாங்குவதுபற்றிப் பஞ்சாப் அரசு, தன் அலுவலர்களுக்கு, சுற்றறிக்கை அனுப்பியது. அதன் சாரம் வருமாறு:

"ஒவ்வோர் கிராமத்திலிருந்தும் எவ்வளவு பணம் திரட்டல் வேண்டும் என்று, டிப்டி கமிஷனர்கள் நிர்ணயம் செய்வார்கள்.

"அந்தந்த ஊரிலுள்ளாரின் வருமான வரிச் சான்றிதழைக் கொண்டு, அவர்கள் தர வேண்டிய தொகையை நிர்ணயிக்கலாம்.

"ஒருவர் செலுத்தும் வருமான வரியில் பாதியோ கால் பாகமோ போர் நிதியாகப் பெறலாம். அது தவறு அல்ல."

"அதிகமாகப் பணம் கொடுத்தவர்களுக்கு அரசு, விருதுகள் தரப்படும் என்று ஆசை காட்டலாம். அதிக நிதி கொடுத்தவர் அதிகாரிகளைக் காணச் செல்லும்போது, நாற்காலியில் அமர்ந்து பேசும் மரியாதை பெறுவர். சன்மானப் பத்திரங்களும் கிடைக்கும் என்று உறுதி கூறலாம்.

"பணம் படைத்தவர் போர் நிதி தரத் தவறினால், அவர்கள் நகராட்சி உறுப்பினர், கௌரவ நீதிபதிகள் முதலிய பதவிகள் பெறும் தகுதி இழந்துவிடுவர் என்று கூறலாம்."

இந்தச் சுற்றறிக்கை மூலம் தவறான வழியில், சட்ட விரோதமாகவாவது பணம் திரட்டுதல் வேண்டும் என்பதே அரசின் குறிக்கோளாக இருந்தது என்பது புலனாகிறது.

போர் நிதி சேர்க்கும் இடம்

அறமன்றங்கள் போர் நிதி திரட்டும் இடங்களாகச் செயல்பட்டன. போர்நிதி தந்த குற்றவாளிகள் விடுதலை செய்யப்பட்டனர்.

ஆணவப் பேச்சு

ஒருவர் தமக்கு விதிக்கப்பட்ட வருமான வரியைத் தள்ளுபடி செய்தல் வேண்டும் என்று விண்ணப்பம் கொடுத்தார். அதை மறுத்து நீதிபதி கூறிய கருத்து மிக விந்தையானது.

"கோவேறு கழுதைகளால் போரில் அதிகமான நன்மை கிட்டியுள்ளது. இந்த மனிதர், அந்தக் கோவேறு கழுதையைவிடக் கேவலமானவர். ஏனெனில் இவர் போர்நிதிக்காக ஒரு காசும் தரவில்லை. இவருக்கு உள்ள ஒரே மகனையும் படையில் சேர்க்க வில்லை"

என்பதே அந்த நீதிபதி உரையின் சாரம்.

சிலர் முன்பே போர் நிதி கொடுத்திருப்பர். அவர்களிடமே மீண்டும் போர் நிதி கேட்கப்படும். முன்பே கொடுத்துள்ளேனே என்று மறுத்தால், அவர் கட்ட வேண்டிய வருமான வரி, பல மடங்காக உயர்ந்துவிடும்.

தனியதிகாரிகள்

போர்நிதி வாங்குவதற்காகவே, தனியதிகாரிகள் நியமிக்கப்பட்டனர். பயமுறுத்தல் மூலம் பணம் வசூலிப்பது அவர்களின் பணி.

அவர்கள் கேட்கும் தொகை தங்கள் சக்திக்கு அப்பாற்பட்டது என்று சிலர் முறையிடுவர்.

அவ்வாறு முறையிட்டவர்களது வருமானவரி, பல மடங்கு உயர்ந்து விடும். இதன்படி ஒருவர் இருநூறு ரூபாய்க்குப் பதில் மூவாயிரம் ரூபாய் செலுத்த நேர்ந்தது.

> "போர்நிதிக்காகப் போலீசார் எங்களைத் தொந்தரவு செய்தனர். ஆகவே ஐம்பது ரூபாய்க்கான அஞ்சல் நிலையக்கடன் பத்திரம் வாங்கினோம். மறுபடியும் பணம் தருதல் வேண்டும் என்று வற்புறுத்தினர். அவ்வாறு பணம் தராவிட்டால், அவர்கள் தங்கள் கடைகளை விட்டும்

துரத்தப்படுவர் என்றனர். அதற்குப் பயந்து மேலும் பணம் தர நேர்ந்தது"

என்பது ஒருவருடைய அனுபவப் பேச்சு.

சர்தார் சந்த்சிங் பேசுகின்றார்

லையால்பூர் வக்கீல் சர்தார் சந்த்சிங் என்பவர், படைக்கு ஆள் சேர்த்தது பற்றியும் பணம் திரட்டியது பற்றியும் விளக்கமாகக் கூறியுள்ளார். அதையும் சிறிது காண்போம்.

"எங்கள் மாவட்டத்தில், போர்நிதி தரும்படி மக்கள் வற்புறுத்தப்பட்டனர். ஆட்சியாளரிடம் கௌரவப் பட்டம் பெற விரும்பிய சிலர், போர்நிதி வசூலிப்பதில் அக்கறை காட்டினர். ஒரு காணி நிலத்துக்கு ரூபாய் முப்பத்து மூன்று வீதம் கட்டாய வசூல் நடந்தது. ஏழைகள்கூடத் தப்பவில்லை. எல்லோருமே தருதல் வேண்டியிருந்தது.

"அந்த வட்டார அதிகாரிகள் ஏற்படுத்திய இந்தக் கட்டாய விகிதத்தை உள்துறை அதிகாரிகள், ஒருவாறு திருத்தி அமைத்தனர். அதாவது 'வசூலித்த தொகை கடனாகப் பாவித்து, அதற்குரிய வட்டி தரப்படும். அந்த வட்டி, கடன் கொடுத்த தனிநபர்க்குக் கிடைக்காது. அப் பணம் ஊர்ப் பொது நன்மைக்காகச் செலவிடப்படும்' என்பதே அவர்கள் செய்த திருத்தம்.

"உத்தமசிங் என்பவர் போர்நிதி தருவதற்குச் சிறிது தயக்கம் காட்டினார். அதற்காக அவர் தண்டனை அடைந்தார். அவர் பணம் தர ஒப்பிய பிறகே தண்டனை நீங்கியது."

"பின்பு காணிக்கு ரூபாய் முப்பத்து மூன்று என்பதை ரூபாய் பத்து என்று மாற்றியமைத்தனர். அதைத் தராமல் போனால், உத்தம சிங்கைப் போல் தண்டனை அடைய நேரும் என்று அஞ்சி, மக்கள் அத்தொகையைக் கொடுத்து விடலாயினர்.

"மிட்டாதார்கள் படைக்கு ஆள் திரட்டித் தரல் வேண்டும். இல்லை யெனில், அவர்கள் தங்கள் உரிமையை இழக்க நேரிடும் என்று அச்சுறுத்தப்பட்டனர். படைக்கு ஆள்திரட்ட இயலாத சிலரின் உரிமைகளும் பறிக்கப்பட்டன. இதனால் அச்சமுற்ற மிட்டாதார்கள், ஒரு படைவீரனுக்கு ரூபாய் ஐந்நூறு வரை விலை தந்து சேர்க்கலாயினர்.

"இத்தகைய கட்டாய முறைகளால் வெறுப்படைந்த மக்கள், சில ஊர்களில் எதிர்ப்புத் தெரிவித்தனர். அவர்களை அடக்குவதற்குப் போலீஸ் படை அனுப்பப்பட்டது.

"போர்நிதி தராதவர்களைப் பல வழக்குகளில் சிக்க வைத்தனர். கைது செய்யப்பட்டவரை ஜாமீனில்விட மறுத்தனர். படைக்கு ஆள்கள் தருவதாகவோ அல்லது தாமே சேர்வதாகவோ வாக்களித்தால் மட்டுமே, ஜாமீன் கிடைக்கும். தண்டனை அடைந்தவர்கள் படையில் சேர்வதாகக் கூறினால், விடுதலை செய்யப்பட்டனர்."

- இப்படியே தொடர்கின்றது சர்தார் சந்த் சிங்கின் பேச்சு.

வியாபார மண்டிகளில் காவல்

இராணுவச் சட்டம் அமுலுக்கு வந்ததும், வியாபார மண்டிகளில் படை வீரர் காவலுக்கு நிறுத்தப்பட்டனர். அவர்களுக்கு ஆகும் செலவு வியாபாரிகள் தலையிலேயே கட்டப்பட்டது. இராணுவச் சட்டம் விலக்கப்பட்ட பிறகும் வியாபாரிகள் தலைக்கு ஐயாயிரம் தருதல் வேண்டும் என்று உத்தரவிட்டு வசூலிக்கப்பட்டது.

நினைவுச் சின்ன நிதி

போர்நிதி மட்டும்போதாது என்று, சர் மைக்கேலின் நினைவுச் சின்ன நிதி ஒன்றும் சேர்ந்து கொண்டது. சர் மைக்கேலிடம் மக்களுக் கிருந்த அபிமானத்தால், தாமாகவே நிதி தந்தனர் என்று பிரசாரம் செய்யப்பட்டது. அவ்வாறு சேர்க்கப்பட்ட நினைவு நிதிக்கு, ஏதும் கணக்குக் காட்டப்படவில்லை. நினைவுச் சின்னமும் நிறுவப்படவில்லை.

இவ்வாறு பொது மக்களிடம் மட்டுமே, போர் நிதி வசூலிக்கப்பட்டது என்று கருதிவிடல் வேண்டா. அரசு ஊழியர்களும் இக் கொடுமையிலிருந்து தப்பவில்லை.

அரசுப் பணியாளர்கள் தங்கள் சம்பளத்தில் ரூபாய்க்கு அரையணா வீதம், போர் நிதி தர நேர்ந்தது. கடை நிலை ஊழியரையும் விட்டுவிடவில்லை.

ஆட்சியாளரின் இத்தகைய வன்முறைச் செயல்களால் மக்கள் அவதியுற்றாலும், அதனால் நன்மையும் உண்டாகாமற் போகவில்லை. அதுகாறும் ஒற்றுமையுணர்வின்றிச் சிந்திச் சிதறியிருந்த மக்கள், என்றுமில்லாதபடி ஒன்றுபடலாயினர்.

ஆட்சியின் கொடுங்கோன்மையால், அடிமைத் தனத்தில் அடங்கியிருந்த மக்களின் ஆற்றலாகிய எரிமலை வெடிப்பதற்குப் பக்குவ மடைந்து காலம் கருதிக் காத்திருந்தது.

மக்களின் வெறுப்பினை உணர்ந்து கொண்ட சர் மைக்கேல், அவர்களின் உணர்வுகளை அடக்கி விட முயன்றான்.

மக்கள் தலைவர்கள் எதைப் பேசினாலும் அதைக் கண்டு மருட்சி அடைந்தான். எங்குமே ஆட்சிக்கு எதிராக சதி நடப்பதாக ஒருவிதப் பிரமையில் ஆழ்ந்தான்.

இந்தப் பிரமைதான் டாக்டர் சிச்சுலு, சத்தியபாலு ஆகிய தலைவர்களைப் பஞ்சாப்பிலிருந்து வெளியேற்றச் செய்தது; மகாத்மா காந்தியடிகளைப் பஞ்சாப்புக்குள் நுழையலாகாது என்று தடை விதிக்கச் செய்தது.

இச் செயல்களால், ஏற்படும் பின்விளைவுகளை அறிய விடாமல், அகந்தையும் மருட்சியும் பிரமையும் அவன் கண்களை மறைத்து விட்டன.

சர் மைக்கேலின் செயல்கள் சினம் கொண்ட மக்களைப் பொறுமையை இழக்கச் செய்து விட்டன. சினத்தீயை அவிப்பதற்கு வழி வகுக்கும் தலைவர்கள் வெளியேற்றப் பட்டமையால், மக்களின் கொதிப்பு வரம்பு மீறும் நிலையை அடைந்து விட்டது.

வெடி மருந்திலே திரி நன்கு சமைந்தது. அது வெடிப் பதற்கு ஒரு சிறு தீப் பொறிதான் தேவை. அந்தத் தீப் பொறியையும் சர் மைக்கேலே பற்ற வைத்த கதையை இனிக் காண்போம்.

★★★

3 ரௌலட் சட்டம்

விடுதலைக்கு வழிகாட்டிகள்
சமத்துவத்தின் பாதுகாவலர்கள்
சகோதரத்துவத்தின் புரவலர்கள்
குடியாட்சியின் முன்னோடிகள்

என்று பிரிட்டிஷார் தங்களைப் பறை சாற்றிக் கொள்வர்.

முதல் உலகப் போரில் பிரிட்டிஷார் கலந்து கொண்டது கூடத் தன்னலத்தால் அன்று. உலக நன்மைக்காகவே என்று உலகம் பாராட்டியது.

அடக்குமுறைச் சட்டங்கள்

ஆனால் இத்தகைய பெருமைகளை யெல்லாம் கானல் நீர் ஆக்குவது, அவர்களின் அடக்குமுறைச் சட்டங்கள் எனலாம்.

ஒரு நாட்டில் அமைதியை நிலைநாட்டுவதற்குச் சில சட்டங்கள் இன்றியமையாதன. அரசு நீடித்து நிலைப்பதற்காகச் சில அசாதாரணச் சட்டங்கள் கூடத் தேவைப்படலாம்.

ஆனால் பிரிட்டிஷார், தங்கள் ஆட்சியில் அவ்வப்போது பிறப்பித்த சட்டங்கள் தேவையற்றவை; மக்களின் வெறுப்பைத் தூண்டி, அவர்களைச் சீண்டியவை.

வங்காள ஆள் தூக்கிச் சட்டம், இராஜத் துரோகக் கூட்ட அடக்குமுறைச் சட்டம், அச்சுச் சட்டம், இந்தியப் பாதுகாப்புச் சட்டம் முதலியன அத்தகைய சட்டங்கள்.

இந்தச் சட்டங்களால் விளைந்த கொடுமைகள் கணக்கற்றன. புண்பட்ட உள்ளங்கள் எத்தனை! வாழ்விழந்த மக்கள் எண்ணிலர்! உயிர், உடைமைகளை இழந்தவர் அளவிலர்!

தங்கள் ஆட்சியின் வசதிக்காகப் பிரிட்டிஷார், அடிமைப்பட்ட இந்தியாவுக்கு அவ்வப்போது சில சீர்திருத்தங்களை வழங்கினர்.

ஆனால், அந்தச் சீர்திருத்தங்கள் அனைத்தும். ஏதாவது ஓர் அடக்குமுறைச் சட்டத்தின் துணையோடுதான் நாட்டில் பிரவேசம் செய்யும்.

மிண்டோ - மார்லி சீர்திருத்தம் வந்தபோதும் மாண்டேகு - செம்ஸ்போர்டு அறிக்கை வந்தபோதும் அவற்றுடன் அடக்குமுறைச் சட்டங்களும் வந்தமை வரலாறு மறக்க - மறைக்க இயலாது.

போருக்கு உதவி

உலகமுதற்போர்க்காலத்தில், பாரதம் பட்ட துன்பங்கள் கொஞ்சமல். போருக்காக உதவிய படையும் பணமும் ஏராளம். இந்த உதவியைப் பாராட்டிப் பிரிட்டிஷார் பரிசு தாராவிடினும் கவலையில்லை. ஆனால் தண்டனை தரப்பட்டது. ஆம்! 'இந்தியப் பாதுகாப்புச் சட்டம்' என்ற பெயரால் இந்தியர் உள்ளங்கள் வேண்டுமென்றே புண்படுத்தப்பட்டன.

தலைவர்களுக்குச் சிறை

விடுதலை வேட்கையை எழுப்பிய காரணத்துக்காக அன்னிபெசண்ட் அம்மையார், அருண் வாடியா முதலிய தேசியத் தலைவர்கள் சிறைப்படுவதற்கு அந்தப் பாதுகாப்புச் சட்டமே பயன்பட்டது. இத்தகைய கொடுமைப் பேய் தலை விரித்து ஆடிய போது, அதற்கு உதவியாக - அதனிலும் கொடியதாக இன்னொரு சட்டம் கொண்டு வரப்பட்டது.

பிரிட்டிஷாரின் அச்சம்

முதல் உலகப் போரில், இந்தியப் படைவீரர் பல்லாயிரவர் பங்கு கொண்டு படைக்கலப் பயிற்சி பெற்றனர். போர் முடிந்த பிறகு அவர்கள் படையிலிருந்து விடுதலை பெற்று நாடு திரும்பினர்.

இந்தியர் பலர் போர்ப் பயிற்சி பெற்றமையால், எங்கே தம்மை எதிர்க்கப் புறப்பட்டு விடுவரோ என்று பிரிட்டிஷார் அஞ்சி நடுங்கினர்.

"ஊர்ப்புறத்தில் பேதையராய் ஒதுங்கி ஒடுங்கிக் கிடந்தோர்
போர்ப்பயிற்சி பெற்றனரால். பொன்னான பாரதத்தர்
ஆர்ப்பரித்திங் கெழுவர் எனில், ஆபத்துஎன் றேதம்மைக்
காப்பதற்கு வழிதேடிக் கருத்துளைந்தார் வெள்ளையரே"

என்று பிரிட்டிஷாரின் அச்சத்தைக் 'காந்திகாதை' காட்டுகின்றது.

ரௌலட் கமிட்டி

இந்தியாவிலுள்ள அரசியல் நிலையை ஆய்ந்து கூறுவதற்காக 1917 நவம்பர் 10 இல் ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டது.

அந்தக் கமிட்டிக்கு ஜஸ்டிஸ் ரௌலட் என்னும் சட்டமேதை தலைவர். அந்தக் கமிட்டியாரின் ஆய்வின் பயனாக ஓர் அடக்கு முறைச் சட்டம் உருவானது.

ரௌலட் சட்டம்

அந்தச் சட்டம் அக் கமிட்டியின் தலைவர் பெயராலேயே ரௌலட் சட்டம் எனப் பெயர் பெற்றது.

என்று தொலையும் இந்த இந்தியப் பாதுகாப்புச் சட்டம் என்று ஏங்கியபோது, ஒட்டக் கூத்தன் பாட்டுக்கு இரட்டைத் தாழ்ப்பாள் என்பதுபோல, ரௌலட் சட்டமும் வந்து சேர்ந்தது.

'அதிகார வர்க்கத்தாரின் நலன்களையும் பிரிட்டிஷ் வணிகரின் நலன்களையும் பாதுகாப்பதற்காகவே ரௌலட் சட்டம் கொண்டுவரப்பட்டது' என்று வைசிராய் வெளிப்படையாகவே பேசினார்.

இந்தச் சட்டம் பற்றிய மசோதா இந்தியச் சட்ட சபையில் கொண்டு வந்தபோது, இந்திய உறுப்பினர் அனைவரும் ஒருமுகமாக எதிர்த்தனர். அந்த எதிர்ப்பும் பயன்படாதது வியப்பல்ல.

இறுதியாக அந்த மசோதா 1919 மார்ச் 18 இல் சட்டமாகியது.

இருட்டுச் சட்டம்

இரவெல்லாம் கண் விழித்து அவசர அவசரமாக உருவாக்கப்பட்டமையால் 'இருட்டுச் சட்டம்' என்றும் 'கருப்புச் சட்டம்' என்றும் அது அழைக்கப்பட்டது.

பெசண்டு அம்மையாரின் பேச்சு

இந்தச் சட்டம் பற்றிய மக்களின் கருத்து இது என்று அறிவதற்குத் திருமதி பெசண்டு அம்மையார் பம்பாயில் ஆற்றிய உரை ஒன்றே போதுமானது.

"தன் பழைய கொள்கைகளை யெல்லாம் மறந்து விட்டு, ஆழ்ந்த உறக்கத்தில் மூழ்கிவிட்ட இங்கிலாந்தை இப்போது இந்தியா தட்டி எழுப்பக் கூடாதா? அதனை எழுப்பிப் பின்வரும் செய்தியை அறிவிக்கக் கூடாதா?

"ஓ இங்கிலாந்தே! சுதந்திரத்திற்கே முன்னோடியான பெரு நாடே! ஆசியாவிலே நீ மட்டும் சர்வாதிகாரியாக ஆள வேண்டுமா? உன் பழைய துயர வரலாற்றை மறந்து விட்டாயா? விடுதலைக்காக நீ பட்டபாடு உன் நினைவுக்கு வரவில்லையா? உலக இனங்கள் அனைத்துக்கும் மேலாக வாழ்ந்த உன் பழைய கௌரவம் எங்கே! கிளர்ச்சியாளர் எவராயினும், அவர்க்குப் புகலிடம் தந்ததை நீ மறந்து விட்டாயா?

"உங்கள் அரசினைச் சரியாக நடத்துங்கள். அவ்வாறு செய்தால்தான், மக்கள் கிளர்ச்சி செய்ய மாட்டார்கள் என்று உலகுக்கு உபதேசம் செய்ததை நீ மறந்தனையோ? இப்போது உன் நிலை என்ன? எந்தக் கொடுமைகளை எதிர்த்து நீ போரிட்டாயோ, அவற்றையே நீ பின்பற்றத் தொடங்கி விட்டாயே!

"தீமை கண்டு பொங்கி, யாரை வெறுத்தாயோ, அவர்கள் உன் செயல் கண்டு உன்னைச் சிரிக்க மாட்டார்களா? உன் பழைய செயல்களை நினைவு படுத்திக் கொள்!

"உன் பழைய நற்செயல்களை மாற்றிக்கொள்ள விரும்பினால் - விடுதலை பெற உழைத்ததை மறந்து, நீயே அடிமைப்படுத்த விரும்பினால் - உன் பழைய வரலாற்றைப் புதைத்துவிடு!

"உன் பழைய செயல்களையும் கொள்கைகளையும் மறந்து விடுவாய் எனின், அவை எதிர்காலத்தில் உனக்கு அவமானம் உண்டாக்காதா?

"நீ ரௌலட் சட்டம் போன்ற கொடிய சட்டங்களைக் கொண்டு வருவதானால், முதலில் உன்னிடத்தில் பிறந்த சான்றோரின் சவக்குழிகளை அழித்துவிடு!

"பிரௌனிங், ஸ்வின்பர்ன் முதலியோர் எழுதிய நூல்களை எரித்துவிடு! சிட்னி ஸ்மித், பெயின், பர்க், பிரைடு முதலிய தேசபக்தர்களின் நூல்களைக் கிழித்து விடு! அந்தப் பெரு நூல்களை அழிக்க மனம் இல்லையானால், இந்தச் சட்டத்தைக் கிழித்து எறிந்து விடு!"

இலக்கியச் சுவையுடன் இந்தியரின் உள்ளக் குமுறலை வெளியிடும் பெசண்டு அம்மையாரின் உரை, ஒவ்வோர் இந்தியனின் இதயக் குமுறலையும் பிரதிபலித்தது.

வெறுப்பு என்ற எரிமலை

ஏற்கனவே சொல்லியபடி, பிரிட்டிஷ் ஆட்சி மீது வெறுப்பு என்ற எரிமலை காலம் கருதிக் காத்திருந்தது. அந்தக் காலத்தை அழைத்து வந்தது ரௌலட் சட்டம்.

இந்தியா எங்கும் பெருங் கிளர்ச்சி மூண்டது. தேசியவாதி-மிதவாதி என்ற வேற்றுமை மறைந்தது. இந்து-முகமதியரிடை ஒற்றுமை மலர்ந்தது. அனைவரும் ரௌலட்சட்ட எதிர்ப்பில் ஈடுபட்டனர். இவ்வாறு நாடு ஒன்று திரள்வதற்கு ரௌலட் சட்டம் உதவியது.

இதுகாறும் பிரிட்டிஷ் அரசைக் கண்மூடி ஆதரித்து வந்த இந்தியச் சட்டசபையின் இந்திய உறுப்பினர்களும் இதை எதிர்த்தனர்.

இவர்கள் இதுவரை எந்தச் சட்டத்தையும் எதிர்த்து நின்றதில்லை.

இத்தனை எதிர்ப்பையும் அரசு பொருட்படுத்த வில்லை. ரௌலட் சட்டத்தை அமுல் செய்தே தீருவது என்று முடிவு செய்தது.

மகாத்மாவின் எதிர்ப்பு

இந்திய இனத்தையே நசுக்குவதற்கு எழுந்த ரௌலட் சட்டத்தை மகாத்மா காந்தியடிகள், சத்தியம், அகிம்மை என்ற படைகளுடன் எதிர்க்கப் புறப்பட்டார்.

சத்தியாக்கிரகம்

சாத்துவிக ஒத்துழையாமை ஒன்றினாலேயே இந்தச் சட்டத்தை ஒழித்துவிடலாம். சத்தியாக்கிரகப் போரை நீடித்துக் கைக்கொண்டால், இந்தியா விரைவில் முன்னேறும் என்று அடிகள் நம்பினார்.

மகாத்மாவின் அறைகூவல்

தென்னாப்பிரிக்காவில் வெற்றி கண்ட சத்தியாக்கிரகப் படைக்கலத்தை, இந்தியாவில் கையாள்வதற்குரிய தருணம் அதுதான் என்று மகாத்மா கருதினார். உடனே பின் வரும் அறிக்கையை நாட்டுக்கு விடுத்தார்.

"இந்திய வரலாற்றில் சத்தியாக்கிரகம் முக்கியமானது. இது நன்கு சிந்தித்துச் செய்த முடிவாகும். அரசினர்

நிலைமையையும் நான் நன்கு சிந்தித்தேன். அவர்கள் இந்தச் சட்டத்தைக் கொண்டு வருவதற்கு நியாயம் இருப்பதாகத் தெரியவில்லை.

"ரௌலட் கமிட்டியாரின் அறிக்கையை வாசித்தேன். அதற்கு எதிரான கருத்துக்கே வர நேர்கின்றது.

"அராஜகக் கும்பல் சில பகுதிகளில் உள்ளன என்றும் அதில் ஈடுபடுவோர் சிறு தொகையினரே என்றும் ரௌலட் ஆய்வு அறிக்கை கூறுகின்றது.

"இத்தகைய அராஜகக் கும்பலால், உண்மையாகவே நாட்டுக்கு அபாயம் வரும் என்று நான் உணர்கிறேன். ஆனால் ரௌலட்மசோதா இந்தியா முழுவதுக்கும் அமுலுக்கு வரக்கூடியதாக, அளவுக்கு மீறிய அதிகாரங்களை ஆட்சிக்குத் தருவதாக இருப்பதால் இந்தியாவுக்குப் பெருந் தீமையே ஏற்படும்.

"ரௌலட் கமிட்டியார், பிறரைக் காட்டிலும் இந்தியர்கள் பொறுமையுடையவர்கள் என்பதை அடியோடு அலட்சியம் செய்து விட்டனர்.

"இந்தச் சட்டம் கொண்டு வந்தபோது, ஐ.சி.எஸ். அதிகாரிகளுக்கும் பிரிட்டிஷ் வணிகர்க்கும் சில உறுதி மொழிகளை வைசிராய் தந்தார். வைசிராயின் அந்த உறுதி மொழிகள் மக்களுக்குப் பெரிய ஏமாற்றத்தையே விளைவித்தன. அவரின் பேச்சும் நோக்கமும் எனக்கு நன்கு விளங்கவில்லை.

"இந்தியர்களின் நலன்களைக் காட்டிலும், அதிகாரிகளின், பிரிட்டிஷ் வணிகரின் நலன்கள் உயர்வாக மதிக்கப்படும் என்று கூறினால், இந்தியர்கள் அதை ஒப்புக் கொள்ள முடியுமா?

"சீர்திருத்தம் கிடைத்தாலும், கிடைக்காவிட்டாலும் பிரிட்டிஷாரின் உண்மையான மனப் போக்கைத் தெரிந்து கொள்ள நல்ல வாய்ப்பு இந்தச் சட்டத்தின் மூலம் கிடைத்துள்ளது.

"அதிகார வர்க்கத்தினர் அறங்காவலர்களாகவும் பொதுநலத் தொண்டர்களாகவும் சொல்லில் மட்டும் அல்ல, செயலிலும் இருத்தல் வேண்டும்.

"பிரிட்டிஷ் வணிகர்களும் இந்தியாவின் வளர்ச்சிக்கு உதவியாக இருக்கலாம். இந்தியாவில் தொன்று தொட்டு இருந்துவரும் கலைகளையும் வணிகத்தையும் கைத் தொழில்களையும் அழித்துவிடக் கூடாது.

"இந்தச் சட்டம் கொண்டுவரப் படுவதன் மூலம், அரசின் அமைப்பு முழுவதும் ஊழல் மயமாக உள்ள தென்றும் அதை அடியோடு மாற்றியே தீருதல் வேண்டும் என்றும் தெளிவாகப் புலப்படுகின்றது.

"இந்தச் சட்டத்தால் அரசின்மீது வெறுப்பும் பகைமையும் அதிகமாகுமே அன்றி, வேறு பயன் ஏதும் இல்லை.

"சத்தியாக்கிரகத்தை ஆயுதமாகக் கொண்டவர்கள் அனைத்துத் துன்பங்களையும் அனுபவிக்கத் தயாராகவே உள்ளனர்.

"சத்தியாக்கிரகத்தின் தனிச் சிறப்பு என்ன வென்றால், யாருக்கு எதிராகப் போராடுகின்றார்களோ, அவர்களுக்கும் நன்மையையே விரும்புவதாகும்.

"சத்தியாக்கிரகத்தைக் கையாள்வதற்குரிய தருணம் வந்துவிட்டதா? எதிர்ப்பைக் காட்ட வேறு முறைகள் இல்லையா என்று கேட்கலாம். காலம் இது தவிர வேறு இல்லை. வேறு முறைகள் கையாளப்பட்டுப் பயன் காண இயலவில்லை என்பதே அதற்கு விடையாகும்."

மகாத்மாவின் இந்த அறைகூவலை ஏற்று, நாடே ஒன்று திரண்டது. சத்தியாக்கிரகம் என்ற ஆயுதத்தை இந்தியாவில் முதன்முதலாகப் பயன்படுத்துவது என்று முடிவு எடுக்கப்பட்டது.

சத்தியாக்கிரகம் என்பது என்ன?

சத்தியாக்கிரகம் என்பது என்ன? உண்மையைக் கடைப்பிடித்தல் என்றும் ஆன்மிக சக்தி என்றும் பலவாறு அதற்குப் பொருள் கூறப்படும்.

உறுதி மொழி

சத்தியாக்கிரகப் போரில் ஈடுபடுவோர்கள் ஓர் உறுதி மொழி எடுத்துக் கொண்டனர்.

"இந்த ரௌலட் சட்டம் அநியாயமானது என்றும் உரிமைக்கும் அறத்துக்கும் விரோதமானது என்றும்

நம்புகின்றோம். ஆதலால் இந்தச் சட்டத்தையும் இது போன்ற சட்டங்களையும் சாத்விக முறையில் மீறுவோம்.

"இந்த அறப்போரில் நாங்கள் உண்மையையே கடைப் பிடிப்போம். உயிர்களுக்கும் பொருள்களுக்கும் எவ்விதச் சேதமும் விளைவிக்க மாட்டோம்"

என்பதே அந்த உறுதிமொழி.

"சத்தியமே உறுதியுடன் தளராமல் கடைப்பி பிடிப்போம்,
செத்திடினும் தீமைக்குத் தீமைசெய்ய எண்ணுகிலோம்.
உத்துணையும் உயிர் உடைமைக்கு இனிச்சேதம் விளைக்கிலம் என்று
அத்தர்உரைப் படிசூள ஒன்று ஆரியத்தார் ஏற்றெழுந்தார்"

என்று அந்த உறுதிமொழியைக் 'காந்தி காதை' கவியாக்கித் தருகின்றது.

ரௌலட் சட்டத்தின் கொடுமை

இவ்வாறு நாடே திரண்டு எதிர்க்கும்படி அந்த ரௌலட் சட்டத்தில் என்னதான் உள்ளது! காந்திகாதையில் சில வரிகளில் இதற்கு விடை உள்ளது.

"ஏடுகளில் அரசியலை எழுதுவதைத் தடுத்திடலாம்.
மேடைகளில் அரசியலை விளக்குவதை மறுத்திடலாம்.
கூடுவதும் உரிமைகளைக் கோருவரும் தகாது எனலாம்.
கேடுதரும் இவ்விதிபோல் கேட்டதில்லை வரலாற்றில்."

"காரணமே இல்லாமல் கடுஞ்சிறையில் அடைத்திடலாம்.
யார் எனினும் கேள்விமுறை இல்லாமல் ஒறுத்திடலாம்.
ஊரினைவிட் டோட்டிடலாம். உடைமைகளைப் பறித்திடலாம்.
பாரதம்செய் உதவிக்குப் பரிசிதுகாண் எனவிதித்தார்.

"வீதிகளில் கட்டிவைத்து வெய்யபிரம் படிதரலாம்.
சாதுகைமாந் தரைத்தடியால் தாக்கிடலாம். தூக்கு இடலாம்.
மாதர்கள் மேல் மதலையர்மேல் வன்குண்டு பாய்ச்சிடலாம்.
ஏதுஇதுபோல் பெருங்கொடுமை இன்னொன்று காட்டுதற்கே."

சத்தியாக்கிரகப் போரின் தொடக்கம்

மேலே கண்ட உறுதிமொழியில் பல்லாயிரவர் கையெழுத் திட்டனர்.

சத்தியாக்கிரகப் போரினை முதன் முதலாகக் காந்தியடிகளே தொடங்கி வைத்தார்.

அரசின் அனுமதி பெறாமல், 'சத்தியாக்கிரகம்' என்ற இதழ் ஒன்றை வெளியிட்டார். அரசுக்கு விரோதமான பல துண்டுப் பிரசுரங்களும் வெளியிட்டார்.

சென்னையின் முதன்மை

எதற்கும் முன்னோடியாக விளங்கும் சென்னை மாநிலம் இந்தப் போரிலும் தன் முதன்மையைத் தக்க வைத்துக் கொண்டது. ஜார்ஜ் ஜோசப், டி.வி.வேங்கட ராமய்யர், கோண்டா வேங்கட சுப்பைய பந்துலு, எஸ். கஸ்தூரி ரங்க ஐயங்கார் ஆகியோர், அரசின் அனுமதி பெறாமல் **'சத்தியாக்கிரகி'** என்னும் வார இதழைத் தமிழ், ஆங்கிலம், தெலுங்கு ஆகிய மும் மொழிகளிலும் வெளியிட்டனர்[1].

தேசியத் தலைவர்கள் எழுதிய பல நூல்களை அரசு முன்பே தடை விதித்திருந்தது. அந்த நூல்கள் எல்லாம் மறு பதிப்புப் பெற்றுத் தடையைப் பொருட்படுத்தாமல் தெருக்கள்தோறும் விற்கப்பட்டன.

ஆண்டவன் கட்டளை

1919 ஏப்ரல் 6 இல் நாடெங்கும் வேலை நிறுத்தம் அனுசரிக்க வேண்டுமென்று ஆண்டவன் கட்டளையிட்டதாக அடிகள் உணர்ந்தார். அந்தக் கட்டளையை அப்படியே மக்களுக்கு அறிவித்தார். ஒவ்வொரு கிராமமும் சத்தியாக்கிரகப் போரில் ஈடுபட்டது.

"பணிமனைகள் திறக்கவில்லை பணமனைகள் இயங்கவில்லை
வணிகம் முதலான பல வண்தொழில்கள் நடக்கவில்லை
துணி முதல் ஆலைகள் யாவும் தூங்கிவழிந் தமையாலே
அணிநகர்கள் உயிர் இழந்தஆம் என்னத் தோன்றியதே!"

"மறுகினில்பே ருந்துமுதல் வாகனங்கள் ஓடவில்லை
துறைமுகத்தில் வங்கங்கள் தோணிகள்ஒன் றசையவில்லை.
உதவியுற்று நாடெல்லாம் ஒருங்கிணைந்து நின்றமையால்
அறவழிப்போர் புதியதொன்றை அகிலம் எதிர் கண்டதுவே!"

---

1. இது அச்சிடப்படாமல் கையெழுத்துப் பிரதியாகவே பல பிரதிகள் தயார் செய்யப்பட்டு வெளிவந்தது என்று தெரிகின்றது

"சத்தியமாம் வழியினிலே தன்னம்பிக் கைச் சுடரை
உத்தமர்தாம் பாரதத்தின் உள்ளத்தில் ஏற்றியதால்
கொத் தடிமை பறந்தோடக் குனிந்துடலம் கூனியவர்
புத்துணர்வும் புதுத் தெம்பும் புத்தொளியும் பெற்றனரால்"

இது காந்தி காதை காட்டும் வேலை நிறுத்தச் சித்திரம்.

பஞ்சாப்பில் எதிரொலி

நாடு முழுவதும் எழுந்த சத்தியாக்கிரகத்தின் எதிரொலி பஞ்சாப்பில் எப்படியிருந்தது என்பதை இனிக் கவனிப்போம்.

நாடெங்கும் ஏப்ரல் 6இல் தொடங்கிய அறப்போர் பஞ்சாப்பில் முன் கூட்டியே மார்ச் 31 அன்றே தொடங்கி விட்டது எனலாம்.

இந்து, முகமதியர், சீக்கியர் அனைவரும் ஒன்றுபட்டு போரில் ஈடுபட்டனர்.

சத்தியாக்கிரகத்தன்று வேலை நிறுத்தம் செய்து, கடைகளை அடைத்து, உண்ணாவிரதமிருந்து கடவுள் வழிபாடு செய்தனர்.

மாலையில் பொதுக் கூட்டங்கள் பல ஊர்களில் நடந்தன. ரௌலட் சட்டத்தின் கொடுமைகளை விளக்கித் தலைவர்கள் பேசினர்.

மைக்கேலின் மருட்சி

அமைதியாக நடைபெற்ற அந்த அறப்போரைக் கண்டு அதிகாரிகள் அஞ்சினர்; வெறுப்படைந்தனர்.

மக்களின் உறுதியும் இந்து முகமதியர் ஒற்றுமையும் சர் மைக்கேலுக்கு ஆத்திரத்தை மூட்டின.

ரௌலட் சட்டத்தை எதிர்த்து நடைபெறும் கிளர்ச்சி இது என்பதை மறந்து, பிரிட்டிஷ் ஆட்சியையே அப் புறப்படுத்த நடக்கும் சூழ்ச்சி என்று சர் மைக்கேல் மருண்டான்.

இது பிரிட்டிஷ் அரசர் பெருமான் மீது தொடுக்கப்பட்ட போர் என்று பிரகடனப்படுத்தினான்.

மகாத்மாவுக்குத் தடை

'சூழ்ச்சிக்காரருள் ஒருவர்' என்று, மகாத்மா என்ற சூரியனைக் கண்டு குரைத்தான். பஞ்சாப்பில் நுழையக் கூடாது என்று மகாத்மாவுக்குத் தடை விதித்தான்.

தலைவர்கள் வெளியேற்றம்

பொது மக்களின் அன்புக்குரிய டாக்டர் கிச்சுலு, டாக்டர் சத்தியபாலு ஆகியோரைப் பஞ்சாப்பிலிருந்து ளியேற்றினான்.

ஆன்ம சக்திக்கும் உயர்ந்த சக்தி

ரெய்சாதா பகத்ராம் என்பவர் ஒரு வக்கீல். அவர் சர் மைக்கேலைச் சந்தித்தார்.

"சத்தியாக்கிரகப்போர் எதனால் ஏற்பட்டது?" என்று வினவினான் மைக்கேல்.

"மகாத்மாவின் ஆன்ம சக்தியினால் ஏற்பட்டது" - இது பகத்ராமின் விடை.

மைக்கேலுக்குச் சினம் மூண்டது. தம் கையைத் தூக்கிக் காட்டி, "பகத்ராம்! நினைவிருக்கட்டும்! உங்கள் காந்தியின் ஆன்ம சக்தியைவிட வேறு ஓர் உயர்ந்த சக்தி உண்டு" என்று மார்தட்டிக் கொண்டான். இதனால் அந்த எழுச்சியை வன்முறையால் அடக்கி விடலாம் என்று சர் மைக்கேல் கொண்டிருந்த உறுதி புலனாகின்றது அன்றோ!

கவர்னர் மைக்கேலின் வழியிலே அதிகாரிகளும் நடந்து கொண்டனர். அடக்கு முறைகள் மனம்போலப் பயன்படுத்தப் பட்டன.

ஆமில்டனின் அடக்குமுறை

ஜலந்தர் மாவட்ட டிப்டி கமிஷனர் ஆமில்டன் மிக மிகக் கடுமையாகச் செயல்பட்டான்.

அரசியல் கிளர்ச்சியாளர்களின் ஆதரவாளர்கள் என்று கருதிய சிலரை மிகத் துன்புறுத்தினான். சில வணிகர்களின் உரிமங்கள் பறிக்கப்பட்டன. வருமானவரி பல மடங்காக உயர்த்தப்பட்டது.

பஞ்சாப் முழுவதும் அதிகாரிகள் கையாண்ட அடக்கு முறைக்குப் பதச்சோறு இது.

இனி பஞ்சாப்புக்குள் ஒவ்வொரு பகுதியாகச் சென்று, ஆங்காங்கே நடைபெற்ற சத்தியாக்கிரகப் போரையும் அதிகாரிகள் கையாண்ட அடக்குமுறைகளையும் நேரில் தரிசிப்போம்.

★★★

4 அமிருத சரசு

முதலில் அமிருத சரசுக்குப் போவோம். ஏனெனில், பஞ்சாப் அரசு, அமிருத சரசின் எழுச்சி கண்டே பயந்து நடுங்கியது. அதுமட்டும் அல்ல! இராணுவச் சட்டப் பேய் கோர நர்த்தனம் ஆடிய இடமும் அதுவே கிளர்ச்சியில் அமரரானவரின் தொகை இங்குத்தான் அதிகம்.

உலகையே நடுங்க வைத்த இடம்

இதற்கெல்லாம் மேலாக ஜெனரல் டையர் என்ற போரக்கன் தன் வீரத்தை (பேடித்தனத்தை)க் காட்டி உலகையே நடுங்க வைத்த இடம் அமிருதசரசுதான்.

அரசின் அறிக்கை

பொற்கோயிலினால் சிறப்புப் பெற்ற அமிருத சரசில் ஏற்பட்ட குழப்பங்களுக்குக் காரணம் கற்பித்து, பஞ்சாப், அரசே ஓர் அறிக்கை வெளியிட்டது.

"போரின் காரணமாகத் துணி வணிகர்கள் பாதிக்கப் பட்டார்கள். படைவீரர்களின் வசதிக்காக இரயில்கள் கட்டுப்படுத்தப் பட்டமையால், துணி வியாபாரம் பெரிதும் வீழ்ச்சி யடைந்தது. அதனால் விலைகள் உயர்ந்தன.

"போருக்கு உணவுப் பொருள்கள் பெறும் பொருட்டுப் பஞ்சாப்பிலிருந்து தானியங்கள் வெளியேறலாகாது என்று தடைவிதித்து, பொதுமக்களிடமிருந்து அரசே தானியங்களை வாங்கியது. இதனால் அமிருத சரசிலுள்ள வணிகருக்குப் பாதிப்பு நேர்ந்தது.

"வருமானவரி வசூலிப்பதற்காக, வணிகர்களின் வருமானக் கணக்குகள் நுணுக்கமாகப் பரிசீலனை செய்யப்பட்டன. அதனால் வணிகருக்கு அரசினிடத்து வெறுப்பு ஏற்பட்டது.

"அமிருத சரசில் காஷ்மீரத்து முகமதியர் பலர் உள்ளனர். அவர்கள் கிலாபத் இயக்கம் பற்றியும் மகமதியரின் புனித இடங்களைப் பாதுகாப்பது பற்றியும் பேசி, அமிருத சரசிலுள்ள முகமதியரின் உணர்ச்சிகளைத் தூண்டி விட்டனர்.

"அமிருத சரசில் 1919 ஜனவரியில் நகராட்சித் தேர்தல் நடந்தது. உறுப்பினர் பதவிக்குப் போட்டியிட்ட சிலர், கீழ் மக்களில் சிலரைத் தம் கைவசப்படுத்திக் கொண்டனர். அந்தக் கீழ்மக்களில் சிலரே குழப்பங்களில் பெரும்பங்கு கொண்டனர்.

நாடு தழுவிய போராட்டத்துக்குச் சில கீழ் மக்களே காரணம் என்று பஞ்சாப் அரசு கூறுவது நகைப்புக்கிடமானது. கிளர்ச்சிக்கு உண்மையான காரணம் வெளிப்படையாகத் தெரியும்போது, அதை மறைத்து, வேறு ஏதோ காரணம் காட்டுவது அரசின் அகம்பாவத்தையே காட்டுகின்றது.

துருக்கி சுல்தானின் பதவிநீக்கம் - கிலாபத் இயக்கம்

உலகப் பெரும்போர் முடிந்தவுடனே வெற்றி பெற்ற பிரிட்டிஷார், ஜெர்மனிக்கு உதவி செய்ததற்காகத் துருக்கி சுல்தானைப் பதவி நீக்கம் செய்தனர். அந்தச் சுல்தான் துருக்கி அரசர் மட்டும் அல்லர். உலகனைத்திலும் உள்ள முகமதியர் அனைவர்க்கும் ஆன்மீகத் தலைவராகக் கருதப் பட்டவர். ஆதலால் பிரிட்டிஷாரின் செயல், உலக முகமதியரிடையே பேரதிர்ச்சியை எழுவித்தது. அதன் எதிரொலி இந்தியாவிலும் எழுந்தது. பிரிட்டிஷாரின் செயலை எதிர்க்கும் இயக்கம், 'கிலாபத் இயக்கம்' எனப்பட்டது.

ரௌலட் சட்ட எதிர்ப்புப் போர்

பிரிட்டிஷாரின் முகமதிய விரோதச் செயலால், பஞ்சாப் முகமதியரும் பொருமிக் கொண்டிருந்தனர். ரௌலட் சட்டம் அந்தப் பொருமலை அதிகப்படுத்தியது. பஞ்சாப் மக்கள் ரௌலட் சட்டத்தை எதிர்த்துக் கூட்டங்கள் நடத்தினர். அடக்கு முறையை எதிர்க்கக் கிடைத்த ஒப்பற்ற ஒரே ஆயுதமான சத்தியாக்கிரகத்தை மனமுவந்து ஆதரித்தனர்.

கிச்சுலு - சத்தியபாலு

பஞ்சாப் அரசு, டாக்டர் கிச்சுலு, டாக்டர் சத்திய பாலு ஆகிய இரு தலைவர்கள் மேலும் எப்போதும் ஒரு கண் வைத்திருந்தது.

அரசாங்கத் தவறுகளை அஞ்சாமல் சுட்டிக் காட்டி, வெளிப்படையாகக் கண்டிக்கும் ஆற்றல் பெற்றவர்கள் அவர்கள்.

சத்திய பாலு

டாக்டர் சத்தியபாலு ஓர் இந்து. காத்ரி இனத்தினர். பஞ்சாப் பல்கலைக் கழகத்தில் எம்.ஏ., எம்.பி., பட்டம் பெற்றவர். இவர், முதல் உலகப் போர்க் காலத்தில் இந்திய மருத்துவப் பணியில் சேர்ந்தார். இராணுவத்தில் லெப்டினெண்டு பதவி வகித்தார். ஏனெனில் ஓர் ஆண்டு வரை மருத்துவப் பணி செய்தார்.

இவ்வாறு போர்ப்பணி மூலம் பிரிட்டிஷாருக்கு உதவிய அவரை, அரசு பாராட்டியிருத்தல் வேண்டும். மாறாக அவரது நேர்மை கண்டு அஞ்சியது. அவருக்குப் பல துன்பங்களைத் தந்து கொண்டே யிருந்தது.

கிச்சுலு

டாக்டர் சைபுதீன் கிச்சுலு ஒரு மகமதியர். அலிகார் பல்கலைக் கழகத்தில் படித்தவர். கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் பி.ஏ. பட்டம் பெற்றவர். பாரிஸ்டர் தேர்வில் வென்றவர். பிஎச்.டி. பட்டமும் அவர் பெற்றார்.

முதலில் இங்கிலாந்திலும் ராவல்பிண்டியிலும் பாரிஸ்டராகப் பணியாற்றினார். பின்பு அமிருதசரசில் அவர் பணி தொடர்ந்தது. 1916 முதல் இந்திய அரசியலில் அதிகமாக ஈடுபடலானார். காங்கிரஸ் மகாநாடுகளுக்குத் தவறாமல் சென்று வருவார். இந்து முகமதியர் ஒற்றுமைக்காகப் பாடுபட்டு வந்தார்.

இரட்டையர்

டாக்டர் சத்தியபாலுவும் டாக்டர் கிச்சுலுவும் சொந்தச் சகோதரர்கள் போல, இரட்டையராக இணை பிரியாமல் பொதுத் தொண்டில் ஈடுபட்டு வந்தனர்.

ரௌலட் சட்ட எதிர்ப்புக் கிளர்ச்சியில் இவர்கள் செல்வாக்கு மேலும் மேலும் வளர்ந்து வந்தது. இவர்களின் அயராத தொண்டு கண்டு, மக்கள் இந்த இரட்டையரைத் தங்கள் தெய்வங்களாகவே மதித்துப் போற்றினர்.

இவர்கள் அரசின் வெறுப்பைத் தேடிக் கொண்ட வரலாறு சிறிது காண்போம்.

பிளாட்பாரப் போர்

அமிருத சரசு இரயில் நிலையப் பிளாட் பாரத்துக்குள் ஐரோப்பியர்களும் ஆங்கிலோ இந்தியர்களும் இலவசமாகவே செல்லலாம். இந்தியர்கள் கட்டணம் தந்தாலுங்கூட நுழைய முடியாது. இப்படி ஒரு தடை. இந்தியர் யாராயினும் மனைவி மக்களையோ உறவினரையோ ரயிலில் ஏற்றி விட்டுத் திரும்ப வசதியில்லாமல் இருந்தது. இந்த வேறுபாடு இந்தியர் இதயங்களைப் புண்படுத்தியது.

பிறந்த மண்ணிலேயே, இந்த இழிதகமை என்றால், எப்படிப் பொறுப்பது!

இந்த இனவெறிக் கொடுமையை எதிர்த்து டாக்டர் கிச்சுலு, டாக்டர் சத்தியபால் ஆகிய இருவரும் கிளர்ச்சி செய்தனர். வெற்றியும் கிட்டியது. இதற்காக இவர்கள் மேற்கொண்ட கிளர்ச்சியை இராஜத்துரோகம் என்று அரசு கருதியது.

கண்காணிப்பாளர் கொலை

ரயில் நிலையக் கண்காணிப்பாளர் ஒருவர், எதற்காகவோ கொலையுண்டார். இவர்கள் செய்த கிளர்ச்சியின் பயனாகவே கொலை நடந்தது என்று, இவர்கள் மேல் பழி சுமத்தவும் அரசு தயங்கவில்லை.

கிச்சுலு செய்த குற்றம்

இவர்கள் செய்த இன்னொரு குற்றம் யாது? அதை டாக்டர் கிச்சுலுவே கூறட்டும்:

“சென்ற நகராட்சித் தேர்தலில் நான் ஓர் உறுப்பினன் ஆனேன். வரி செலுத்துவோரே வாக்களிக்கலாம் என்ற நிலையிலும், எப்படியோ நான் வெற்றி பெற்றுவிட்டேன்.

“நகராட்சியின் முதற்கூட்டத்தில், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருவரே நகராட்சித் தலைவராதல் வேண்டும் என்று வாதாடினேன். டிப்டி கமிஷனரே தலைவராதல் வேண்டும் என்று, நியமன உறுப்பினர் ஒருவர் வாதாடினார். இறுதியில் டிப்டி கமிஷனரே தலைவர் ஆக்கப்பட்டார். என்றாலும் டிப்டிகமிஷனரைத் தலைவர் ஆகவிடாமல் தடுக்க முயன்றேன் என்பதற்காக, என்மேல் அரசுக்கு ஆறாச் சினம் மூண்டது.”

அஞ்சுமான் இசுலாம்

"அஞ்சுமான் இசுலாம்" என்ற சங்கத்து நிர்வாகிகளுக்கும் கிச்சுலுவுக்கும் இருந்த மனவேறுபாட்டைப் பயன்படுத்தி, அஞ்சுமான் சங்க நிர்வாகிகளைக் கொண்டு கிச்சுலுவின் மேல் ஒரு கற்பனைக் குற்றம் சுமத்தினர்.

'இந்தியாவினின்றும் பிரிட்டிஷாரை எப்படியாவது விரட்டிவிடல் வேண்டும் என்று டாக்டர் கிச்சுலு முயல்கின்றார்' என்பதே அந்தக் குற்றச்சாட்டு.

தனக்கு வெடிகுண்டு செய்யும் முறையைக் கிச்சுலு கற்றுத் தந்தார் என்று, ஒரு சிறுவனைப் பொய்ச் சாட்சியம் கூறச் செய்தனர். ஆனால், அந்தக் குற்றம் நிரூபணம் ஆகவில்லை.

இந்தியர்களின் ஒப்புதலின்றிப் பிரிட்டிஷார் இந்தியாவில் இறங்குவதற்கு இடம் தரலாகாது என்று கிச்சுலு மக்களைத் தூண்டினார் என்பது, வேறு ஒரு குற்றச் சாட்டு. இதற்கும் ஆதாரம் இல்லாமற் போனது.

சத்தியாக்கிரகப் போர் நிகழ்ச்சிகள்

இனி அமிருத சரசில் மகாத்மாவின் ஆணைப்படி நடந்த சத்தியாக்கிரக நிகழ்ச்சிகளை - கிளர்ச்சிகளைத் தொடர்வோம்.

பொதுக் கூட்டம்

1919 மார்ச் 23இல் சத்தியாக்கிரகத்தை ஆதரித்து அமிருத சரசில் ஒரு பொதுக் கூட்டம் நடந்தது. இக் கூட்டத்தில் சத்தியாக்கிரகப் போரில் கையாள வேண்டிய முறைகள் விளக்கப்பட்டன. மார்ச் 30 இல் அறப்போர் தொடங்குவதென்று முடிவெடுக்கப்பட்டது.

அறப்போர் தொடக்கம்

முடிவின்படி அறப்போர் தொடங்கியது. கடைகள் அனைத்தும் மூடப்பட்டன. உண்ணாவிரதம் இருந்தவர் எண்ணிலர். பெண்களும் போரில் கலந்து கொண்டனர். எங்கும் அமைதியே நிலவியது.

'சத்யாக்கிரகம் எவ்வித அசம்பாவிதமும் இல்லாமல் வெற்றிகரமாக நடந்தது' என்று அரசினரே ஒப்புக் கொண்டனர்.

பொதுக்கூட்டத் தீர்மானம்

அன்று மாலை ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. முப்பத்தையாயிரம் பேர் கூடினர் என்று கணக்கிடப்பட்டது. இக் கூட்டத்துக்கு டாக்டர் கிச்சுலு தலைமை தாங்கினார்.

பண்டித கோதுமல், சுவாமி அனுபவானந்தர், தீன நாதர் முதலிய தலைவர்கள் பேசினர். ரௌலட் சட்டத்தைக் கண்டித்து ஒரு தீர்மானம் நிறைவேறியது. பேசியவர் அனைவரும் சட்ட வரம்புக்குட்பட்டே பேசினர். இராஜத் துரோகம் சிறிதளவுகூட, அவர்கள் பேச்சில் தலை காட்டவில்லை.

> "நாட்டு நலனுக்காக, நம் சொந்த நலன்களைத் துறக்கச் சித்தமா யிருப்போம். மகாத்மாவின் அறைகூவலின்படி, நாட்டு மக்கள் அனைவரும் சத்தியாக்கிரகத்துக்குச் சித்தமாக இருத்தல் வேண்டும். இரத்த வெள்ளம் பாய விடுவது, நம் நோக்கமாக இருத்தல் கூடாது.
>
> "நம் எதிர்ப்பு, அகிம்சையின் அடிப்படையில் அமைதல் வேண்டும். இந்தச் சத்தியப் போரில் சிறை செல்லவும் நேரலாம். காவலில் வைக்கப்படலாம். ஆயினும், யாருக்கும் எள்ளளவு தீங்கும் செய்யலாகாது. ஒருவர் மனமும் புண்படச் செய்யாதீர்கள்! ஒரு போலீஸ்காரனைக் கண்டாவது தேசத் துரோகி ஒருவனைக் கண்டாவது அவர்கள் மனம் புண்படும்படி பேசி விடாதீர்கள்"

என்பதே அன்று தலைவர்கள் பேசிய பேச்சின் சாரம்.

சத்தியபாலுக்குத் தடை

மார்ச்சு 30 இல் நிகழ்ந்த நிகழ்ச்சியைக் கூறுமுன்பு 29இல் நிகழ்ந்த தொன்றை ஈண்டுக் குறிப்பிடுவது அவசியமாகின்றது.

மார்ச்சு 29இல் அரசு, உத்தரவு ஒன்று பிறப்பித்தது. 'டாக்டர் சத்தியபால் எந்தக் கூட்டத்திலும் பேசலாகாது. ஏடுகளில் எழுதலாகாது. தாம் செல்லும் இடங்களைப் போலீசாருக்கு முன் கூட்டியே அறிவித்தல் வேண்டும' என்பதே அந்த உத்தரவு.

இந்த உத்தரவினால் மறுநாள் பொதுக்கூட்டத்தில் சத்தியபால் பேச முடியாமல் போனது.

அந்தக் கூட்டத்தில் அரசின் இந்தக் கொடிய உத்தரவை அறிவித்தால், மக்கள் வன்முறையில் இறங்கினும் இறங்கலாம் என்ற அச்சத்தால், இந்தச் செய்தி வெளியிடப்படவில்லை.

கிச்சுலுவுக்கும் தடை

ஏப்ரல் 4இல் டாக்டர் கிச்சுலு, பண்டித கோதுமல், சுவாமி அனுபவானந்தர், தீனநாதர்ஆகிய நால்வருக்கும் அதே உத்தரவு வழங்கப்பட்டது.

இச் செய்தியை மறக்க இயலவில்லை. ஆதலால் மக்கள் கொதித்து எழுந்தனர். ஆயினும் எத்தகைய தகாத நிகழ்ச்சியும் நடைபெறவில்லை. மக்கள் பொறுமையைக் கடைப் பிடித்தனர்.

அமிருத சரசில் அர்த்தால்

ஏப்ரல் 9 இல் மகாத்மாவின் ஆணைப்படி அமிருத சரசிலும் அர்த்தால் நடந்தது. அன்று மாலை நடந்த கூட்டத்தில் ஐம்பதாயிரம் பேர் திரண்டனர். அமிருதசரசைச் சேர்ந்த பத்ருஸ் இஸ்லாம் கான் தலைமை தாங்கினார்.

தீர்மானங்கள்

ரௌலட் சட்டம் விலக்கப்பட வேண்டும் என்றும் டாக்டர் சத்தியபாலு முதலிய தலைவர்களுக்கு வழங்கிய உத்தரவுகள் திரும்பப் பெறல் வேண்டும் என்றும் தீர்மானங்கள் நிறைவேறின.

> "மக்கள், தங்களின் உணர்ச்சிகளை வெளியில் காட்டிக் கொள்ளலாகாது. பொறுமையைக் காத்தல் வேண்டும். துன்பத்தைப் பொறுத்துக் கொண்டு, கொடுமைகளினின்றும் மீளுதல் வேண்டும். இதுவே மகாத்மாவின் ஆணையாகும். மக்கள் அமைதியுடன் இருந்தால், அதிகமான பயன் விளையும். சிறு குழப்பம் ஏற்பட்டாலும் கேடுதான் நேரும்"

என்பதுதான் அன்று தலைவர்கள் கூறிய கருத்து.

அரசினரின் மருட்சி

பின்னர் ஏப்ரல் 7,8 தேதிகள் மிக அமைதியாகவே கழிந்தன. ஆயினும் அரசினர் மிகவும் மருட்சியுற்றே இருந்தனர் என்பது அவர்களின் அறிக்கைகளால் தெரிகின்றது.

இராம நவமி விழா

மார்ச்சு 9 இராமநவமி விழா. அது இந்துக்கள் விழா வாயினும் இந்து - இசுலாம் ஒற்றுமை விழாவாகக் கொண்டாடப்படல் வேண்டும் என்று தலைவர்கள் ஏற்பாடு செய்திருந்தனர். இராம நவமியன்று ஊர்வலம் வருவது வழக்கம்.

விழா ஊர்வலம்

அன்று ஊர்வலத்தில் கணக்கற்ற முகமதியரும் கலந்து கொண்டனர்.

'மகாத்மா காந்திக்கு ஜே!'

'இந்து - இசுலாம் ஒற்றுமை வாழ்க!' என்ற கோஷங்கள் வானைப் பிளந்தன.

டாக்டர் கிச்சுலுவும் சத்திய பாலுவும் கூட்டத்தில் கலந்து கொள்ளத் தடையிருந்தமையால், ஓரிடத்திலிருந்து ஊர்வலத்தைப் பார்த்து மகிழ்ந்தனர்.

அரச வாழ்த்து

இந்த ஊர்வலம் சென்று கொண்டிருந்தபோது, டிப்டி கமிஷனர் அலகாபாத் வங்கியின் தாழ்வாரத்தில் நின்று கொண்டிருந்தார். அவரைக் கண்ட ஊர்வலத்தினர் மிக அமைதியுடன், 'காட் சேவ் தி கிங்' எனத் தொடங்கும் அரச வாழ்த்துப் பாடினர். அன்று எங்கும் பூரண அமைதியே நிலவியது. மகமதியர்களின் பாத்திரத்தில் இந்துக்கள், நீர் பருகித் தங்கள் ஒற்றுமை உணர்வினை வெளியிட்டனர்.

சத்தியபாலு - கிச்சுலு வெளியேற்றம்

இங்கு இவ்வாறு இந்து - இசுலாமியர் ஒன்றுபட்டு இராம நவமி கொண்டாடிக் கொண்டிருந்தபோது, டாக்டர் சத்தியபாலு, கிச்சுலு ஆகிய இரு தலைவர்களையும் வெளியேற்றும் உத்தரவை அரசினர் எழுதிக் கொண்டிருந்தனர்.

அவர்கள் இருவரையும் பாதுகாப்புச் சட்டத்தின்படி காவற்படுத்தும்படி டிப்டி கமிஷனருக்கு உத்தரவு வந்தது.

மறுநாள் (மார்ச் 10) அவர்கள் இருவரும், டிப்டி கமிஷனர் வீட்டுக்கு அழைககப்பட்டனர். அங்கு அரசின் உத்தரவு அவர்களுக்கு வழங்கப்பட்டது. உடனே இருவரும் போலிஸ் கண்காணிப்பாளரிடம் ஒப்புவிக்கப்பட்டனர். அமிருத சரசிற்கு நூறு கல் தொலைவிலுள்ள தரும சாலைக்கு, அவர்கள் காரில் அழைத்துச் செல்லப்பட்டனர்.

அரசின் முன்னேற்பாடு

இச்செய்தி கேள்விப்பட்ட மக்கள் கும்பல் கும்பலாகக் கூடத் தொடங்கினர்.

கிச்சுலு, சத்தியபாலுவை வெளியேற்றினால், மக்கள் கிளர்ச்சியில் ஈடுபடலாம் என்று எதிர்ப்பார்த்த அரசினர், முன்னேற்பாடாக படைவீரரை ஆங்காங்கே நிறுத்தியிருந்தனர்.

மக்கள் ஊர்வலம்

கிச்சலு, சத்தியபாலு இருவரும் ஏன் கடத்தப்பட்டார்கள் என்பதன் காரணத்தை அறியவும் அவர்களை உடனே விடுதலை செய்தல் வேண்டும் என்று வேண்டிக் கொள்ளவும் மக்கள் டிப்டி கமிஷனர் இருப்பிடத்தை நோக்கிச் சென்றனர்.

வழியில் யாருக்கும் எவ்விதத் தீங்கும் நேரவில்லை. வழியில் பல ஐரோப்பியர் தென்பட்டனர். ஆனால், அவர்களை ஒன்றுமே செய்யவில்லை. எவ்விதமான கடுமொழியும் கூறவில்லை.

மியான் அத்தா முகமதுவின் விளக்கம்

பின்னர் என்ன நடந்தது என்பதை நேரில் கண்ட மியான் அத்தா முகமதுவிடம் கேட்டு அறிந்து கொள்வோம்.

"பதினைந்து இந்தியச் சிப்பாய்களும் நான்கு ஐரோப்பிய இராணுவ அதிகாரிகளும் உருவிய வாள்களுடன் ரயில் பாலத்தருகே வந்து சேர்ந்தனர். அப்போது பகல் பன்னிரண்டு மணியிருக்கலாம்.

"சற்று நேரத்தில், ஓர் ஐரோப்பியர் சிவில் லைன்ஸ் என்ற இடத்துக்குச் சென்றார். மற்றவர்கள், பாலத்தின் உச்சியில் ஒரு விளக்குத் தூண் அருகே இருந்தனர். கால்மணி நேரம் கழித்து, தந்தி அலுவலகச் சாலையருகே ஒரு கூட்டம் கூடியது. கூட்டத்தில் ஒருவர் கருப்புக் கொடியைப் பிடித்திருந்தார். மற்றவர்கள் தலைப்பானககளையும் குல்லாய்களையும் கையில் வைத்திருந்தனர். தடி முதலிய ஆயுதங்களை ஒருவரும் வைத்திருக்கவில்லை.

"குதிரைப் படையினர் குறுக்கே நின்று கூட்டத்தைத் தடுத்தனர். ஓர் ஐரோப்பியச் சிப்பாய் கூட்டத்தினரைத் திரும்பிச் செல்லுமாறு கத்தினார்.

"அப்போது கூட்டத்திலிருந்த நானூறு பேரும் கீழே அமர்ந்து கொண்டனர். தங்கள் தலைவர்களாகிய சத்தியபாலு, கிச்சுலுவை விடுதலை செய்யும்படி விண்ணப்பம் தருவதற்காக, டிப்டி கமிஷனரிடம் போய்க் கொண்டிருப்பதாகக் கூறினர்.

"குதிரைச் சிப்பாய் ஒருவன் குதிரையைத் திருப்பிக் கொண்டு பின்னே சென்றான். கூட்டத்தினர் எழுந்து முன்னேறினர். ஒரு பாலத்தருகே கூட்டம் வந்தபோது இரண்டு வெடிச் சத்தங்கள் கேட்டன. யார்எ சுட்டார்கள் என்று தெரியவில்லை. கூட்டத்தில் இருவர் இறந்தனர்.

"அப்போதும் மக்கள், சிதறி ஓடவில்லை. இரயில் பாதையை நோக்கிச் சென்றனர். துப்பாக்கிச் சூட்டினால் ஆத்திரமடைந்த சிலர், சிப்பாய்களை நோக்கிக் கற்களையும் மரத் துண்டுகளையும் எறியலாயினர். மீண்டும் துப்பாக்கிச் சூடு நடந்தது. பல குண்டுகள் பறந்தன. மேலும் சிலர் மாண்டு விழுந்தனர். சிலர் காயமடைந்தனர்.

"கூட்டத்தில் ஒரு பகுதியினர் சாலைப் பாலத்தை நோக்கிச் சென்றனர். மற்றவர்கள் இறந்தவரையும் காயமுற்றவரையும் சுமந்து கொண்டு இரயில் பாலத்தை நோக்கி நடந்தனர்."

"சத்தா ஹாசன் என்ற ஒரு பாரிஸ்டர், சாலைப்பாலத்துக்கு வந்து திரும்பிச் செல்லுமாறு மக்களை வேண்டிக் கொண்டார். அவர் சொன்னபடியே, கூட்டம் திரும்பி விட்டது.

"மக்கள் திரும்பிச் செல்லத் தொடங்கியதும் சிப்பாய்கள், கூட்டத்தை நோக்கிச் சில ரவுண்டுகள் சுட்டனர். கூட்டம் பின்னடைந்து இரயில்வே பாலத்தை நோக்கிச் சென்றது. இப்போது, சிலர் கைகளில் தடிகள் இருந்தன.

"மக்களை நோக்கி மீண்டும் சுடும்படி படைத் தலைவர் உத்தரவிட்டார். இருவர் குண்டுபட்டு விழுந்தனர். இன்னும் பலர் விழுந்திருக்கலாம்"

மியான் அத்தா முகமதுவின் பேச்சிலிருந்து, அமைதியாயிருந்த மக்களை வேண்டுமென்றே சுட்டு, ஆத்திரத்தை மூட்டினர் என்பது தெளிவாகின்றது.

வக்கீல்கள் முயற்சி

டாக்டர் கிச்சுலு, சத்தியபாலு கடத்தப்பட்டதும் மக்கள் ஊர்வலமாகச் சென்றதும், சிலர் சுடப்பட்டதும் அறிந்த வக்கீல்கள் சிலர், அமைதியை நிலைநாட்டுவதற்கு முன் வந்தார்கள். மக்களுக்கும் அதிகாரிகளுக்கும் மீண்டும் தகராறு உண்டாகாமல் தடுக்க முயன்றனர்.

மாக்பூல் மாமூது

வக்கீல்கள் தங்கள் சமாதான முயற்சியை டிப்டி கமிஷனரிடம் அறிவிக்கும்படி மாக்பூல் மாமூது என்பவரை அனுப்பினர். அவர் தம்முடன் வேறு சிலரை அழைத்துக் கொண்டு ஒரு காரில் சென்றார். அப்போது மக்கள், அந்தக் காரைச் சூழ்ந்து கொண்டு, துப்பாக்கிச் சூடு பற்றி முறையிட்டனர். அவர்களுக்கு ஆறுதல் கூறிய பிறகு கார் மேலே சென்றது. தந்தி அலுவலகத் தருகே பெருங்கூட்டம் இருந்தது. சிலர், தடிகள் வைத்திருந்தனர். சிலர், தந்திக்கம்பிகளை அறுக்கலாயினர். அவர்களை அவ்வாறு செய்யாமல் தடுத்து அமைதிப்படுத்தி, ஹால்கேட்டு வழியாக அழைத்துச் சென்றார் மாக்பூல்.

குதிரைமேல் டிப்டி கமிஷனர்

இந்தச் சமயம், இரயில்வே பாலத்தில் மேலும் சிப்பாய்கள் திரண்டிருப்பதாகச் செய்தி வந்தது. மக்கள் அச்சமுற்று இரயில்வே பாலத்தை நோக்கிச் செல்வலாயினர். அங்கே சிப்பாய்களின் நடுவே டிப்டி கமிஷனரும் குதிரைமேல் இருந்தார்.

மாக்பூலின் மன்றாட்டு

மக்களை அமைதியாக அழைத்துச் செல்வதாகவும் சுடல் வேண்டாம் என்றும் டிப்டி கமிஷனரிடம் மாக்பூல் மன்றாடிக் கேட்டுக் கொண்டார்.

துப்பாக்கிச் சூடு

இச் சமயம் ஆத்திரமடைந்த சிலர், சிப்பாய்கள் மீது கற்களை வீசினர். உடனே சிப்பாய்கள் எவ்வித எச்சரிக்கையும் செய்யாமல் துப்பாக்கிச் சூடு நடத்தினர். இருபது இருபத்தைந்து பேர்கள் இறந்தும் இரண முற்றும் வீழ்ந்தனர். துப்பாக்கிச் சூடு நடந்ததும் மக்கள் சிதறித் திரும்பி ஓடினர். ஓடியவர்களையும் விடாமல் சிப்பாய்கள் சுட்டனர்.

வீரத் திருவுருவம்

குண்டுபட்டு ஓர் இளைஞன் கீழே விழுந்தான். அவனுக்குப் பதினாறு வயதிருக்கலாம். வயிற்றில் காயம் பட்டுக் குடல் வெளியே பிதுங்கிவிட்டது. மாக்பூல் அவன் அருகே சென்றார்.

“நான் சாகின்றேன். என்னைக் கவனிப்பது வீண். பக்கத்தில் வீழ்ந்து கிடக்கும் என் சகோதரர்களைக் கவனியுங்கள். இந்து - இசுலாம் ஒற்றுமை வாழ்க!” என்று கூறி அவன் உயிர் துறந்தான்.

வீர அஞ்சலி

"அப்பா! இளைய பார வீரனே! பாரதத்தின் பழமையான வீரம், அன்னிய ஆதிக்கத்தால் அழிந்து போக வில்லை. வாய்ப்புக் கிடைக்கும்போது மேலெழுந்து செயல்படும் என்று காட்டிய உன்னை இந்த நாடே வணங்கும். தாயைக் குடல் விளக்கம் செய்த இளஞ் சிங்கமே! உன் பெயரை அறியோம். நீ இந்த இனத்தான் என்றும் தெரியாது. இறக்கும்போது, நீ கூறிய அந்த வீரவாசகம் காலந்தோறும் எங்களுக்குப் புத்துணர்ச்சி ஊட்டிக் கொண்டேயிருக்கும்! உன் வீரம் எங்களுக்கு வழி காட்டும்! வாழ்க உன் தியாகம்!"

என்று வாழ்த்தி அந்த இளைஞனைப் போற்றுவோம்.

மருத்துவ வசதி மறுப்பு

சிகிச்சை தருவதற்கு, காயம் பட்டவர்களை எடுத்துச் செல்வதற்காக டாக்டர் கணபதிராய் சிலரை அனுப்பினார். போலீஸ் கண்காணிப்பாளர், அவர்களைச் செயல்படவிடாமல் தடுத்துவிட்டார்.

ஐரோப்பியரின் ஏளனம்

காயம்பட்டவர்களை மக்களே, மருத்துவரிடம் தூக்கிச் சென்றனர். அவர்களை ஐரோப்பியர் ஏளனம் செய்தனர்; தகாத சொற்களை வீசினர்.

பெண் பேய்

கோஷா மருத்துவ மனையில் பணியாற்றுபவள் மிஸஸ் ஈஸ்டன். அவள் ஒரு ஐரோப்பிய மாது. காயம்பட்டவர்கள் தூக்கிச் செல்லப்படுவதை, வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தாள்.

"ஏன் இவர்ள் காயம் பட்டனர்? - அவள் எழுப்பிய வினா.'

"ஐரோப்பியர் சுட்டதால்" - என்பது கிடைத்த விடை.

"சுதேசிகளுக்கு இது வேண்டியதுதான்! தக்க பலனையே அடைந்தனர்."

இது அவள் ஒழுகவிட்ட வாய்க்கொழுப்பு.

டாக்டர் கேதாரநாதர் காயம் அடைந்தவர்களுக்கு மருந்து கட்டிக் கொண்டிருந்தார். அதைப் பார்த்த ஈஸ்டன்,

"அந்த முட்டாள் டாக்டர் செய்வதைப் பாருங்கள். அவர்கள் காலை வெட்டி எடுத்துவிட வேண்டியது தானே!

அவர்கள், தம் வாழ்நாள் முழுவதும் நொண்டிகளாக அலைந்தால்தானே, பிறசுதேசிகளுக்குப் பாடமாக இருக்கும்."

இது, அவள் எரிகிற நெருப்பில் கொட்டிய எண்ணெய். ஆதிக்கத் திமிரானது, எவ்வளவு அரக்கத்தனமாக நடந்து கொள்ளும் என்பதற்கு அந்தப் பெண் பேய் எடுத்துக் காட்டாக விளங்கினாள்.

பேயைத் தேடி மக்கள்

அவள் பேச்சைக் கேட்ட மக்கள் ஆத்திரமடைந்தனர். 'எங்கே அந்தப் பேய்!' என்று அவளைத் தேடி வரலாயினர்.

உடனே ஈஸ்டன் ஒரு மெத்தைப் படியின் அடியிலிருந்த ஓர் அறையில் பதுங்கிக் கொண்டாள். சிலர் மருத்துவமனையின் கதவை உடைக்கத் தொடங்கினர். ஒரு சிறுவன் சுவர்ஏறிக் குதித்து, உள் பக்கத் தாழ்பாளைத் திறந்துவிட்டான். பத்துப் பதினைந்துபேர் உள்ளே நுழைந்தனர். அவர்கள் கையில் தடிகள் இருந்தன. ஈண்டன் எங்கே என்று துழாவினர். அவள் பதுங்கியிருந்த இடம் தெரியவில்லை. ஆதலால் கூட்டம் வெளியேறியது.

பேய் தப்பிப் பிழைத்தது

பின்னர் ஈஸ்டன், ஓர் இந்தியப் பெண்போல அழுக்கு உடை உடுத்துக் கொண்டு தப்பி ஓடி, உயிர் பிழைத்தாள்.

"ஓ! ஐரோப்பிய அகந்தைப் பெண் பேயே! நீ பாரத மக்களை இகழ்ந்து பேசினாய்! அவர்களின் மனத்தைப் புண்படுத்தினாய்! ஆயினும், அந்தப் பாரத மக்களின் உடைதானே உன் உயிருக்குப் பாதுகாப்பானது. பகைவரையும் காப்பது பாரதப் பண்பாடு என்பதற்கு நீ உடுத்திய அழுக்கு உடைகூடச் சான்று ஆவதை நீ பார்த்தாயா!"

மக்களின் வன்முறை

மிஸஸ் ஈஸ்டனின் செயலால் ஆத்திரம் கொண்ட மக்கள், உணர்ச்சி வசப்பட்டனர். தந்தி அலுவலகத்தில் நுழைந்தனர். தொலைபேசிக் கருவியைப் பாழ்படுத்தினர். தந்தி அலுவலகத் தலைவர், கூட்டத்தினரிடம் சிக்கிக் கொண்டார். சீக்கியச் சிப்பாய்கள் வந்து அவரை விடுவித்தனர்.

பின்னர் மக்கள், சரக்கு அறையில் புகுந்தனர். அங்கிருந்த பொருள்களைச் சேதப்படுத்தினர்.

ராபின்சன் கொலை

மிஸ்டர் ராபின்சன் என்ற ஐரோப்பியனைக் கொலை செய்தனர்.

கூட்டத்தினரில் சிலர், நேஷனல் வங்கியை நோக்கிச் சென்றனர். வங்கியின் மேலாளர், துணை மேலாளர் ஆகிய இருவரையும் கொலை செய்தனர்.

பல லட்சம் மதிப்புள்ள பொருள்கள் நாசமாயின. மரத் தளவாடங்களில் மண்ணெண்ணெய் ஊற்றி, அதில் பிணங்களைப் போட்டு எரித்தனர்.

சார்ட்டர்டு வங்கியும் தாக்குண்டது. அதன் மேலாளர், ஓரிடத்தில் ஒளிந்து உயிர் தப்பினார்.

வங்கி மேலாளர் கொலை

அலையன்ஸ் வங்கி தாக்கப்பட்டு அதன் மேலாளர் குரூரமாகக் கொலையுண்டார். அவர் உடல் மாடியிலிருந்து கீழே வீசப்பட்டது. பின்னர் அவ் வுடல் மரத் தளவாடங்களுடன் எரிக்கப்பட்டது.

ரௌலண்டு கொலை

சார்ஜண்ட் ரௌலண்டு கொலையுண்டார். கிறிஸ்துவ சமய சங்கத்தின் நூல்நிலையம் தீக்கிரையானது. அங்கிருந்தவர்கள் தப்பியோடி உயிர் பிழைத்தனர்.

கட்டடங்களுக்குத் தீ

நகரமன்றம், அஞ்சல்நிலையம், மிஷன் மன்றம், இரயில் நிலையத்தின் ஒரு பகுதி முதலியன இவ்வண்ணமே எரியூட்டப்பட்டன.

மிஸ் ஷெர்வுட் தாக்கப்பட்டார்

"மிஸ் ஷெர்வுட் என்ற ஐரோப்பிய மாது, பலகாலமாக அமிருத சரசில் கல்விப் பணி செய்து வந்தாள். மக்களின் நன்மதிப்பைப் பெற்றவள் அவள்.

"கூட்டத்தைக் கண்டு அஞ்சிய ஷெர்வுட் பள்ளியிலிருந்து ஓடினாள். 'அவள் இங்கிலீஷ்காரி! அவளை விடாதே!

கொல்லு!' என்று கூச்சல் கிளம்பியது. அவள் என்ன செய்வாள்! இனித் தப்ப முடியாது என உணர்ந்து வந்த வழியே திரும்பினாள். வழியில் ஒரு சந்தில் மறைந்து கொள்ள முயன்றாள். கூட்டம் அவளை விடவில்லை. தலையில் தடியால் தாக்கப்பட்டுக் கீழே விழுந்தாள். சிறிது சமாளித்துக்கொண்டு எழுந்து ஓட முயன்றாள். இரண்டாம் முறையும் அடி விழுந்தது. தரையில் சாய்ந்த பிறகும் அடி ஓயவில்லை.

"மறுபடியும் ஒருவாறு எழுந்து ஒரு வீட்டிற்குள் நுழைய முயன்றாள். அந்த வீட்டுக் கதவு சாத்தப்பட்டிருந்தது. களைப்பினால் கீழே விழுந்த அவள், மீண்டும் எழ முயன்றாள். எழ இயலவில்லை. கண்கள் இருண்டு போயின. கூட்டத்தில் ஒருவர் அவள் உடையைப் பிடித்து இழுத்தார். இன்னொருவர் தொப்பியைப் பறித்தார். சிலர் தங்கள் கை முஷ்டிகளுக்கு வேலை தந்தனர்.

"மிஸ் ஷெர்வுட் மீண்டும் எழ முயன்றாள். அப்போது ஒருவர் தலைமயிரைப் பிடித்துக் கீழே தள்ளிச் செருப்பால் ஐந்து ஆறு முறை அடித்தார். மறுபடியும் இன்னொருவர் தடியால் தாக்கினார்.

"அவள் இறந்து விட்டாள் என்று சிலர் சத்தமிட்டனர்.

'மகாத்மா காந்திக்கு ஜே!'

'சத்திய பாலுவுக்கு ஜே!'

'கிச்சுலுவுக்கு ஜே!'

என்று, கோஷமிட்டுக் கொண்டே கூட்டம் அப்பால் சென்றது.

"இத்தனை அடிபட்டும் மிஸ் ஷெர்வுட் சாகவில்லை. சில கடைக்காரர்களால், காப்பாற்றப்பட்டு விட்டார்."

இவ்வாறு ஷெர்வுட் தாக்கப்பட்டதை விளக்கிச் செல்கின்றது அரசினர் அறிக்கை. "இது மிகைப்படுத்தப்பட்டது. பொய்யானது" என்று ஷெர்வுட்டே கூறியுள்ளாள்.

ஷெர்வுட்டைத் தாக்குவதற்கு முயற்சி செய்யப்பட்டது உண்மைதான். ஆனால் இவ்வளவு கொடுமைக்கு அவள் ஆளாகவில்லை என்பது அவள் வாக்கினால் நிரூபணமாகிவிட்டது.

ஷெர்வுட்டின் நேர்மை

தாக்கப்பட்டதற்கு நஷ்டஈடாக, ஷெர்வுட்டுக்கு ஐம்பதாயிரம் ரூபாய் தர அரசு முன் வந்தது. அப்போது அதை வாங்கிக் கொள்ள மறுத்துவிட்டாள் அவள்.

ஷெர்வுட்டின் பேட்டி

"அவள் இங்கிலீஷ்காரி! அவளை விடாதே! கொல்லு!" என்று கூட்டத்தினர் கூச்சலிட்டதாகக் கூறுவது பொய்! அந்தக் கூச்சலை நான் கேட்கவில்லை. 'அவளை விட்டுவிடுங்கள்! அவள் ஒரு பெண்!' என்றே சிலர் கத்தினர். பின்னர் இந்தியர்களே என்னைப் பாதுகாத்தனர். ஓர் இந்தியக் குடும்பமே எனக்குப் புகலிடமானது. இந்தியக் கரங்களே என் காயங்களுக்கு மருந்திட்டது. அந்த உபகாரமே எனக்குச் சிறந்த நஷ்டஈடு."

இது ஷெர்வுட், இங்கிலாந்திலிருந்து வெளிவரும் 'சாலன்ஜ் என்ற இதழுக்கு அளித்த பேட்டியின் ஒரு பகுதி.

சிறு தவற்றைக்கூட அரசினர் தமக்குச் சாதகமாகவும் தாம் செய்த கொடுமைகளை நியாயப்படுத்துவதற்காகவும் எப்படிப் பெரிதுபடுத்திக் காட்டுவர் என்பதற்கு மிஸ் ஷெர்வுட்டின் வரலாறு சான்றாக உள்ளது.

எழுபது குண்டுகள்

இன்னொரு கூட்டம் சிவில் லைன்ஸ் நோக்கிச் சென்றது. ஹால்கேட் என்னுமிடத்தில் துப்பாக்கிச் சூடு நடந்தது. இருபது முப்பதுபேர் மாண்டனர். எழுபது குண்டுகள் சுடப்பட்டன.

இரயில் நிலையத்தில் எரி

மற்றொரு சாரார் பொற்கோயிலுக்கு அருகிலுள்ள இரயில் நிலையத்தை நெருப்புக்கு இரையாக்கினர். பொருட்கிடங்கு கொள்ளையடிக்கப்பட்டது.

கிராம மக்கள் சிலர் சேகார்த்தா இரயில் நிலையத்தைத் தாக்க முயன்றனர். ஆனால் நிலையத்திலுள்ள விளக்குகளைத்தான் அவர்களால் உடைக்க முடிந்தது.

போலீசாரின் அமைதி

மக்களின் கிளர்ச்சியைப் பற்றிக் கூறிக்கொண்டு வரும் போது, மற்றொன்றையும் குறிப்பிட்டேயாக வேண்டும்,

மக்கள் நகரமன்றத்தை எரித்ததை முன்பே கண்டோம். அந்த நகர மன்றத்துக்குள்ளேதான் போலீஸ் நிலையமும் இருந்தது. கிளர்ச்சியைக் கருதி அதிகமான போலீசார் அங்கே குவிக்கப் பட்டிருந்தனர்.

எரிக்கப்பட்ட பிற கட்டடங்களும், போலீஸ் நிலையத்துக்கு அருகிலேயே இருந்தன. பாங்குகள் நெருப்புக்கிரையாவதைப் போலீசார் அறிந்தே இருந்தனர். அப்படியிருந்தும் போலீசார் ஏன் தடுக்காமல் இருந்தனர்?

'மக்கள் தவறு செய்யட்டும். தவறு செய்தபிறகுதான், அவர்களைத் தண்டிப்பதற்கு நல்வாய்ப்புக் கிட்டும்' என்று போலீசார் கருதிக் காத்திருந்தனரோ என்று எண்ணத் தோன்றுகிறது.

அமிருதசரசில் மட்டும் அல்ல, வேறு சில இடங்களிலும் போலீசார் இவ்வாறே செயல்படாமல் இருந்துள்ளனர் என்பதை மேலே காணப் போகின்றோம்.

கிச்சன் வருகை

அமிருத சரசில் நடந்த கிளர்ச்சியை, சர் மைக்கேல் அறிந்தான். நிலைமையை அறிந்து வரும்படி கிச்சன் என்பவரை அனுப்பினான். கிச்சன் அமிருதரசசு வரும் வரையில் எவ்விதமான தகாத செயலும் நடக்கவில்லை. அவனைத் தாக்கவும் முயற்சி செய்யப் படவில்லை. இதனால் தெரிவது, அமிருதசரசில் கிளர்ச்சி அடங்கி அமைதி ஏற்பட்டு விட்டது என்பதே யாகும்.

கிச்சனின் ஆலோசனை - இராணுவ நிர்வாகம்

"அமிருத சரசில் இனி சிவில் ஆட்சி பயன்படாது. இராணுவத்திடம் நிர்வாகம் ஒப்படைத்து விடல் வேண்டும். அமைதி ஏற்படுத்துவது இராணுவத்தின் பொறுப்பு" என்று கிச்சன் ஆலோசனை கூறினான். கிச்சனின் ஆலோசனையை உடனே மைக்கேல் ஏற்றுக் கொண்டான். அன்றிரவு பதினொரு மணிக்கு மேஜர் மாக்டோனால்டு தலைமையில், இராணுவம் அமிருத சரசில் புகுந்தது. அமிருத சரசு இராணுவத்தினிடம் ஒப்படைக்கப்பட்டு விட்டது.

இராணுவ உத்தரவு

ஏப்ரல் 11 இல் இறந்தவரை அடக்கம் செய்யும் பணியில் மக்கள் ஈடுபட்டனர்.

ஒவ்வொரு சடலத்துடனும் நான்கு பேருக்குமேல் போகக் கூடாது என்று இராணுவம் உத்தரவிட்டது.

"இந்த உத்தரவு காரிய சாத்தியமற்றது. இதைக் கைவிடல் வேண்டும்" என்று அதிகாரிகளிடம் சிலர் சென்று மன்றாடினர்.

"சடலங்களுடன் பலர் செல்லலாம். ஆனால், பகல் இரண்டு மணிக்குள் சடங்குகள் அனைத்தும் முடிந்து விடல் வேண்டும்" என்று உத்தரவு திருத்தப்பட்டது.

"அமிருத சரசில் அமைதியுண்டாக்குவதற்காக இராணுவத்திடம் அதிகாரம் தரப்பட்டுள்ளது.

"எத்தகைய கூட்டத்துக்கும் ஊர்வலத்துக்கும் அனுமதி இல்லை. தடையை மீறி எங்காவது கூட்டமோ ஊர்வலமோ நடந்தால், துப்பாக்கிச் சூடு நடத்தப்படும். நான்கு பேருக்கு மேல் வெளியே சென்றால், சுடப்படுவர். அமைதி ஏற்படும் வரை, தன்மானமுள்ளவர்கள் வீட்டுக்குள்ளேயே இருத்தல் வேண்டும்.

"இறந்தவர்களை அடக்கம் செய்யச் செல்பவர்கள் நான்கு பேருக்கு மேல் இல்லாமல், பதினைந்து நிமிடத்துக்கு ஒருமுறை கீமண்டி, லோகர், கானாகானா, கதிவின்ட் ஆகிய இடங்களின் வழியாக மட்டுமே செல்லலாம்" என்பது இராணுவத்தின் முதல் உத்தரவு."

திருத்தப்பட்ட உத்தரவு

மக்கள் மன்றாடிக் கேட்டுக் கொண்ட பிறகு திருத்தப்பட்ட உத்தரவு இதோ:

சடலங்களை எடுத்துச் செல்வதற்கு இரண்டாயிரம் பேர் வரை கூடலாம். ஆனால் கீழ்க்கண்ட நிபந்தனைகள் கண்டிப்பாக நிறைவேற்றப்படல் வேண்டும்.

1. சுல்தான் வின்ட் கேட், சதிவின்ட்கேட் வழியாகவே சவ ஊர்வலங்கள் செல்லுதல் வேண்டும்.
2. சவ அடக்கச் சடங்குகள் யாவும் பகல் இரண்டு மணிக்குள் முடித்துவிடல் வேண்டும்.
3. இரண்டு மணிக்குச் சங்கொலி மூலம் எச்சரிக்கை செய்யப்படும்.

4. சிதை நெருப்பு மூட்டப்பட்ட பதினைந்து நிமிடங்களில் கூட்டம் கலைந்துவிடல் வேண்டும்.

5. கைகளில் எவ்வித ஆயுதமும் இருத்தல் கூடாது.

இந்த உத்தரவின்படியே சவங்கள் அடக்கம் செய்யப்பட்டன.

மக்கள் அச்சம்

ஏப்ரல் 11 முழுவதும் அமிருதசரசில் அமைதியே நிலவியது. பிரிட்டிஷ் படைவீரர், ஆங்காங்கே காவல் புரிந்து நின்றனர். மக்களிடையே பேரச்சம் நிலவியது.

வதந்தி

'குடி தண்ணீரில் நஞ்சு கலந்து விட்டனர்' என்று ஒரு வதந்தி பரவியது. 'குடி தண்ணீர்த் தேக்கங்கள் உடைக்கப்பட்டு விட்டன' என்றும் கூறப்பட்டது. இவைகளை ஆதாரமாகக் கொண்டு தண்ணீர் வசதி துண்டிக்கப்பட்டது.

மின்சார நிறுத்தம்

மக்கள் இரவில் நடமாடாமல் இருக்கும் பொருட்டு மின்சாரமும் நிறுத்தப்பட்டது. குடிக்கத் தண்ணீரும் இரவில் வெளிச்சமும் இல்லாமல் மக்கள் பட்ட துன்பம் சொல்லும் தரமன்று.

ஜெனரல் டையரின் வருகை

பிரிகேடியர் ஜெனரல் ஆர்.இ.எச். டையர் என்பவன் பதினொன்றாம் தேதி இரவு ஒன்பதரை மணிக்கு அமிருதசரசு வந்து இராணுவ ஆட்சியின் தலைமைப் பொறுப்பை ஏற்றுக் கொண்டான்.

டையரின் முதல் நடவடிக்கை

ராம் பாக் என்னுமிடத்தைத் தலைமையிடமாகக் கொண்டு அதிகாரத்தைத் தொடங்கினான். அவன் செய்த முதல் வேலை பன்னிரண்டாம் தேதி பன்னிருவரைக் கைது செய்ததே ஆகும். அவர்கள் கைது செய்யப்பட்டதையும் யாருமே எதிர்க்கவில்லை.

டையரின் நகர்வலம்

நூற்று இருபது பிரிட்டிஷ் சிப்பாய்களும், முந்நூற்று இருபது இந்தியச் சிப்பாய்களும், இரு பீரங்கி வண்டிகளும் புடைசூழ நகர்வலம் வந்தான் டையர்.

"வழியில் மக்கள் கூட்டம் கூட்டமாக இருந்தனர். அவர்களைக் கலைக்கப் பெருமுயற்சி செய்தேன். துப்பாக்கிச் சூடு நடத்தும் நிர்பப்ந்தம் ஏற்பட்டது. ஆனாலும் சுடவில்லை. மக்களுக்கு எச்சரிக்கை மட்டும் விடுத்தேன். மக்கள் தெருவில் 'இந்து - இசுலாம்கி ஜே!' என்று கோஷமிட்டுக் கொண்டிருந்தனர். துருப்புக்களைக் கண்டு அவர்கள் காறி உமிழ்ந்தனர். ஆயினும் தகாத செயல் ஒன்றும் நிகழவில்லை" என்பது டையர் தீட்டிய நகர்வலத்தின் சித்திரம்.

டையரின் அறிவிப்பு

"சொத்துக்களைக் சேதப்படுத்துவது கூடாது.
நான்கு பேருக்குமேல் கூடலாகாது"

என்று பன்னிரண்டாம் தேதி மாலை அறிவிப்புச் செய்யப்பட்டது.

வைசாகி நாள்

மறுநாள் பஞ்சாப் மக்களுக்குப் புத்தாண்டுத் தொடக்க நாள். அது, வைசாகி நாள் எனப்படும். வைகாசி நாள் அன்று, அமிருதசரசில் ஒரு பெரிய சந்தைக் கூடும். வெளியூர்களிலிருந்து பற்பலர், அந்தச் சந்தைக்கு வருவர்.

டையரின் உத்தரவுப் பிரகடனம்

அன்று காலை ஒன்பதரை மணிக்கு டையர் ஓர் உத்தரவைப் பிரகடனம் செய்தான்.

டையர் முதலில் சென்று கொண்டே யிருப்பான். ஓரிடத்தில் நின்று தண்டோரா போடச் செய்வான். மக்கள் வந்து கூடுவர். பஞ்சாபி, உருது ஆகிய இரு மொழிகளிலும் அந்த உத்தரவு வாசிக்கப்படும். அந்த உத்தரவு இதுதான்:

"நகரத்திலாவது வெளியிலாவது எத்தகைய ஊர் வலமும் செல்லக் கூடாது. நான்கு பேருக்கு மேல் கூடக் கூடாது. கூடினால் ஆயுதங்களைப் பிரயோகித்துக் கலைக்கப்படுவர்."

இரண்டு மணிநேரத்தில் உத்தரவுப் பிரகடனம் முடிந்தது. சில இடங்களில் மட்டுமே வாசிக்கப்பட்டமையால் நகரத்தின் பிற பகுதியிலுள்ள மக்கள் இந்த உத்தரவை அறிந்து கொள்ள வாய்ப்பு இல்லை. இதை டையரே ஒப்புக் கொண்டுள்ளான்.

உத்தரவுப் பிரகடனம் முடிந்த பிறகு, சந்தைக்கு மக்கள் திரள் திரளாக வந்து கொண்டே யிருந்தனர். அவர்களுக்கு டையரின் உத்தரவு பற்றி ஒன்றுமே தெரியாது.

டையரின் இரண்டு அறிக்கைகள்

அன்றைக்கே ஜெனரல் டையர் வேறு இரண்டு அறிக்கைகளையும் வெளியிட்டான்.

"எங்காவது சொத்துக்களுக்குச் சேதம் நேர்ந்தாலும், அமிருதசரசில் மட்டுமல்ல - சுற்றுப் பகுதிகளில் ஏதும் வன்முறை நிகழ்ந்தாலும், அதற்காக அமிருத சரசு மக்கள் தண்டிக்கப்படுவர்.

"கூட்டங்கள் கூடலாகாது. கூடினால் இராணுவச் சட்டம் பயன்படுத்தப்படும்.

"குறிப்பிட்ட அதிகாரிகளிடம் அனுமதி பெறாமல் யாரும் நகருக்கு வெளியே செல்லக் கூடாது.

"இரவு 8 மணிக்குமேல், வீட்டைவிட்டு வெளியே வருவோர் சுடப்படுவர்.

"ஊர்வலம் செல்லக் கூடாது. ஊர்வலம் சென்றால் ஆயுத பலத்தால் கலைக்கப்படும்."

என்பன டையர் வெளியிட்ட அறிக்கைகளின் சாரம்.

இந்த அறிக்கைகளை வெளியிட்ட டையர், மக்கள் அனைவரும் அறிந்து கொண்டுவிட்டனர் என்று சாதித்தான்.

உண்மையில் பெரும்பான்மையினர் இந்த அறிக்கைகளை அறியும் வாய்ப்புப் பெறவில்லை. பின்னர் டையரே இதை ஒப்புக்கொள்ள நேர்ந்தது.

பொதுக் கூட்டத்துக்கு ஏற்பாடு

மறுநாள் ஜாலியன் வாலா பாக் என்னுமிடத்தில் கூட்டம் நடத்த, மக்கள் தலைவர்கள் ஏற்பாடு செய்து கொண்டிருந்தனர்.

தாப்காதிகான் என்னுமிடத்தில், ஏப்ரல் 12இல் ஒரு சிறிய ஆலோசனைக் கூட்டம் நடந்தது. மறுநாள், ஜாலியன் வாலாத் தோட்டத்தில் பொதுக் கூட்டம் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

கூட்டம் கூடும் செய்தியை ஒரு தகரத்தை அடித்து, ஊர் முழுவதும் அறிவித்தனர்.

டையரின் அமைதி

கூட்டம் நடைபெற விருக்கும் செய்தி டையருக்கும் தெரிந்தது. தெரிந்தும், கூட்டத்தைத் தடுக்க எவ்வித முயற்சியும்

எடுக்கவில்லை. 'கூட்டம் கூடட்டும் பார்த்துக் கொள்ளலாம்' என்று சமயம் பார்த்துக் கொண்டிருந்தான்.

ஜாலியன் வாலாபாக்குக் கூட்டம்

கூட்டம், ஜாலியன் வாலாத் தோட்டத்தில் மாலை நான்கு மணிக்குத்தான் தொடங்கியது.

அதே நேரத்தில்தான், இராஜத் துரோகத் தடுப்பு அவசரச் சட்டம் அமிருத சரசில் அமுலுக்கு வருவதாக அவசர அவசரமாக அறிவிக்கப்பட்டது.

அடக்கு முறைச்சட்டம் அமுலாகும் செய்தியை அறிய வாய்ப்பில்லாமையால், வெளியூர்களிலிருந்து மக்கள் திரண்டு வந்து கொண்டே யிருந்தனர்.

ஜாலியன் வாலாபாக்

இங்கு ஜாலியன் வாலாபாக் பற்றிச் சில விவரங்களை அறிந்து கொண்டு மேலே செல்வோம்.

ஜாலியன் வாலாபாக் ஒரு மைதானம். ஜாலியன் என்ற மந்திரவாதி ஒருவருக்குச் சொந்தமாக முன்பு இருந்தமையால், 'ஜாலியன் வாலா பாக்' எனப் பெயர் பெற்றது. வாலா என்பது, உடைய எனப் பொருள்படும் இடைச் சொல் ஆகும். பாக் என்றால், தோட்டம். 'ஜாலியன் என்பவருடைய தோட்டம்' என்பது, அத்தொடரின் திரண்ட பொருள்.

நான்கு புறமும் வீடுகளால் சூழப்பட்ட ஒரு நாற்கோண வடிவமான வெற்று இடம். அது ஒரு குடும்பத்தைச் சேர்ந்த தனிச் சொத்து ஆனாலும், மக்கள் அதைப் பயன்படுத்தி வந்தனர்.

அதைச் சுற்றியுள்ள வீடுகளின் சுவர்களே அதற்கு எல்லைகளாக இருந்தன. அங்கு மூன்று மரங்களும் ஒரு சமாதியும் ஒரு கிணறும் மட்டுமே உண்டு. அதற்கு ஒரே வழிதான் உண்டு. அதுவும் மிகமிகக் குறுகலானது. வண்டிகள் வசதியாக அவ் வழியில் நுழைய முடியாது. அது தவிர, நாலு ஐந்து இடங்களில் வழி என்று சொல்லத் தக்கனவாக குறுகிய சந்துகள் இருந்தன. ஆனால் அதன் வழியே மக்கள் விரைந்து வெளிவர இயலாது.

பிரதான நுழைவாயிலின் அருகிலுள்ள தரையானது உயரமாக இருந்தது. சிப்பாய்கள் அங்கிருந்து சுடுவதற்கு அந்த உயரம் வசதியாக இருந்தது.

இருபதாயிரவர்

அன்றைய கூட்டத்துக்கு இருபதாயிரவர் வந்தனர். லாலா ஹன்ஸ்ராஜ் என்பவர் தலைமை ஏற்றார். கூட்டம் நடந்து கொண்டிருந்தது. கூட்டத்தில் பல குழந்தைகளும் சிறுவர்களும் இருந்தனர். பெண்களும் கணிசமாக இருந்தனர். மக்கள் கையில் எவ்வித ஆயுதமும் இல்லை.

ஆகாய விமானம்

கூட்டத்திற்கு மேலே ஓர் ஆகாய விமானம் வட்டமிட்டுக் கொண்டிருந்தது. அதைக் கண்டு மக்கள் அஞ்சினர். "அஞ்ச வேண்டா" என்று தலைவர், மக்களை அமைதிப்படுத்தினார்.

கூட்டத்தினர் அமைதியாகத் தலைவர்களின் பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்தனர்.

தலைவர்கள் பேச்சு

மகாத்மாவின் சத்தியாக்கிரகப் போர் முறைகளை விளக்கி, "எக்கொடுமை நேர்ந்தாலும் மக்கள் வன்முறையில் ஈடுபடாமல் பொறுமை காக்கவேண்டும்" என்று தலைவர்கள் வற்புறுத்திக் கொண்டிருந்தனர்.

டையரின் திடும் பிரவேசம்

இந் நிலையில் ஜெனரல் டையர் அங்கே வந்தான். பிரிட்டிஷ் சிப்பாய்கள் இருபத்தைவரும் இந்தியச் சிப்பாய்கள் இருபத்தைவரும் அவனுடன் வந்தனர்[1]. மேலும் ஐரோப்பியக் காவல் அதிகாரிகள் இருவரும் இருந்தனர். பீரங்கி வண்டிகளும் உடன் வந்தன.

பீரங்கி வண்டிகள் தோட்டத்துக்குள்ளே நுழைய இயலாமையால், வாயிலுக்கு வெளியிலேயே நிறுத்தப்பட்டன. படைவீரர் மட்டும் உள்ளே நுழைந்தனர். வலப் பக்கம், இடப் பக்கமாகப் பிரிந்து அணி வகுத்து நின்றனர்.

அப்போது மணி 5.15. தலைவர்களின் பேச்சில் கவனமாக இருந்தமையால், படைவீரர்கள் வந்ததையும் துப்பாக்கியுடன் அணி வகுத்து நிற்பதையும் மக்கள், கவனிக்கவில்லை.

---

1. டையருடன் இருந்த சிப்பாய்கள் தொண்ணூற்றுவர் என்று அவனே கூர்க்கத் துப்பாக்கிப்படையினர் இருபத்தைவர், சீக்கியப் படையினர் இருபத்தைவர். குக்ரி என்னும் விறிய ஈட்டிபோன்ற ஆயுதம் தாங்கிய கூர்க்கர் நாற்பதின்மர் என்பது அவன் தந்த கணக்கு.

டையரின் உத்தரவு

எவ்வித எச்சரிக்கையும் செய்யாமல் மக்களை நோக்கிச் சுடும்படி உத்தரவிட்டார் அந்த இரக்க மற்ற அரக்கன் டையர்.

முதலில் சில குண்டுகள் வானத்தை நோக்கிச் சுடப்பட்டன. அவ்வாறு சுட்ட படை வீரர்கள் கடிந்து கொள்ளப்பட்டனர். ஓர் ஐரோப்பிய அதிகாரி, “இந்தியச் சிப்பாய்களுக்கு நேராகத் துப்பாக்கியைக் குறிவைத்துக் கொண்டு வானத்தை நோக்கிச் சுட்டு குண்டுகளை ஏன் வீண் ஆக்குகின்றீர்கள்! அதற்குத்தானா நீங்கள் வரவழைக்கப் பட்டீர்கள்” என்று சில சுடுமொழிகளை வீசினான்.

மக்களை நோக்கிச் சுட்டனர்

அதற்குப் பின் சிப்பாய்கள், மக்களை நோக்கிச் சுட்டனர். மக்கள் தப்பித்துக் கொள்ள முயலும் நுழைவாயில்களை நோக்கியே பெரும்பாலும் சுட்டனர். துப்பாக்கிச் சூடு பதினைந்து நிமிடம் நீடித்தது.

சிப்பாய்கள் செலவு?

துப்பாக்கிச் சூடு முடிந்ததும், சிப்பாய்கள் அங்கிருந்து சென்றுவிட்டனர்.

அவல நிலை

காயம் அடைந்தவரும் உயிர் துறந்தவரும் தோட்டம் எங்கும் விழுந்து கிடந்தனர். ஹான்சாலி வழியில் இருபது பேரும் பர்ஜ் என்னுமிடத்துக்கு அருகில் பலரும் இறந்து கிடந்தனர்.

கிணற்றுக்கு அருகிலும் சமாதிக்குப் பின் புறமும் பிணங்கள் குவிந்து கிடந்தன. காயமுற்றுத் தப்பி ஓடியவர் பலரும், வீதிகளில் விழுந்து மடிந்தனர்.

அன்று குண்டுகள் பாய்ந்த அடையாளங்கள் ஜாலியன் வாலா தோட்டத்துச் சுவர்களில் இன்றும் காணப்படுகின்றது.

அங்கே இருந்த கிணற்றில் உயிர் தப்ப ஓடிய பலர், தஞ்சம் புகுந்து சவமாயினர்.

அந்தக் கிணறு “சஹீத் குவாம்” (தியாகக் கிணறு) என்ற பெயருடன் இன்றைக்கும் நினைவுச் சின்னமாகப் பாதுகாக்கப்பட்டு வருகின்றது.

பிரதாபசிங்கின் சாட்சியம்

"மக்கள் கூட்டம் அதிகமாக இருந்த இடம் பார்த்தே சிப்பாய்கள் சுட்டனர். ஓடித் தப்ப முயன்றவர்களை விடாமல் சுட்டனர்"

என்பது நேரில் கண்ட பிரதாப சிங் என்பவரின் சாட்சியம்.

டிப்டி கமிஷனர் அறிக்கை

"இதனால் பலர் இறந்து போயினர். பலர் காயமுற்றனர். போக்கிலிகள் சிலரால் ஒன்றும் அறியாத அப்பாவிகள் சிலர் தூண்டப்பட்டு, அங்குச் சென்று கொல்லப்பட்டதைக் குறித்து அரசு வருந்துகின்றது"

என்று டிப்டி கமிஷனர் ஓர் அறிக்கை வெளியிட்டான்.

சாதுகை மாக்கள் தலைவர்கள் உரையைத்
தம்செவி மடுப்பவர், மறலி
போதுகை அறியார் கணத்திடை ஆவி
பொன்றுகை தானும்அங் கறியார்
மீது கை வலிப்ப வெந்தழற் குண்டு
வீசுகென்று ஆணைஅங் கெழலும்,
தீதுஉகை குண்டு மாரி கை வகுத்தார்
செருக்கிய அரக்கரை அனையார்

கலைந்தனர் ஏக வாய்ப்பளித் திலரே!
கானிடைக் கவரிமான் கூட்டம்
குலைந்தன அழிய வளைந்தவெம் புலிபோல்
கொடியர் வெங் குண்டுவீ சுதலால்,
உலைந்தனர் பலரே! உலந்தனர் பலரே!
உய்வதற்கு ஓடிஅங் கெங்கும்
அலைந்தனர் பலரே! நாற்புறங் களிலும்
அகல்வதற்கு இடைவெளி பெறாதார்
கரம்இழந் தனரே! கண்இழந் தனரே!
கணத்திடைப் பாயழற் குண்டால்
சிரம்இழந் தனரே! செவிஇழந் தனரே!
சிறுகுடர் பெருங்குடர் சரிய
உரம்இழந் தனரே! உயிர் இழந் திலராய்
உய்வதற்கு அங்கும்இங் கோடித்
திரம்இழந தனரே! உரைஇழந் தனரே!
செயல்இழந்து அழிந்துஒழிந் தனரே!

விளைந்ததுஎன் என்று தெரிகிலர் யாரும்
வெருண்டனர் உருண்டனர். அந்தோ!
வளைந்த வன் சுவர்கள் தாண்டுதற் கியலார்,
வாசலுக்கு ஓடினர். உதிரம்
அளைந்தசெந் தரையில் விழுந்தனர். ஆவி
அழிந்தனர் ஒழிந்தனர். நெஞ்சம்
உளைந்தனர். உயிர்ப்புஅங் கடங்கினர். குருதி
ஊற்றினில் உடல்புரண் டிடவே!

தடைஎன வளைந்த சுவரினுக்கு அப்பால்!
தாவிட முயன்றவர் விழுந்தே
இடைமுறிந் தனரால்! எயிறுஉதிர்ந் தனரால்!
எலும்புகள் நொருங்கிஎஞ் சினரால்!
ஊடயுகம் இதுவோ எனவெரு வுற்றுக்
காலினிற் காலினில் சுழன்று
நடைமெலிந்து உளைந்தார்க்கு அரக்கர்பெய் குண்டு
நல்கியது அமைதியை அம்மா!

என்பது காந்தி காதை காட்டும் பஞ்சாப் படுகொலையின் அவலச் சித்திரம்.

கைவசம் குண்டுகள் இல்லை

மொத்தம் ஐயாயிரத்து அறுநூற்று ஐம்பது குண்டுகள் சுடப்பட்டன. அதற்குமேல் கைவசம் குண்டுகள் இல்லை. இருந்திருந்தால், இருபதாயிரம் பேரில் ஒருவராவது பிழைத்தல் அரிதாகிப் போயிருக்கும்.

டையர் கூறிய செய்தி

இந்தக் கொடுமைச் செயல்பற்றிப் பாதகன் டையரே கூறிய செய்திகளைக் காண்போம்.

"நான் ஜாலியன்வாலா தோட்டத்துக்குப் போனவுடன், சுடுமாறு உத்தரவிட்டேன். அரை வினாடி கூடச் சிந்திப்பதில் நேரத்தை வீணாக்கவில்லை. மக்கள், சொற்பொழிவைக் கேட்டுக் கொண்டிருந்தனர். ஒருவர் மேடையிலிருந்து கைகளை அசைத்து ஏதோ பேசிக் கொண்டிருந்தார்."

"ஐம்பது கஜ தூரத்துக்கு அப்பால் நான் துருப்புக்களை நிறுத்தினேன்.

"நான் ஏற்கனவே அறிவித்த உத்தரவுகளை மக்கள் அனைவரும் அறிந்திருப்பர் என்று நான் கூற இயலாது."

"கூட்டத்தைக் கலைப்பதற்கு வேறு வழி ஏதும் நான் சிந்திக்கவில்லை. கூட்டம் முழுவதும் கலைந்துபோகும் வரை சுடவேண்டியது கடமை என்று எண்ணினேன். பத்து நிமிடங்கள் துப்பாக்கிச் சூடு நடந்தது.

"சுடாமலே கூட்டத்தைக் கலைத்திருக்கலாம். ஆனால் நான் அப்படிச் செய்ய முயலவில்லை. சுடாவிட்டால் மக்கள் என்னை ஏளனம் செய்வர் என்றும் அது மடமை என்றும் நான் கருதினனேன்."

இது டையர் கூறிய திமிர் பேச்சின் ஒரு பகுதி.

நல்ல வேளையாகப் பீரங்கி வண்டிகள், தோட்டத்திற்குள் நுழைய முடியாமல் போனது. நுழைந்திருந்தால், பீரங்கிக்கும் வேலை கொடுத்திருப்பான். அவன் கூற்றுப் படி பத்து நிமிடங்களில் சுடுவதை நிறுத்தியதற்குக் காரணம் கைவசமிருந்த குண்டுகள் தீர்ந்து போனமையே யாகும். அதனால் சிலராவது உயிர் தப்ப முடிந்தது.

அரை நிமிடத்தில் முடிவு

"என்னிடம் குண்டுகள் இருக்கும்வரை நான் சுட்டுத் தீர்த்தேன் என்பது அவன் ஒழுகவிட்ட ஆணவக் கொழுப்பு. அரை நிமிடத்தில் சுடுவதென்று முடிவெடுத்தது பற்றியும் அவன் பெருமைபட்டுக் கொண்டான்.[1]

---

1. 'பால்டிப்பட்ஸ் ஓர் இரண்டு கால் மிருகம்'. இப்படித்தான் ரஷ்ய செய்தி விமரிசகர் யூரிஜுகோவ், இரண்டாம் உலகப் போரின் போது, ஜப்பான் நாட்டில் இரோசிமா நகர் மீது அணுகுண்டு வீசி ஆயிரக்கணக்கானவரைக் கொன்று குவித்த அமெரிக்கனைப் பற்றிக் கடுமையாக விமரிசித்துள்ளார்.

   'இரோசிமா மீது அணுகுண்டு வீசி நாற்பது ஆண்டுகள் ஆன பின்பும் அது பற்றி வருந்தவும் இல்லை. ஓர் இரவுகூடக் கவலைப்பட்டுத் தூங்காமல் இருந்ததும் இல்லை' என்று டிப்பட்ஸ் என்ற அந்த இருகால் விலங்கு ஊளையிட்டுள்ளது.

   "ரஷியாவைவிட அமெரிக்கா அணுசக்தியில் விஞ்சியுள்ளது. இனி, போர் மூளுமானால், சில மணி நேரத்தில் அப்போர் முடிந்துவிடும். ஏனெனில், கடல் கடந்து துருப்புக்களை விமானத்தில் கொண்டு செல்ல அதிக கால தாமதமாகும். ஆதலால் அணு குண்டுகளைப் பயன்படுத்துவதே நல்லது" என்றும் அவன் குரைத்துள்ளான்.

   இரோசிமாவை அழித்த அரக்கன், பால் டிப்பட்ஸ் போன்ற இருகால் மிருகங்கள் உள்ள வரை உலகம் அமைதியாக இருக்க முடியாது என்பதும், யூரிஜுகோவின் கடுமையான விமரிசனம். இது அண்மையில் வெளி வந்த செய்தி. டிப்பட்ஸை விடக் கொடுமையில் சிறந்தவன் டையரே என்பது அவன் ஆணவப் பேச்சால் அறிகின்றோம்.

துப்பாக்கிக்குண்டுகள் தீர்ந்தவுடன், துருப்புக்களுடன் டையர் அவ்விடத்தை விட்டு அகன்றான்.

டையரின் இறுமாப்பு

காயம் பட்டவர்கள் பகைவரா யிருப்பினும், அவர்கள் உயிர் பிழைக்க உதவுவது ஆள்வோரின் மனிதாபிமானக் கடமை என்பது அனைவரும் ஒப்புவர். ஆனால் டையரோ, காயம் பட்டவரைக் கவனிப்பது தன் கடமை அன்று" என்று இறுமாப்புப் பேசினான்.

சுடுவது மட்டுமே அவனுக்குக் கடமையாகத் தோன்றியது.

இத்தகைய மாபெரு வீரனை வரலாறு புதிதாக அறிமுகம் செய்து கொள்ள நேர்ந்தது!

இரத்தின தேவியின் அனுபவம்

துப்பாக்கிச் சூட்டினால் அந்தத் தோட்டத்தில் நிலவிய அவல நிலையையும் மக்கள் பட்ட துன்பத்தையும் நேரில் கண்ட ஒருவரிடம் கேட்டு அறிந்துகொள்வது நலம் அன்றோ! அந்தப் படுகொலையில் கணவனை இழந்தவள் இரத்தின தேவி. அவரிடம் கேட்டு அறிவது பொருத்தமாக இருக்கும்.

"தோட்டத்தில் துப்பாக்கிச் சூடு நடந்தபோது, என் வீட்டிலிருந்தேன். என் வீடு தோட்டத்துக்கு அருகிலேயே இருக்கின்றது. என் கணவர் கூட்டத்துக்குச் சென்றமையால், துப்பாக்கிச் சத்தம் கேட்டவுடன் அங்கு ஓடினேன். வேறு இருவர் பெண்களும் என் துணைக்கு ஓடி வந்தனர்.

"பிணக் குவியல்களைக் கண்டு திடுக்கிட்டேன். என் கணவரைத் தேடத் தொடங்கினேன். இரத்த வெள்ளத்தில் நடந்தேன். பிணங்களைத் தாண்டித் தாண்டிச் சென்றேன். முடிவில், என் கணவரின் உயிர் துறந்த உடலைக் கண்டேன்.

"சற்று நேரத்தில் எனக்கு அறிமுகமான இருவர், அங்கு வந்து சேர்ந்தனர். என் கணவரை எடுத்துச் செல்வதற்குச் சார்பாய் (கட்டில்) கொண்டு வரும்படி அவர்களை அனுப்பினேன். என்னுடன் வந்த இருவர் பெண்களையும் அனுப்பிவிட்டேன்.

"இரவு எட்டுமணி ஆகிவிட்டது. இரவு எட்டுமணிக்கு மேல், யாரும் வீட்டைவிட்டு வெளியே வரலாகாது என்று ஊரடங்கு உத்தரவு அமுலில் இருந்தமையால், போனவர்கள் திரும்ப இயலாமற் போனது. நான் அழுது கொண்டே இருந்தேன்."

"வெந்த வீட்டில் பிடுங்கியது மிச்சம் என்பது போல், இறந்தவர்களிடம் ஏதேனும் அகப்படலாம் என்று சில கயவர்கள் பிணங்களைத் துழாவிக் கொண்டிருந்தனர்.

"அந்நேரம் ஒரு சீக்கியர் அங்கு வந்தார். இரத்த வெள்ளத்தில் கிடக்கும் என் கணவர் வேறு இடத்துக்குக் கொண்டு போக உதவும்படி, அவரிடம் வேண்டினேன். அவர் தலையையும் நான் காலையும் பிடித்துத் தூக்கி அப்பாலிருந்த ஒரு மரப் பலகையில் படுக்க வைத்தோம்.

"இரவு பத்து மணியாகி விட்டது. யாரையாவது உதவிக்கு அழைத்து வரலாம் என்று 'அப்ளோவாகாத்' என்ற இடம் நோக்கிப் புறப்பட்டேன். சிறிது தூரம் சென்றதும், ஒரு வீட்டின் பலகணி வழியே ஒருவர் தென்பட்டார். அவர் 'நீ எங்கே போகின்றாய்' என்றார். 'என் கணவரைக் கொண்டு செல்வதற்கு யாரையாவது அழைக்கலாம் என்று போகின்றேன்' என்றேன். 'ஒரு காயம்பட்டவருக்குச் சிகிச்சை செய்து கொண்டுள்ளேன். இரவு எட்டுமணிக்கு மேலாகிவிட்டமையால், வீட்டைவிட்டு வெளியே வந்து உனக்கு உதவி செய்ய இயலாதவன்ாயுள்ளேன்' என்று கூறிவிட்டுத் தம் பணியில் ஈடுபடலானார்.

"நான் மேலும் சென்றேன். எதிர்ப்பட்ட ஒருவரிடம் உதவிக்கு வரும்படி கேட்டேன். அவரும் முன்னவர் சொன்ன காரணத்தையே கூறி மறுத்து விட்டார்."

"மேலும் நடந்தேன். ஒரு வயோதிகர் ஓரிடத்தில் அமர்ந்து சுருட்டுப் பிடித்துக் கொண்டிருந்தார். அவரிடமுன் உதவி செய்யுமாறு வேண்டினேன். அவர் தம் அருகே படுத்திருந்தவர் களை எழுப்பி, எனக்கு உதவி செய்யப் போகுமாறு கூறினார். 'இரவு பத்து மணி ஆகிவிட்டது. இனிமேல் வெளியே போனால் சுட்டு விடுவார்கள்' என்று அவர்கள் மறுத்து விட்டனர்.

"நான் என்ன செய்வேன்! மீண்டும் கணவர் அருகே வந்து அமர்ந்து கொண்டேன்

"தோட்டத்தில் சிந்திய மனித இரத்தம் குடிப்பதற்காக நாய்கள் படையெடுத்துவிட்டன. நல்லவேளையாக எனக்கு ஒரு மூங்கில் தடி கிடைத்தது. அதைக் கொண்டு நாய்கள் நெருங்காதபடி பார்த்துக் கொண்டேன்.

"என் கணவருக்கு அருகே மூவர் வேதனையால் துடித்துக் கொண்டிருந்தனர். ஒரு எருமை மாடும் குண்டு பட்டு உயிருக்கு மன்றாடிக் கொண்டிருந்தது.

"பன்னிரு வயதுச் சிறுவன் ஒருவன் காயம்பட்டு உயிருக்கு மன்றாடிக் கொண்டிருந்தான். என்னைப் பார்த்து, 'தாயே! என்னை விட்டுவிட்டுப் போய் விடாதே!' என்று கெஞ்சினான். குடிக்கத் தண்ணீர் கேட்டான். அந் நேரம் தண்ணீருக்கு நான் எங்கே போவேன்!

"அருகில் யாரோ ஒருவர் சுவரோடு சுவராய்ச் சாய்ந்து இருந்தார். தன் காலைச் சிறிது தூக்கி விடும்படி என்னை வேண்டினார். நான் அவ்வாறே செய்து, அவர் நிற்பதற்கு உதவினேன். அவரின் துணிகள் இரத்தத்தால் நனைந்திருந்தன.

"காலை ஆறு மணிக்கு நான் அனுப்பிய இருவரும் வேறு சிலருடன் ஒரு கட்டிலை எடுத்துக் கொண்டு வந்து சேர்ந்தனர். அந்தக் கட்டிலில் வைத்து என் கணவரை எடுத்துச் சென்றோம்.

"இரவு முழுவதும் தங்கள் உறவினரைத் தேடிக் கொண்டிருந் தனர் பலர். அன்று இரவு முழுவதும் பிணங்களுக்கு நடுவேயே இருக்க நேர்ந்தது. அன்று எனக் கிருந்த மன நிலையை விளக்கச் சொற்களுக்கு ஆற்றல் போதகாது.

"பிணங்கள் குவிந்து கிடந்தன. பல குழந்தைகளும் இறந்து கிடந்தன. நாய்களின் குரைப்பும் கழுதைகளின் கத்தலும் அச்சத்தை அதிகப்படுத்தியது.

இந்த அம்மையாரின் கண்ணீர்க் கதை இன்று படித்தாலும் நெஞ்சைப் பிழிகின்றது அன்றோ! பல்லாயிரத்தில் ஒன்றுதான் இந்தக் கதை! இன்னும் சில கதைகளைக் கேட்டால் நம் நெஞ்சு பொறுக்காது. ஆதலால் இத்துடன் நிறுத்திக் கொண்டு மேலே செல்வோம்.

இறந்தவர் எண்ணிக்கை

தோட்டத்தில் இறந்தவர் எண்ணிக்கை பற்றிப் பற்பலர் பற்பலவாறு கூறியுள்ளனர். உண்மையான கணக்கு அறிவது கடினமாக உள்ளது.

இரு நூற்றுத் தொண்ணூறு பேரே இறந்தனர் என்கின்றது, அரசின் அறிக்கை.

மாண்டவர் நானூற்றுவர்; காயமுற்றவர் ஆயிரத்து இருநூற்றுவர் என்கின்றது 'ஏ ஹிஸ்டரி ஆப் பிரீடம் ஸ்டரக்கில் ஆப் இந்தியா' என்ற நூல்.

1650 ரவுண்டுகள் சுடப் பட்டன. மாண்டவரும் காயம் பட்டோரும் ஆயிரத்து ஐந்நூற்றுப் பதினறுவர் என்கின்றது இன்னொரு கணக்கு. சேவா சமிதியார், முநநூற்று முப்பது பேர் என்று கணக்கிட்டுள்ளனர். மாண்டவர் முந்நூற்று எழுத்தொன்பதின்மர். காயம் பட்டவர் ஆயிரத்து இருநூற்றுவர். சுடப்பட்ட ஒவ்வொரு சூடும் வீணாகவில்லை என்கின்றது 'நாஷனலி சம் ஆப்ஆசியா' என்ற நூல்.

லாலா கிரிதர் லால் என்பவர். ஆயிரத்துக்கும் அதிகம் என்கின்றார். கொலை செய்யப்பட்டோர் ஆயிரவர்,' காயம் பட்டோர் இரண்டாயிரவர் என்பது, காந்தி படம் தயாரித்த ஆட்டன்பரோவின் கூற்று. ஹண்டர் கமிட்டி முந்நூற்று எழுபத் தொன்று என்கின்றது.

இறந்தவர்களில் எண்பத் தெழுவர் வெளியூர்க்காரர்கள் என்றும் ஹண்டர் கமிட்டி கூறுகின்றது. காயம் பட்டவர் கணக்கிலர் என்பதை மட்டும் அனைவரும் ஒருமுகமாக ஒப்புக் கொள்கின்றனர்.

காமன்ஸ் சபையில் கர்னல் வெட்ஜ் வுட்

இக் கொடுமை பற்றிப் பிரிட்டிஷார் என்ன கருத்துக் கொண்டிருந்தனர்? இதற்கு விடைகாண வேண்டுமானால், லண்டன் காமன்ஸ் சபையில் 1919 டிசம்பர் 22 இல் கர்னல் வெட்ஜ் வுட் என்பவரின் பேச்சைக் கேட்டல் வேண்டும்.

"அமிருத சரசில் நடந்த படுகொலை பற்றி அறிந்து, இங்கிலாந்து நடுங்கிக் கிடக்கின்றது. மிகச் சில ஏடுகள் தவிர, பெரும்பாலான ஏடுகள் பிரிட்டிஷ் மக்களின் கருத்தையே பிரதிபலித்தன எனலாம்.'

"அமிருத சரசில் நடந்தது என்ன? சமய விழா நடந்தது. பல்லாயிர மக்கள் விழாவுக்காகத் திரண்டனர்.

"ஏப்ரல் 9இல் எங்கோ கொண்டு செல்லப்பட்டுக் காவலில் வைக்கப்பட்ட டாக்டர் கிச்சுலு, சத்தியபாலு ஆகிய இருவரையும் விடுதலை செய்தல் வேண்டும் என்று கேட்டுக் கொள்வதற்காக, அவர்களைப் பின்பற்றுவோர் பலர் டிப்டி கமிஷனரிடம் தங்கள் பிரதிநிதிகளை அனுப்பினர்.

“அந்தக் கூட்டம் இடையே தடுக்கப்பட்டது. கையில் சிறு தடிகூட இல்லாமலிருந்த அப்பாவி மக்கள் மீது, துருப்புக்கள் காரணமே இல்லாமல் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். அதனால் மக்களின் ஆத்திரம் வரம்பு மீறியது. மூன்று பிரிட்டிஷார் கொல்லப்பட்டனர். ஒரு பெண் அடிக்கப்பட்டாள்.

“ஜெனரல் டையர் ஏப்ரல் 10 இரவு அமிருதசரசுரு வந்தார். அனைத்துச் சிவில் அதிகாரங்களும் அவரிடம் ஒப்புவிக்கப் பட்டன. எவ்விதக் கூட்டமும் நடைபெற லாகாதென டையர் வாய்மொழி உத்தரவிட்டார்.

“இரண்டுநாள்வரை நகரம் அமைதியாகவே இருந்தது.எவ்வித வன்செயலும் நடைபெறவில்லை. “இந்நிலையில் ஜாலியன் வாலா தோட்டத்தில் ஒரு கூட்டம் நடைபெறுவதாக டையர் கேள்வியுற்றார். உடனே ஐம்பது துருப்புக்களுடன் அங்கு விரைந்தார்.

“ஜாலியன் வாலா தோட்டம் அரை மைல் சதுரமுள்ள ஒரு மைதானம். ஒரே சமயம் மூன்று பேர் மட்டுமே நுழையக் கூடிய ஒரே வாசல்தான் அதற்கு உண்டு. அதைச் சுற்றி ஏழடி உயரமுள்ள சுவர்களும் வீடுகளும் உண்டு.”

“மக்கள் நெருக்கிக் கொண்டு செல்லக் கூடிய மிகச் சிறிய சந்துகள், மேலும் இரண்டு மூன்று உண்டு.

“டையருடைய படைவீரர்கள், ஓர் உயர்ந்த மேடையில் நிறுத்தப்பட்டனர். அரை நிமிடத்தில் சுடுவதற்கு ஆணை யிட்டான் டையர். எச்சரிக்கை ஏதுமே செய்யப்படவில்லை.

“தலைவர்களின் சொற்பொழிவினை அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்த ஐயாயிரம் முதல் இருபதினாயிரம் பேர்வரை யிருந்த கூட்டமானது காரணமின்றிச் சுடப்பட்டது. பத்து நிமிடம் இடைவிடாமல் சுடப்பட்டமையால் நானூறு ஐந்நூறு பேர் இறந்திருக்கலாம். ஆயிரத்து ஐந்நூறு பேர் காயம் பட்டிருக்கலாம் என்று டையரே ஒப்புக் கொண்டுள்ளான்.

“மக்கள் என்ன செய்வர்ணூ! அவர்கள் தப்பிச் செல்ல வாய்ப்பு இல்லை. பத்து நிமிடங்களில் குண்டுகள் அனைத்தும் தீர்ந்து விட்டமையால், துருப்புக்கள் சென்றுவிட்டன.

“இரண்டு நாள்கள் வரை, காயமுற்றவர் அங்கேயே துடிதுடித்துக் கொண்டு கிடந்தனர். தாகத்துக்குத் தண்ணீர்

கிடைக்காமல் பலர் மாண்டு போயினர். பசி பொறுக்காமல் பரிதவித்துச் செத்தவர் கணக்கிலர். மண்ணைத் தின்று மடிந்தவரும் இரத்தம் கக்கி இறந்தவரும் எண்ணிலர்!

"காயமுற்றவரைக் காப்பாற்ற ஒருவருமே முன்வரவில்லை. அருகில் வசித்த சிலர் மட்டும், பிணக் குவியலினிடையே கிடந்த தங்கள் உறவினரைத் தேடி எடுத்துச் சென்றனர். உள்ளூரில் உறவினர் ஒருவரும் இன்றி வெளியூரிலிருந்து வந்தவர்கள், காயமுற்றுப் பரிதாபமாகச் செத்தார்கள்.

"அந்தோ! பிரிட்டிஷ் ஆட்சியில் இத்தகைய கொடுமை நடந்துள்ளது. காயமுற்ற ஏதாவதொரு பறவையைக் கண்டால்கூட, அதைக் காப்பாற்றப் பெருமுயற்சி செய்வது பிரிட்டிஷாரின் இயல்பு. ஆனால், காயமுற்ற மனிதர்கள் - இந்தியர்கள் - இரண்டுநாள் வீழ்ந்து கிடந்தனர். பையப் பைய இறந்தார்கள். அவர்களை காப்பாற்றப் பிரிட்டிஷார் யாருமே முன்வரவில்லை."

"பிரிட்டிஷ் வரலாற்றில் இது ஒரு கறைபடிந்த ஏடு. இதற்கு முன் இப்படி நேர்ந்ததே இல்லை. நாம் இந்தியாவுடன் தொடர்பு கொண்டது முதல் இத்தகைய கொடுமை நடந்ததே இல்லை."

"பிரிட்டிஷார்க்குக் களங்கம் உண்டாக்கிய இந் நிகழ்ச்சிக்கு ஒப்புக் காண வேண்டுமாயின், சில நூற்றாண்டுகளுக்கு முன்னே செல்லல் வேண்டும். கல்கத்தா இருட்டறையும் கான்பூர் படுகொலையும் வரலாற்று ஏடுகளில் உண்டு. கான்பூரில் ஒரு கிணற்றில் பிணங்கள் குவிந்து கிடந்தன என்று சொல்லப்படுகின்றது.

"சில நூற்றாண்டு இடைவெளிக்குப் பிறகு, இந்தக் கொடுமை நடந்துள்ளது. இப்போது இந்திய மாணவர்களைக் கான்பூருக்கு அழைத்துச் சென்று படுகொலை நடந்த பகுதியைக் காட்டுவது போல், எதிர்காலத்தில் ஜாலியன் வாலா தோட்டத்துக்கும் அழைத்துச் சென்று காட்டுவார்கள். அப்போது அந்த மாணவர்களின் உணர்ச்சி எப்படியிருக்கும் என்பதைச் சிறிது சிந்தித்துப் பாருங்கள்.

"எதிர்காலத்தில் அங்கு ஒரு நினைவுச் சின்னம் நிறுவப்படும். ஆண்டுதோறும் ஊர்வலங்கள் நடைபெறும். பிரிட்டிஷார் வெறுந்தலையராய் அங்கு நிற்க வேண்டியிருக்கும். இந்தக் கொடுமையானது, அன்புடன் பழக வேண்டிய இரு

வகுப்பாரைப் பிரித்து விட்டது. உலகில் இதுகாறும் பிரிட்டிஷார் தேடிய பெருமையைக் குலைத்து விட்டது.

"நீங்கள் இந்தியாவில் இப்படிச் செய்துவிட்டீர்களே!" என்று அமெரிக்கர் ஏளனம் பேசுவர். ரஷ்யாவில் கொலைகள் நடக்கும்போது, நாம் ஒன்றும் வாய்திறத்தல் இயலாது. 'நீங்கள் இந்தியாவில் செய்ததைவிட நாங்கள் மோசமில்லை' என்று கூறுவார்கள்.

"இங்ஙனமே பல நாட்டவரும் ஏளனம் செய்வர். இங்கிலாந்தின் இசைவினாலேயே அமிருத சரசில் இந்தக் கொடுமைகள் நடைபெற்றன என்று உலகம் எண்ணும்.

"பிரஷ்யாவில் நடந்துள்ள கொடுமையைக் காட்டிலும் இது கொடுமையானது. ஜெர்மானியர் இதைவிடக் கேவலமாகப் பெல்ஜியத்தில் ஒன்றும் செய்துவிடவில்லை. மனித தர்மத்தைப் பற்றிப் பேச நமக்கு வாயில்லாமல் செய்துவிட்டது இக் கொடுமை."

பிரிட்டிஷ் ஆட்சியாளரின் இரும்பு மனத்தையே உலுக்கி உருக்கி இரக்கம் சுரக்க வைத்து விட்டது என்றால், பஞ்சாப் படுகொலையின் கொடுமையை இன்னும் விளக்க வேண்டுமோ!

அடக்கம் செய்ய அனுமதி

முடிவில் ஏப்ரல் 14இல் 'மக்கள் தங்கள் விருப்பப்படி இறந்தவர்களின் உடல்களை அடக்கம் செய்யலாம். ஆனால் எவ்விதமான ஆர்ப்பாட்டமும் கூடாது' என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. மக்கள் இறந்தவர்களை அடக்கம் செய்யலாயினர். அன்று நகரம் அமைதியாகவே இருந்தது.

நகர் எங்கும் சுற்றிய டையர்

தன் கட்டளைகள் நன்கு அமுல் செய்யப்படுகின்றனவா என்று கண்காணிப்பதற்காக, நகரெங்கும் சுற்றி வந்தான் டையர்.

கிரிதரலாலின் விளக்கம்

"ஜாலியன் வாலா தோட்டத்தைப் பார்த்து வரலாம் என்று போனேன். ஹான்சிலி கேட் வழியாகச் சென்றபோது, அதுவரை அப்புறப்படுத்தப்படாமல், ஏழெட்டுப் பிணங்கள் கிடந்தன. அதைக் கண்டதும் உள்ளே நுழைய மனம் வரவில்லை"

என்று கிரிதரலால் என்பவர் அன்றைய நிலையை விளக்குகின்றார்.

டிப்டி கமிஷனர் கூட்டிய கூட்டம்

முனிசிபல் கமிஷனர்கள், மாஜிஸ்திரேட்டுகள், வணிகர்கள் அடங்கிய கூட்டத்தை டிப்டி கமிஷனர் கூட்டினார். அன்று பகல் இரண்டு மணிக்குப் போலீஸ் நிலையத்தில் கூட்டம் நடந்தது. டிப்டி கமிஷனர் கிச்சன் பேசினார்.

> "உங்களுக்குப் போர் வேண்டுமா? அமைதி வேண்டுமா? நாங்கள் எதற்கும் சித்தமா யிருக்கின்றோம். அரசுக்கு அனைத்து வலிமையும் உண்டு. ஜெர்மனியையே வென்ற எங்களுக்கு இயலாததும் உண்டோ? ஜெனரல் டையர் இப்போது சில உத்தரவுகளை அறிவிப்பார். அமிருத சரசு இப்போது அவர் கைவசம் உள்ளது. நான் ஒன்றும் செய்ய இயலாது. நீங்கள் டையரின் உத்தரவுகளுக்குக் கட்டுப்பட்டு நடத்தல் வேண்டும்"

என்று இரண்டு நிமிடத்தில் தம் பேச்சை முடித்துக் கொண்டான் டிப்டி கமிஷனர்.

சைத்தான் வேதம் ஓதியது

அதற்குப்பின் சைத்தான் வேதம் ஓதத் தொடங்கியது. ஆம்! டையர் பேசத் தொடங்கினான். அவன் உருது மொழியில் சில கருத்துக்களை உதிர்த்தான். அவன் நின்று கொண்டே பேசியதால், அனைவரும் நின்று கொண்டே இருக்க வேண்டியதாயிற்று.

> "நான் ஒரு படைவீரன் என்பதை அறிவீர்கள். உங்களுக்கு வேண்டியது போரா! அமைதியா? போரை விரும்பினால், நாங்கள் தயாராக உள்ளோம். அமைதி வேண்டுமானால், என் கட்டளைக்குக் கீழ்ப்படியுங்கள். கடைகளைத் திறவுங்கள். இல்லையேல், நான் சுடுவேன். என்னைப் பொருத்தமட்டில், பிரெஞ்சுப் போர்க் களமும் அமிருத சரசும் ஒன்றுதான்.
>
> "நான் படைவீரன் ஆதலால், நேராகவே செல்வேன். அப்புறம் இப்புறம் திரும்பமாட்டேன். நீங்கள் அரசுக்கு விரோதமாகப் பேசுகின்றீர்கள். ஜெர்மனியிலும் வங்காளத்திலும் படித்து வந்தவர்கள், இராஜத் துரோகமாகப் பேசுகின்றார்கள். நான் அவர்களை வேரோடு அழித்து விடுவேன். நான் முப்பதாண்டுகள் இராணுவத்தில் பணியாற்றியுள்ளேன். இந்திய, சீக்கிய சிப்பாய்களை நான் நன்கு அறிவேன். கலகம்

செய்பவர்கள் யார் என்று நீங்கள் எனக்குத் தெரிவித்துவிடல் வேண்டும். அவர்களை நான் சுட்டுத் தள்ளிவிடுவேன். கடைகளை உடனே திறவுங்கள்."

தெருப் பொறுக்கியின் பிதற்றல்

இது ஜெனரல் டையரின் அதிகாரப் பிதற்றல். இதைப் படிப்பவர்கள் ஓர் பொறுப்புள்ள அதிகாரியின் பேச்சாக உணரமாட்டார்கள். யாரோ பொறுப்பற்ற ஒரு தெருப் பொறுக்கியின் பிதற்றலாகத்தான் தெரியும். இது இந்தியாவின் தலைவிதி! இத்தகைய தெருப் பொறுக்கி வெறி நாய்களின் காலடியில் கிடந்து துவள வேண்டிய பரிதாப நிலை ஏற்பட்டு விட்டதே!

அகம்பாவ வாந்தி

ஜெனரல் இர்விங் என்பவனும் டையர் வாந்தியெடுத்ததையே மீண்டும் வாந்தி யெடுத்தான். ஏப்ரல் 10 இல் நடைபெற்ற நிகழ்ச்சிகளுக்குப் பிறகு அதிகார வர்க்கத்தினர் மிகவும் அச்சம் கொண்டனர். அச்சம் ஆத்திரமாகியது. அந்த ஆத்திரத்தால், வெளிப்பட்டனவே இந்த அகம்பாவ வாந்திகள்.

அதிகாரியின் ஊளை

ஏப்ரல் 11இல் சவ அடக்கத்துக்கு அனுமதி பெறும் பொருட்டு, லாலா தோலன் தாஸ் என்பவர் அதிகாரிகளைக் காணச் சென்றார்.

அப்போது மிஸ்டர் செய்மர் என்ற அதிகாரி, "ஓர் ஐரோப்பியர் உயிருக்கு, ஆயிரம் இந்தியர் உயிர் பறிக்கப்படும்" என்று ஊளையிட்டான்.

இன்னொரு அதிகாரியின் குரைப்பு

இன்னோர் அதிகாரி நகரத்தையே சுட்டு எரித்துவிடப் போவதாகக் குரைத்தான்.

எந்த எந்த இடத்திலிருந்து குண்டுகள் போட்டால் அரைமணி நேரத்திற்குள் நகரம் தரைமட்டம் ஆகும் என்பதை வரைபடத்துடன் விளக்கிக் காட்டினான் மற்றொருவன்.

வேறு ஓர் அதிகாரியின் உறுமல்

அமிருத சரசு மருத்துவமனை சர்ஜன் ஆன பால முகுந்தர் என்பவரை நோக்கி, வேறோர் அதிகாரி உறுமினான்:

“இரயில்வே மருத்துவ மனைக்குச் சென்று, அடுத்த உத்தரவு வரும் வரைக்கும் இரவும் பகலும் அங்கேயே தங்கியிருத்தல் வேண்டும். அங்கு ஐந்து நிமிடம் இல்லாவிட்டால் கூட, ராம் பாக்கில் (டையரின் தலைமையகம்) உள்ள ஒரு மரத்தில் பிற போக்கிரிகளோடு உம்மையும் கட்டி வைத்துச் சவுக்கால் அடிப்பேன்”. ஐரோப்பிய அதிகாரிகள், இந்தியர்களிடம் எவ்வளவு அகம்பாவத்துடன் மரியாதைக் குறைவாக நடந்து கொண்டார்கள் என்பதை, இங்குக் குறிப்பிட்டவற்றிலிருந்து தெளிவாகத் தெரிந்து கொள்ளலாம்.

படித்துப் பட்டம் பெற்றுப் பதவியில் உள்ள சர்ஜனுக்கே இந்தமரியாதை என்றால், சாதாரணக் குடிமகனைப் பற்றிக் கூறவா வேண்டும்!

மக்களின் நம்பிக்கை

ஏப்ரல் 15இல் அனைத்துக் கடைகளும் திறக்கப்பட்டு விட்டன. நகரில் அமைதி ஏற்பட்டுவிட்டமையால், சிவில் ஆட்சி திரும்பிவிடும் என்று மக்கள் நம்பினர்.

இராணுவச் சட்டப் பிரவேசம்

அந்த நம்பிக்கை வீணானது மட்டும் அல்ல. இராணுவச் சட்டமும் புகுந்து கொண்டது. ஏப்ரல் 15 முதல் ஜுன் 9 வரை அச் சட்டம் நீடித்தது. இந்த இராணுவச் சட்டம், மக்களுக்கு இழைத்த இன்னல்கள் எண்ணும் தரம் அன்று. எமக்கு எழுதும் திறம் இன்று.

மக்களுக்குப் பயத்தை ஊட்டுவதற்காக, பலவகையான அதிசயக் கொடுமைகள் அனுசரிக்கப்பட்டன.

சிறப்புப் போலீசுப் பணி

அமிருத சரசிலுள்ள வக்கீல்கள் அனைவரும் சிறப்புப் போலீசாராக நியமிக்கப்பட்டுத் துன்புறுத்தப்பட்டனர். பல ஏச்சுப் பேச்சுக்களுக்கு வக்கீல்கள் இலக்காயினர்.

சாதாரணக் கூலிகளைப் போல், சாமான்களைச் சுமந்து கொண்டு நல்ல வெயிலில் ஊர் முழுவதும் சுற்றிவரும்படி கட்டாயப்படுத்தப்பட்டனர். ஆங்காங்கே மக்கள் சவுக்கடி படுவதைக் கட்டாயமாகக் காண வேண்டும் என்று வக்கீல்களை வற்புறுத்தினர். கட்டளைக்குக் கீழ்ப்படியாதவர்களை உதைப்போம் என்று அச்சுறுத்தினர்.

வக்கீல்கள் தாமாகவே விரும்பிப் போலீசுப் பணியாற்ற முன்வந்தனர் என்று அதிகாரிகள் பசப்பினர்.

லாலா கன்னைய லாலின் அனுபவம்

லாலா கன்னையலால் என்பவர் ஒரு வயோதிக வக்கீல். மூப்பின் காரணமாகவும் அவர் தப்பவில்லை. போலீசாக நியமிக்கப்பட்டார்.

சிறப்புப் போலீசுப் பணி அனுபவத்தைப் பற்றி அவரைச் சிறிது பேச விடுவோம்.

> "இந் நகரிலுள்ள பிற வக்கீல்களைப் போலவே, நானும் போலீசுப் பணி புரியக் கட்டாயப் படுத்தப்பட்டேன். 'நகரில் அமைதியை நிலைநாட்டுதற்கே, இந்தப் பணி' என்று கூறினர். அமைதிப் பணிக்குப் போலீசாரே போதுமான அளவில் இருந்தனர். நகரிலும் அமைதியே நிலவியது. எங்களை அவமதிப்பதற்காகவே, இந்தப் பணி தரப்பட்டது.
>
> "என் வயோதிக வயதில், மரச் சாமான்களைத் தூக்கியவாறு வெயிலில் தள்ளாடித் தள்ளாடி நடந்தேன். கூலிக்காரன்போல் என்னிடம் வேலை வாங்கினர். என்மீது வீசப்பட்ட வசைமொழிகளோ ஏராளம்! சுமத்திய சிறுமைகள் எண்ணில!
>
> "வக்கீல்களே பொது விவகாரங்களில் அதிகமாகத் தலையிடுகின்றனர். ரௌலட் சட்ட எதிர்ப்பிலும் அவர்களே முன்னணியில் உள்ளனர். அதற்காக அவர்களைத் தண்டித்தல் வேண்டும் என்பதற்காகவே எங்களுக்குச் சிறப்புப் போலீசுப் பணி தரப்பட்டது என்பது உறுதி."

மொத்தம் தொண்ணூற்று மூவர் இப் பணியில் ஈடுபடுத்தப்பட்டதாக ஒரு கணக்குக் கூறுகின்றது.

சல்யூட்

நகரில் உள்ளார் யாராயினும் ஐரோப்பியரைக் கண்டால் சல்யூட் (வணக்கம்) செய்தல் வேண்டும். அவ்வாறு செய்யாதவர்கள், காவலில் வைக்கப்பட்டனர்; வெயிலில் நிறுத்தி வைக்கப்பட்டனர்.

தெரிந்த அளவு சல்யூட் செய்தால் போதாது. அதற்காகச் சில முறைகள் உண்டு. அந்த முறைப்படி செய்தல் வேண்டும்.

அந்த முறைகளைக் கற்பதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டன. முறைப்படி சல்யூட் செய்யத் தெரியாவிட்டால், கௌரவமான பிரமுகர்கள்கூடக் கை விலங்குடன் தெருவில் அழைத்துச் செல்லப்பட்டனர்.

ஊர்ந்து செல்லுதல்

சில தெருக்களில் காலால் நடந்து செல்லுதல் கூடாது. படுத்து மார்பினால் பாம்புபோல் ஊர்ந்துதான் செல்ல வேண்டும். ஊர்ந்து செல்லாவிட்டால் சவுக்கடி கிடைக்கும். இந்தக் கொடிய வினோதமான உத்தரவுக்கு, ஒரு குருடன் கூடத் தப்ப முடியவில்லை. இப்படி ஓர் உத்தரவு இருப்பதை அறியாத அவன் தண்டிக்கப்பட்டான்.

சவுக்கடி

இரு கைகளையும் உயரத் தூக்கிக் கட்டிவிட்டுச் சவுக்கால் அடிக்கும் தண்டனை நடுத் தெருவில் நிறைவேற்றப்பட்டது.

கட்டில் காலின்கீழ் கை

போலீசாரின் விருப்பப்படி பொய்ச் சாட்சியம் தர மறுத்தால், அவர்களின் கைகளைக் கட்டிற் காலின் கீழ் வைத்து, அதன் மேல் பலர் அமர்ந்து அழுத்துவது ஒருவகைப் புதுத் தண்டனை.

காவலில் உள்ளவர்களுக்கு இயற்கைக் கடன் கழிக்கக் கூட அனுமதி மறுக்கப்பட்டது.

மிகச் சிறிய தண்டனைகள்

திட்டுவதும், கன்னத்தில் அடிப்பதும், காலால் எற்றுவதும், மீசை, தாடிகளைப் பிடித்து இழுப்பதும் மிகச் சிறிய தண்டனைகளாகக் கருதப்பட்டன.

சிலர் கைகளில் நெருப்புக் கங்குகள் வைக்கப்பட்டன.

சிலர் கைகளில் ஆணிகளை அடித்தனர்.

தண்ணீர் கேட்டவர்கள் சிறுநீர் பருகும்படி வற்புறுத்தப்பட்டனர்.

சிலரின் குதங்களில் சிறு கம்புகள் செருகப்பட்டன.

இந்த இருபதாம் நூற்றாண்டில் நாகரிகத்தின் உச்சியைத் தொட்டுவிட்டோம் என்று பெருமையடித்துக் கொண்டு பிரிட்டிஷ் ஆட்சியில் நடந்த நாகரிகக் கொடுமைகளில் சில இவை.

ஊர்ந்து செல்வது என்றால் என்ன?

இத்தகைய தண்டனைகளில் மிகமிகக் கொடியதான ஊர்ந்து செல்வது பற்றிச் சிறிது விளக்குவோம்.

குச்சா கௌரியன் வாலா என்னும் சந்தில், இந்த ஊர்ந்து செல்லும் உத்தரவு அமுல் செய்யப்பட்டது. அது மிகவும் குறுகலான நெருக்கடியுள்ள சந்து. இருபுறமும் மாடி வீடுகள் உள்ளன. சந்தின் குறுக்கே பல வீடுகளைக் கொண்ட, ஒரு புறமே வழியுள்ள சிறு சந்துகள் பிரிகின்றன. இங்கு வாழ்வோர், இந்தச் சந்தின் வழியாகத் தான் வெளியே செல்லுதல் வேண்டும். வேறு வழியே இல்லை. அந்தச் சந்தில் செல்வோர் சுமார் நூற்று ஐம்பது கஜதூரம் ஊர்ந்து செல்லுதல் வேண்டும். அவ்வாறு ஊர்ந்து செல்லாமல் நடந்துசெல்ல முயல்பவர்களைத் தண்டிப்பதற்குச் சந்தின் நடுவே ‘டிக் டிக்கி’ என்ற ஒரு சவுக்கடி மேடை அமைக்கப்பட்டது.

சந்து நெருக்கமாகையால் அசுத்தத்துக்குக் குறைவே இல்லை. திருமதி செர்வுட் என்ற ஐரோப்பிய மாது இந்தச் சந்தில் துன்புறுத்தப்பட்டமையால், அது மிகவும் தூய்மை பெற்றுவிட்டதோ! ஆதலால், இதன் வழியே செல்வோர் தரையைக் காலால் மிதிக்கலாமா?

இரண்டு கைகளையும் இரண்டு கால்களையும் பூமியில் பதித்துக் கொண்டு, பாம்பு போல் மார்பினால் ஊர்ந்துதான் செல்லுதல் வேண்டும். ஊர்ந்து செல்லும்போது, சிறிது முழந்தாளை உயர்த்தினாலும் வளைத்தாலும் துப்பாக்கியின் அடிக்கட்டை அவர்கள் முதுகை முத்தமிடும்.

இந்தச் சந்தின் இரு முனைகளிலும், காலை ஆறு மணி முதல் இரவு பத்துமணிவரை இராணுவ வீரர் காவல் காத்தனர்.

ஊர்ந்து செல்வோர் வழியில் இளைப்பாறக் கூடாது. இளைப்பாறினால் அடி தப்பாது.

ஊர்ந்து செல்வோர், மேலே செல்ல இயலாமல், ‘மீண்டு சென்று விடுகின்றேன்’ என்று கெஞ்சினாலும் விடுவதில்லை. மேலும், ஊர்ந்து செல்லுமாறு வற்புறுத்தப்பட்டனர்.

ஜைனர் கோயில்

அந்தத் தெருவில் ஜைனர் கோயில் ஒன்று இருந்தது. அக் கோயிலுக்கு வழிபாடு செய்யச் செல்வோரும் ஊர்ந்து தான் செல்ல வேண்டியிருந்தது.

இளைப்பாறலாமா?

ஆசிரியர் ஒருவர் ஊர்ந்து சென்ற போது, சற்று இளைப்பாறி விட்டார் என்பதற்காக அடியும் உதையும் பட்டார். அவர் உடல் முழுவதும் கீறப்பட்டார்.

லாலா மேகலால் பட்டபாடு

லாலா மேகலால் என்பவர் ஒரு துணி வணிகர். மாலை ஐந்து மணிக்கு வீடு திரும்பினார். சிப்பாய்கள் அவரை ஊர்ந்து செல்லுமாறு பணித்தனர். அவர் ஊர்ந்து செல்வதற்கு அஞ்சித் திரும்பிப் போய்விட்டார்.

மீண்டும் இரவு ஒன்பது மணிக்கு வீடு திரும்பினார். அப்போது அவர் மனைவி காய்ச்சலால் துடித்துக் கொண்டிருந்தாள். அவளுக்குக் கொடுக்க வீட்டில் தண்ணீர்கூட இல்லை. மருத்துவர் வரவும் வழியில்லை, எந்த மருத்துவர்தாம் ஊர்ந்து வரச் சம்மதிப்பார்? இரவு வெகு நேரத்துக்குப் பின்பே தண்ணீர் கிடைத்தது. அவள் இப்படியே ஏழு நாள்வரை காய்ச்சலால் வேதனைப்பட நேர்ந்தது.

டையரின் விளக்கம்

"இந்தச் சந்தில் வாழ்வோர் அவசரத் தேவைகளுக்காக வெளியே செல்ல நேர்ந்தால், என்ன செய்வது?" என்ற வினாவுக்கு, "காலை ஆறு மணிக்கு முன்னும் இரவு பத்து மணிக்கு மேலும் ஊர்ந்து செல்லாமல் நடந்துபோய் வரலாமே! அல்லது வீட்டுக் கூரைகளின்மீது ஏறிச் செல்லலாமே!" என்று திமிராக விடையிறுத்தான் டையர். ஆனால் இரவு எட்டு மணிக்கு மேல் ஊரடங்கு உத்தரவு அமுலில் உள்ளதை மறந்து விட்டான் போலும்! முன்னுக்குப் பின் முரணாக உளறிக் கொட்டினான் டையர்.

"(ஐரோப்பியப்) பெண்கள் அடிக்கப்பட்டதை அறிந்தேன். புனிதமான பெண்களைத் தாக்கியதற்கு ஏற்ற தண்டனை எது என்று யோசித்தேன். எனக்கு ஏதும் புரியவில்லை. செர்வுட் தாக்கப்பட்ட சந்தில் ஒரு முக்கோணம் (டிக்டிக்கி) கட்டும்படி உத்தர விட்டேன். வீதியின் இருபுறமும் இராணுவ வீரரைக் காவல் வைத்தேன். அந்த வீதிவழியே யாரும் நடக்கக்கூடாது என்று கட்டளை யிட்டேன். இந்தியர்கள் செல்லுதல் வேண்டுமாயின் கைகால்களை ஊன்றி ஊர்ந்து செல்லுதல் வேண்டும் என்று அறிவித்தேன். நல்ல நினைவாற்றல் உள்ள எவனும் அந்தச் சந்து வழியே செல்வான் என்று நான் நினைக்கவில்லை"

என்பது, இந்தக் கட்டளைக்குரிய காரணமாக டையரின் புலைவாய் வீசிய புலால் நாற்றம்.

ஊர்ந்து செல்லும் உத்தரவு ஏப்ரல் 18 முதல் 26 வரை நீடித்தது. ஐம்பது பேர் வரை இந்த அநாகரிக உத்தரவினால், தண்டனை பெற்றனர் என்று தெரிகின்றது. வயோதிகரும் நோயாளருங்கூட விதிவிலக்குப் பெற்றிலர்.

ககன் சந்த்தின் கதை

இந்த ஊர்ந்து செல்லும் முறையில் நடைமுறை பற்றிக் ககன் சந்த் என்பவரிடம் கேட்டுத்தெரிந்து கொள்வோமே! அவர் ஒரு நாவிதர். இரு கண்ணும் இல்லாதவர்.

"எனக்கு இருபது ஆண்டுகளாகக் கண் தெரியாது. ஏப்ரல் 18 இல் நான் வழக்கம்போல் ஒரு தடியை ஊன்றிக் கொண்டு., அந்தச் சந்தில் நடக்கப் போனேன். ஒரு காவலன் என்னைத் தடுத்தான். 'என்னைப் போக விடுங்கள்' என்று மன்றாடினேன். 'இந்தச் சந்து கடக்கும் வரை ஊர்ந்து செல்வதாக இருந்தால் போகலாம்' என்றான். 'ஐயா! நான் இரண்டு நாள் பட்டினி. ஊர்ந்து செல்லும் ஆற்றல் என்னிடம் இல்லை என்று கெஞ்சியும் அவன் இரக்கம் காட்டவில்லை.வேறு வழி யில்லாமல் சிறிது தூரம் ஊர்ந்து சென்றேன். நடுவில் என் முழந்தாள் சிறிது வளைந்துவிட்டது. உடனே என் முதுகில் ஓர் உதை விழுந்தது. அதனால் என் கைத்தடி தவறிப் போனது"

என்பது ககன்சந்த்தின் கண்ணீர்க் கதை.

டையரின் வருகை

ஜெனரல் டையர் அடிக்கடி அந்தச் சந்துக்கு வந்தான். சாளரங்களில் இருப்பவர்களையும் வாசலில் நிற்பவர்களையும் சவுக்கால் அடித்து விரட்டினான். தான் வரும் போது எழுந்து நின்று சல்யூட் செய்யாதவர்களுக்கும் சவுக்கடி தாராளமாகக் கிடைத்தது.

ஊர்ந்து செல்லுதல் வேண்டுமே என்ற அச்சத்தால் பலர், தங்கள் வீட்டுக்கே திரும்பாமல் வெளியிலேயே தங்கி விட்டனர். அங்கே இருந்தவர்கள், தங்கள் வீட்டுக் கதவுகளைத் திறக்காமல், உள்ளேயே அடைந்து கிடந்தனர்.

ஜீவரட்சக சபை

அந்தச் சந்தில் 'ஜீவ ரட்சக சபை' இருந்தது. அதைச் சிப்பாய்கள் அசுத்தப்படுத்தி விட்டனர்.

புனிதப் புறாக்கள்

அங்குப் புறாக்கள் பல இருந்தன. அவற்றைப் புனிதமாக மக்கள் கருதினர். தானியங்கள் இட்டு அவற்றைப் பராமரித்து வந்தனர். அந்தப் புனிதமான புறாக்களைத் துருப்புக்கள் சுட்டுத் தின்னத் தொடங்கினர்.

டிக் டிக்கி

நடுத் தெருவில் அமைக்கப்பட்டிருந்த டிக் டிக்கியில் மக்கள் சவுக்கால் அடிக்கப்படுவதைக் கண்டு பெண்கள் குலைநடுங்கினர். சிறுவர்களும் வயோதிகர்களுங் கூடச் சவுக்கடிபட்டனர்.

"அம்மா நான்! செத்தேன்!"

சிறுவர்களின் ஆடைகளை அகற்றிவிட்டுச் சவுக்கால் அடித்தனர். "அம்மா! நான் செத்தேன்! ஐயோ! என்னை விட்டு விடுங்கள்" என்ற சிறுவர்களின் அவலக் குரல் அங்குள்ள சுவர்களில் எதிரொலித்து உள்ளங்களில் ஊடுருவித் தாக்கியது.

மீண்டும் மீண்டும் அடி

பத்து அடி அடித்த பிறகு, அடிபட்டவனுக்குத் தண்ணீர் குடிக்கத் தருவர். மீண்டும் அடிக்கப்படுவான். அடிபட்டவரில் சிலர், மூர்ச்சையாகி விடுவதுண்டு. சிலரின் உடலிலிருந்து இரத்தம் வழியத் தொடங்கும்.

சுந்தர் சிங்கின் சோகக் கதை

சவுக்கடி படுவது இழிவு மட்டும் அல்ல; சித்திரவதையாகவும் இருந்தது. ஒருமுறை, ஆறு சிறுவர்கள் சவுக்கடி படலாயினர். டிக் டிக்கியில் கட்டி வைத்துத் தலைக்கு முப்பது அடிகள் கொடுத்தனர்.

அவர்களுள் ஒருவனாகிய சுந்தர் சிங் என்பவன், நான்காவது அடியிலேயே நினைவிழந்து விட்டான். வாயில் சிறிது தண்ணீர் ஊற்றித் தெளிவடையச் செய்து, மீண்டும் அடித்தனர். இரண்டாவது முறையாக அவன் நினைவிழந்தான். ஆயினும், முப்பது அடி பெறும் வரை அடிப்பது தொடர்ந்தது. இரத்தம் பெருகப் பெருக அவன் அப்புறப் படுத்தப்பட்டான்.

இங்ஙனமே பல சிறுவர்களும் அடிக்கப்பட்டனர். நினைவிழந்து நடக்க முடியாதவர்கள், தரையில் இழுத்து அப்புறப்படுத்தப்பட்டனர்.

சிறுமி செத்தாள்

நான்கு வயதுள்ள பெண்குழந்தை ஒருத்தி இந்தத் தண்டனையை நேரில் கண்டமையால், காய்ச்சலில் விழுந்தது. "அம்மா! சிப்பாய்கள் புனிதமான புறாக்களைக் கொல்லுகின்றார்கள். என்னையும் கொன்று விடுவார்கள்" என்று புலம்பிக்கொண்டே இருந்து இறந்தே போனாள்.

நிர்வாண ஓட்டம்

அங்கு, வீடுகளுக்கு எதிரிலேயே வீட்டுப் பெண்களின் பார்வையிலேயே சிப்பாய்கள் இயற்கைக் கடன்களைக் கழித்தனராம்! அதனால் விளைந்த துர்நாற்றம் தலை வலியை உண்டாக்கியதாம். பெண்களின் முன்னே சிப்பாய்கள் ஆடையின்றி நிர்வாணமாக ஓடுவதுண்டாம்.

முக்காடு பறிப்பு

"செர்வுட் அம்மையாரை அடித்தவர் யார்?" என்று கேட்டுப் பல பெண்கள் துன்புறுத்தப்பட்டனர். முக்காடிட்டு முகத்தை மூடித் திரியும் முகமதியப் பெண்களின் முகத்திரையைப் பறித்தனர். பின்னர் "செர்வுட்டை அடித்தவர் யார்?" என்று கேட்டனர். "சொல்லாவிட்டால் இழுத்துக் கொண்டு போவோம்" என்று அச்சுறுத்தினர்.

ஆடவர்க்கு அடி

ஆடவர்கள் துப்பாக்கிக் கட்டையால் அடிக்கப்பட்டனர்; உதைக்கப்பட்டனர். இந்தக் கொடுமைகளுக்குப் பயந்தவர்கள், அந்தச் சந்துப் பக்கமே தலை காட்டாமல் இருந்து விடலாயினர்.

கிணறுகளில் அசுத்தம்

அந்தச் சந்துவாசிகளுக்குப் பலநாள்வரை தண்ணீரும் உணவும் கிடைக்காமல் போனது. காய்கறிகள் முதலியன கிடைக்கவும் வழியில்லாமல், மக்கள் பட்ட துன்பம் கொஞ்சநஞ்சம் அல்ல.

தெருவிலுள்ள கிணறுகளில் மக்கள் தண்ணீர் எடுக்க இயலாதபடி, அக்கிணறுகளைச் சுற்றிலும் சிப்பாய்கள் இயற்கைக் கடன்களைக் கழித்து அசுத்தப்படுத்தினர்.

புலை நாற்றம்

எட்டுநாள் வரை சுத்திப் பணியாளர் அந்தச் சந்துக்குள் வரவே இல்லை. வீட்டிலுள்ள கழிவுகள் வெளியேற்றப்படாமையால் புலை நாற்றம் பரவியது.

சல்யூட் செய்யும் கொடுமை

இதுகாறும் ஊர்ந்து செல்லுதல் உத்தரவின் கொடுமையை ஓரளவு விளக்கினோம்.

சல்யூட் (வணக்கம்) செய்யும் கொடுமை அதைவிடக் குறைந்தது அல்ல.

சல்யூட் செய்வதால் உண்டாகும் இழிவும் துன்பமும் அனுபவித்தவர்க்கே தெரியும். அனுபவம் இல்லாதவர் அதனை விளக்குவது கடினமாகும்.

ஓர் இலட்சத்து அறுபதாயிரம் மக்கள் தொகையைக் கொண்ட பெருநகரில் சல்யூட் உத்தரவு அமுல்படுத்துவது எளிதான செயல் அல்ல.

கரதலம் சுமந்த உச்சியர்

எந் நேரமும் எந்த ஐரோப்பியர் எவ்வழியே வருவர் என்று எப்படித் தெரிந்து கொள்வது! எதிர்பாராமல் யாராவது வரும்போது சல்யூட் செய்யாவிட்டால், தண்டனை தப்பாதே! அதற்காக எப்போதும் கையை நெற்றியில் வைத்துக் கொண்டே இருத்தல் இயலுமா?

“இன்னபோது இவ்வழி நோக்கும் என்பதை
உன்னலர் கரதலம் சுமந்த உச்சியர்
மின் அவிர் மணிமுடி விஞ்சை வேந்தர்கள்
துன்னினர் முறைமுறை துறையில் சுற்றவே”

என்பது கம்பன் வாக்கு.

இராவணன் நோக்கும்போது, விஞ்சையர்கள் கை கூப்பித் தொழுதல் வேண்டும். தொழாமல் இருக்கக் கண்டால், கொடுந் தண்டம் கிட்டும். அதற்காக அவர்கள் எப்போதுமே தொடர்ந்து தங்கள் கைகளைத் தலையில் கூப்பிக் கொண்டே இருப்பார்களாம்!

சல்யூட் செய்யும் முறைகள்

சல்யூட் செய்வதற்கும் சில முறைகள் உண்டு. இந்தியராகிய நமக்கு, வணக்கம் செய்யத்தான் தெரியும். சல்யூட் என்பது பரங்கியர் முறை. பரங்கியர் முறையறிந்து சல்யூட் செய்தல் வேண்டும். சிறிது முறை தவறினாலும் தண்டனை உறுதி.

லாலா அரி கோபாலின் அனுபவம்

லாலா அரிகோபால் பி.ஏ. படித்தவர். அவர் ஒரு நாள் தெரு வழியே போய்க் கொண்டிருந்தார். சில வீரர்கள் பின் தொடர அவ் வழியே டையர் வந்தான். அவனைக் கண்ட அரிகோபால், தமக்குத் தெரிந்த அளவில்சல்யூட் செய்தார். அவரை டையர் தன் அருகே அழைத்தான். "உனக்குச் சல்யூட் செய்யச் சரிவரத் தெரியவில்லை. ஆதலால், நாளை ராம் பாக்குக்கு வர வேண்டும்" என்று கட்டளை பிறந்தது.

அரிகோபாலுக்கு ராம்பாக் இருக்கும் இடம் தெரியாது. ஆதலால், போலீசு அதிகாரி புளோமரிடம் விசாரித்தார். அவர் கொத்தவாலிடம் அழைத்துச் செல்லுமாறு ஒரு சேவகனை அனுப்பினார்.

கொத்தவாலிடம் அரிகோபால் சென்றபோது, மேலும் இருவர் மூவர் அங்கே இருந்தனர். அனைவரும் ஈரத் தரையில் அமரும்படி செய்யப்பட்டனர். இரவு ஏழு மணிக்குள் மேலும் பலர் அவர்களுடன் சேர்ந்து கொண்டனர். பின்னர் இருவர் இருவராக அழைத்துச் செல்லப்பட்டனர். அங்கு அவர்கள் இரவு முழுவதும் உட்கார்ந்து கொண்டே இருக்க நேர்ந்தது.

மறுநாள் காலையில்தான், அவர்கள் ராம் பாக்கிற்கு அழைத்துச செல்லப் பட்டனர். அங்கே அவர்கள் வெயிலில் நெடுநேரம் நின்ற பிறகு, சல்யூட் செய்யும் முறை கற்பிக்கப்பட்டது.

மிராஜ் பிரோஜ்தீனின் பேச்சு

இந்தச் சல்யூட் அடிக்கும் உத்தரவு பற்றிக் கௌரவ நீதிபதி மிராஜ் பிரோஜ்தீன் கூறுவதைக் கேட்போம்:

"ஜெனரல் டையரையும் புளோமரையும் எழுந்து நின்று சல்யூட் செய்யத் தெரியாத மக்கள் சவுக்கால் அடிக்கப்பட்டனர். சல்யூட் செய்யாதவர்கள் காவலில் வைக்கப்பட்டனர். மிக்க பயம் கொண்டிருந்தமையால், சல்யூட் செய்வதில் தவறு நேர்ந்துவிடக் கூடாதே என்று மக்கள் ஏறக்குறைய நாள் முழுவதும் நின்று கொண்டே இருக்க வேண்டியவர் ஆயினர். ஏறக்குறைய என்பதற்குக் காரணம் யாதெனில், மோட்டார் கார் ஒலி கேட்கும் போதெல்லாம் அவர்கள் எழுந்து நிற்க வேண்டியிருந்தது என்பதைக் காட்டவே! என் நிலைமையும் அதுதான்!"

கைதுகள் தொடர்ந்தன

ஏப்ரல் 12 முதல் மக்கள் கைது செய்யப்படலாயினர். அதுமுதல் பல நாள் வரை கைதுகள் தொடர்ந்தன. அமைதியாகத்

தங்கள் பணிகளைச் செய்து கொண்டிருந்தவர்கள், எவ்விதக் காரணமும் இல்லாமல் கைது செய்யப்பட்டனர்.

குற்றம் இன்னதென்று கூறாமலே, கைவிலங்குகளுடன் மாதக் கணக்காகக் காவலில் வைக்கப்பட்டனர். நண்பர்களையும் உறவினரையும் பார்க்கவோ ஆலோசனை பெறவோ அனுமதி மறுக்கப்பட்டது.

கிரிதாரி லாலின் கதை

லாலா கிரிதாரி லால், நோயுற்றிருந்த உறவினர் ஒருவரைக் காணும் பொருட்டுக் கான்பூருக்குச் செல்ல விரும்பினார். மிக முயன்று அமிருத சரசை விட்டுச் செல்வதற்கு, அனுமதிச் சீட்டினைப் பெற்றார். ஏப்ரல்21 இல் இரயிலில் கான்பூர் புறப்பட்டார்.பியாஸ் ஆற்றின் பாலத்தில் வண்டி நிறுத்தப்பட்டது. இந்தியப் பயணிகளின் பொருள்கள் அனைத்தும் சோதனை யிடப்பட்டன.

அமிருத சரசு அதிகாரிகள் தம்மைக் கைது செய்வதற்காகத் தேடுவதாக அறிந்த கிரிதாரி லால்,கான்பூர் போலீசு அதிகாரியைப் போய்ப் பார்த்தார். அந்த அதிகாரி ஓரளவு நல்லவர். கிரிதாரியை மரியாதையுடன் நடத்தினார். பின்னர் அவரை அமிருத சரசுக்கு அனுப்பி வைத்தார்.

கிரிதாரி லால் அமிருத சரசு வந்தபோது, அவர் கையில் ஒரு பத்திரிகை இருந்தது. இதைக்கண்ட அமிருத சரசு போலீசு அதிகாரி, அதைப் பெருங் குற்றமாகக் கருதினான். அவரை அழைத்து வந்த போலீசு இன்ஸ்பெக்டரைக் கடிந்து கொண்டான்.

தம் பொறுப்பில் உள்ளவரின் உரிமையைக் கட்டுப் படுத்தும்படி,(பத்திரிகை படிக்காமல் செய்யுமாறு) மேலதிகாரிகள் கட்டளை யிடாதபடியால், பத்திரிகை வாங்கிக் கொள்ள அனுமதித்ததாகப் போலீசு இன்ஸ்பெக்டர் அமைதியுடன் கூறினான். அதை அந்த அதிகாரி ஏற்கவில்லை.

கிரிதாரி லாலின் கைகளில் விலங்கு பூட்டப்பட்டது. கைது செய்வதற்கான காரணம் ஒன்றும் கூறப்படவில்லை. பகல் 11 மணி முதல், மறுநாள் காலைவரை உணவே தரப்படவில்லை.

பத்துப் பதினைந்துபேருடன் ஒரு சிறிய அறையில் அவர் அடைக்கப்பட்டார். அறையின் ஓர் மூலையில், நாற்றம் வீசும் பாத்திரம் ஒன்று இருந்தது.

மறுநாள் காலை, காலைக்கடன் கழிப்பதற்காகச் சிறிது வெளியே விடப்பட்டார். குளிக்கவோ உடைமாற்றவோ அனுமதிக்கவில்லை. குடிப்பதற்கும் தண்ணீர் தரப்படவில்லை. காவலர்கள் இரக்கப்பட்டுத் தண்ணீர் தந்தால் உண்டு. இல்லையேல், நா வறண்டு சாக வேண்டியதுதான்.

மே மாதம் கடுங் கோடைக் காலம். அறையோ சிறியது. இருந்தவரோ பலர். எவ்வளவு துன்பமாக இருக்கும் என்பதைச் சொல்லவா வேண்டும்!

பின்னர் கிரிதாரிலாலை, மேலதிகாரியிடம் அழைத்துச் சென்றனர். அந்த மேலதிகாரி அவரைக் கண்டபடி திட்டினான். பின்னர் சிறையில் அடைக்கப் பட்டார். அங்கே தரப்பட்ட உணவு, மிருகங்கள் கூட உண்ணத் தகாதது.

அதன்பின்னர், இருவர் இருவராகக் கைவிலங்கிட்டு லாகூருக்கு அழைத்துச் சென்றனர். அவரை யாருமே நெருங்க விடவில்லை. யாராவது நெருங்கிப்பேச முயன்றால், அவர்களும் உடனே கைது செய்யப்பட்டனர்.

இரயில் நிலையத்திலிருந்து, நீதிமன்றம் இரண்டு கல்தூரம். நல்ல வெயிலில் நடந்து செல்லும்படி பணித்தனர். இடையில் தண்ணீர் பருகலாகாது என்று தடுத்தனர். நீதி மன்றத்தின் தாழ்வாரத்தில்,நாள் முழுவதும் காத்துக்கிடக்க வேண்டியிருந்தது. அங்கிருந்து மத்திய சிறைக்குக் கொண்டு சென்றனர்.

அங்கு 7 அடி நீளம், 2 அடி அகலம், 4 அடி உயரம் உள்ள இரும்புக் கூண்டில் மிருகங்களைப்போல் அடைத்தனர். மிகவும் ஆபாசமான ஒரு கழிவுநீர் வாய்க்காலைக் குளிப்பதற்காகக் காட்டினர். உறவினர்களிடமிருந்து இலஞ்சம் பெற்ற பின்னர், சிலர் சிறிது வசதியான அறைகளுக்கு மாற்றப்பட்டனர். அவர்களுக்கே சிறிது நல்ல உணவு கிடைத்தது. உடைகளை மாற்றிக் கொள்ளவும் அனுமதி கிடைத்தது.

அங்கிருந்து பார்ஸ்டல் சிறைக்கும் மீண்டும் அமிருத சரசுக்கும் மாற்றினர். குற்றம் இன்னது என்று கூறாமலே, சாட்சிகளைக் கொணருமாறு கட்டளையிட்டனர். இவ்வாறு பலவகையிலும் அலைக்கழிவு செய்தபின்னர், ஒருமாதம் கழித்து கிரிதாரிலால் விடுதலையானார்.

கிரிதாரி லால் சாதாரணமானவர் அல்லர். அவர் அமிருத சரசில் பிரபலமான மக்கள் தலைவர். அதிகாரிகளுக்கு நன்கு அறிமுகமானவர். அவருக்கே இந்தக் கதி!

கைதிகளின் உரிமை

தன் உறவினரைக் கண்டு பேசவும் வக்கீல்களின் ஆலோசனை பெறவும் ஒவ்வொரு கைதிக்கும் உரிமை உண்டு. வீட்டிலிருந்து உணவு பெறவும் உரிமை உண்டு. இந்தச் சாதாரண உரிமை கூடக் காற்றில் பறக்கவிடப்பட்டது.

மாமூதும் கைது ஆனார்

ஏப்ரல் 10 இல் அமிருத சரசில் ஊர்வலம் சென்றவர்களை ஏதும் அசம்பாவிதம் நேராமல் கலைந்து செல்லும்படி செய்வதற்காக, தம் உயிரையும் பொருட்படுத்தாது முயன்றவர், உயர்நீதி மன்ற வக்கீல் மக்பூல் மாமூத் என்பதை முன்பே கண்டோம்.

அவரையும் கைது செய்தனர். “ராபின்சன், ரௌலண்ட் ஆகிய ஐரோப்பியர்களைக் கொன்றவர்களைக் காட்டு” என்று சித்திரவதை செய்தனர். பிறகு நடந்ததைப் பற்றி அவரையே பேச விடுவோம்.

“கொலையாளிகளை என்னால் அடையாளம் காட்ட முடியாது என்றேன். எழுத்து மூலம் எழுதிக் கொடுத்தேன். அதனைக்கிழித்தெறிந்துவிட்டு,குற்றவாளிகள் என்று அதிகாரிகள் கருதிய சிலரின் பெயர்களை எழுதி, வேறொரு வாக்குமூலம் தருமாறு வற்புறுத்தினர். ‘எனக்கு மனச்சாட்சி உண்டு. பொய் சொல்லமாட்டேன்’ என்றேன். ‘மனச்சாட்சி என்பது இல்லை. மனச்சாட்சியுடையவர்கள் துன்பந்தான் அடைவர்’ என்று அச்சுறுத்தினர். வக்கீல் சன்னதும் பறித்துக் கெள்வோம் என்றனர்.”

கேதார் நாத் பண்டாரியின் பரிதாபம்

சீனியர் அசிஸ்டண்ட் சர்ஜன் டாக்டர் கேதார் நாத் பண்டாரி. அவருக்கு வயது அறுபத்து இரண்டு.

ஏப்ரல் 10இல் மிஸ் ஈஸ்டன் என்ற பெண்மணியைத் தாக்கமுயன்றதாக யாரோ ஒருவர் பெயரை எழுதித் தருமாறு பண்டாரியை வற்புறுத்தினர். அவர் மறுத்து விட்டார், “உம்மைக் கைது செய்வோம்” என்று மிரட்டினர். “நான் பார்த்தே யிராத ஒருவர் பெயரைக் கூறமுடியாது. நீங்கள் விரும்பியதைச் செய்யலாம்” என்று அந்த வயோதிகச் சிங்கம் முழங்கியது.

கைது வாரண்டு காட்டப்படாமலே, தம் உதவியாளர் ஒருவருடன் காவலில் வைக்கப்பட்டார். இருவரும் கிளைச் சிறைக்கு அனுப்பப்பட்டனர். ஒரு கல் தூரம் வெயிலில் நடந்து

செல்லவேண்டியிருந்தது. இருதய நோயாளி ஆனமையால், ஒரு வண்டி கொணருமாறு வேண்டினார் பண்டாரி. "மற்றவர்களுடன் கை விலங்கிடப்பட்டுத் தெருவில் அழைத்துச் செல்வது தம் தகுதிக்கு ஏற்றதல்ல. அதனால் என் மனநிலை கெட்டுவிடும்" என்று அவர் மன்றாடினார்.

அவரின் கோரிக்கை காற்றுடன் கலந்தது. அவர் நடந்தே செல்ல நேர்ந்தது. மிகவும் வெயிலாக இருந்தமையால், சிறைச் சாலையை அடைந்ததும் மயங்கி விழுந்து விட்டார்.

அவரை ஓர் அறையில் அடைத்தனர். உண்ணுதற்கு தகுதியில்லாத ரொட்டி மட்டுமே தந்தனர். நண்பர் ஒருவர், வெளியிலிருந்து உணவு தர அனுமதிக்க வேண்டும் என்று வேண்டிக் கொண்டார். அது மறுக்கப்பட்டது. உடைகள் மாற்றவும் அனுமதி தரவில்லை. அவர் உடுத்த உடைகளில் சீலைப் பேனும் நாற்றமும் நிரம்பிவிட்டது.

ஒருநாள் டிப்டி கமிஷனர் சிறைக்கு வந்தார். "நான் எதற்காகக் கைது செய்யப்பட்டுள்ளேன்" என்று கமிஷனரிடம் பண்டாரி கேட்டார்.

"ஈஸ்டன் தாக்கப்பட்டபொழுது, அவரைக் காப்பாற்ற முயலாத குற்றத்துக்காக" என்று விடை கிடைத்தது.

"ஈஸ்டன் தாக்கப்பட்டதே எனக்குத் தெரியாது. அப்படி இருக்கையில் நான் எப்படிக் காப்பாற்ற முடியும்" என்று கூறினார்.

"சிலரின் பெயர்களைத் தெரிவித்துவிட்டால், நீர் விடுதலைபெறலாம்" என்று அதிகாரிகள் ஆசை காட்டினர். ஆனால், மறுத்துவிட்டார் பண்டாரி.

எப்படியோ மே 12 இல் பண்டாரியும் உதவியாளரும் விடுதலை பெற்று வெளியே வந்தனர். அரசாங்கத்தில் மிகப் பொறுப்பான பதவி வகித்தவர்க்கே இந்த நிலை!

மகமது அக்ரம்

முடிவில் ஈஸ்டனைத் தாக்க முயன்றதாக மகமது அக்ரம் என்பவன் கைது ஆனான். உண்மையில் அவன் ஈஸ்டனைத் தாக்க முயன்றவன் அல்லன். யாரையாவது பிடித்துத் தண்டித்தல் வேண்டும் என்பது அதிகாரிகளின் விருப்பம். மேலதிகாரிகளைத் திருப்திப்படுத்துவதற்காகக் குற்ற மற்றவனைப் பலியாக்கினர் அதிகாரிகள்.

உண்மையில் மகமது அக்ரம், ஈஸ்டனிடம் நெருங்கிய நட்புக் கொண்டிருந்தவன். இன்னும் சொல்லப்போனால் அவளைத் தன் அன்னைபோல் மதித்துப் பழகியவன்.

மகமது அக்ரம் முதலில் மரண தண்டனை விதிக்கப்பட்டான். பின்னர், அது ஐந்து வருடக் கடுங்காவலாகக் குறைக்கப்பட்டது.

மகமது அமீன் கைது

அந்த அக்ரத்தின் தந்தை ஒரு வக்கீல். அவர் பெயர் மகமது அமீன். தம் மகனுடன் அவரும் கைது செய்யப்பட்டார். அவரின் சகோதரரையும் விடவில்லை.

மகமது அமீனை ஒரு சிறிய அறையில் முப்பது பேருடன் அடைத்து வைத்தனர். அவர் ‘குடிக்கத் தண்ணீர் வேண்டும்’ என்று இரும்புக் கம்பிகளுக்கு வெளியே கைகளை நீட்டிக் கொண்டு கெஞ்சிய காட்சி மனத்தை உருக்குவதாக இருந்தது.

“நான் சிறையிலிருப்பதற்கு அஞ்சவில்லை. ஆனால் இவ்வளவு ஆபாசமான இடத்தில் கால்மணி நேரங்கூட உயிர் பிழைக்க முடியாது” என்றார் அமீன்.

அவரை வேறு ஓர் அறைக்கு அழைத்துச் சென்றனர். அந்த அறையில் முன்பே சில வக்கீல்கள் அடைக்கப்பட்டிருந்தனர். “அவ்வளவு அழுக்குப் படிந்த ஆபாசமான இடத்தை அதற்கு முன் நான் பார்த்ததே இல்லை” என்பது அமீனின் பேச்சு. இரவு முழுவதும் தூக்கம் இல்லை. அன்று மாலை மட்டும் வீட்டிலிருந்து உணவு பெற அனுமதி வேண்டினார் அமீன். பயன் இல்லை. விரித்துப் படுக்கப் போர்வை கேட்டும் தரப்படவில்லை.

“உங்கள் விரோதிகளில் சிலர் பெயரைக் கூறிவிடுங்கள். நாங்கள் உங்களைச் சாட்சியாக எடுத்துக் கொள்கின்றோம். உங்களை ஏன் ஆபத்துக்குள்ளாக்கிக் கொள்கின்றீர்கள்?” என்பது அதிகாரி ஒருவரின் நயவுரை.

“எனக்கு விரோதியே இல்லை” என்பது அமீனின் பதில். “வாயம் என்ற பெயரையாவது சொல்லி விடுங்கள்” என்று அதட்டினார் அதிகாரி.இவ்வாறு பொய்ச் சாட்சியம் தயாரிப்பவர்களால் தமக்கு இன்னும் எத்தகைய ஆபத்து நேருமோ என்று நடுங்கினார் அமீன்.

அந்த அறையில் இருந்தவர்கள், இருவர் இருவராக விலங்குகளால் பிணைக்கப்பட்டனர். இயற்கைக்கடன் கழிக்கச் செல்கையிலும் விலங்குகள் கழற்றப்படவில்லை. கொடிய

வெயிலில் விலங்குகளுடன் சுற்றிச் சுற்றி நடக்குமாறு ஏவினர். முப்பத்தாறு மணி நேரம் உணவே தரவில்லை. வெறுந்தரையிலே படுக்கவேண்டியிருந்தது.

பின்னர், கைவிலங்குகள் கழற்றப்பட்டன. அப்போது அவர்களுக்குத் தரப்பட்ட உணவு, ஒரு மூலையிலிருந்த கொள்ளுக்குவியலும் இன்னொரு மூலையிலிருந்த தொட்டித் தண்ணீருமே யாகும். மற்றொரு மூலையில் இயற்கைக் கடன் கழிப்பதற்காக ஒரு தகரத் தொட்டி இருந்தது. இந்தச் சூழ்நிலையில் அந்தக் கொள்ளினை எவ்வாறு உண்பது! மேலும் ஒருநாள் பட்டினியே தொடர்ந்தது.

பின்னர், சொந்த உணவைப் பெறவும் உடைமாற்றிக் கொள்ளவும் அனுமதி கிடைத்தது. இவ்வாறு அங்கே இருபத்திரண்டு நாள்கள் அவதிப்பட்ட பிறகு, ஐம்பத்து இருவர் ஒன்றாகப் பிணைக்கப்பட்டு, லாகூருக்கு அனுப்பப் பட்டனர். அங்கே, உணவும் தண்ணீரும் இன்றிப் பகல் முழுவதும் வெளியே இருந்தனர். கொதிக்கும் வெயிலில் இரயில் நிலையத்திலிருந்து நிதிமன்றத்துக்கும் அங்கிருந்து மத்தியச் சிறைக்கும் இழுக்கடிக்கப்பட்டனர். இறுதியில் எப்படியோ விடுதலை கிடைத்தது.

மிஸ் நெல்லி பெஞ்சமின்

மிஸ். ஈஸ்டன் உயிர் பிழைக்க உதவியவள் சப் அசிஸ்டண்ட் சிவில் சர்ஜன் மிஸ் நெல்லி பெஞ்சமின். அவளையும் விடவில்லை. இருமுறை போலீசு நிலையத்துக்கு அழைத்துச் சென்றனர். கூட்டத்தில் மகமது அமீனைப் பார்த்ததாகக் கூறும்படி வற்புறுத்தினர். அவள் "பொய் கூற மாட்டேன்" என்று மறுத்து விட்டாள். "உன்னைச் சிறையில் தள்ளுவோம்" என்று மிரட்டினர். அவர்கள் சொன்னபடி சொன்னால், அரசு பரிசு தரும் என்று ஆசையும் காட்டினர்.

இந்தச் செய்தியை அந்தப் பெஞ்சமினே கூறியுள்ளார்.

சேத்குல் முகமது

சேத்குல் முகமது ஒரு கண்ணாடி வணிகர். தொழுகை செய்து கொண்டிருந்தபோது, போலீசு நிலையத்துக்கு அவரை அழைத்துச் சென்றனர். பொய்ச் சாட்சியம் கூறுமாறு வற்புறுத்தினர். அவர் மறுத்தமையால், சினம் கொண்ட இன்ஸ்பெக்டர் தாடியைப்

பிடித்துக் கொண்டு உரக்க அறைந்தார். அதனால் அவர் தலை சுற்றி விழுந்தார். 'டாக்டர் சத்தியபாலுவும் கிச்சுலுவும் கடைகளை மூடும்படி தூண்டினர் என்றும் பிரிட்டிஷாரை நாட்டினின்றும் துரத்த வெடிகுண்டு எறியலாம் என்று கூறி உற்சாக மூட்டினர் என்றும் சொல்லுதல் வேண்டும்' என்றும் மிரட்டினர். அவர் மறுக்கவே, சேவகர்கள் நையப் புடைத்தனர். கட்டிலின் கீழ் அவர் கையை வைத்து, எட்டுப் பேர் அமர்ந்து அழுத்தினர்.

குல்முகமது என்ன செய்வார்? "என் கையை விட்டு விடுங்கள். நீங்கள் சொன்னபடி சொல்கின்றேன்" என்று அலறினார்.

இன்ஸ்பெக்டர் முன்பு நிறுத்தப்பட்டார். அங்கு வந்தவுடன் பொய்ச் சாட்சியம் கூறுவதற்கு மீண்டும் மறுத்து விட்டார். அவரை ஓர் அறையில் அடைத்து வைத்துக் கையாலும் பிரம்பாலும் அடித்தனர்.

இவ்வாறே எட்டுநாள் அடிபட நேர்ந்தது. பின்னர், நாடோறும்போலீசு நிலையத்தில் ஆஜராகவேண்டும் என்ற நிபந்தனையுடன் விடுதலை பெற்றார்.

சர்தார் ஆத்மசிங்

சர்தார் ஆத்மசிங் ஒரு சாராய வணிகர். டையர் முன்னிலையில் அவர் கைது செய்யப்பட்டார். அவர் கைகளைத் துணியால் கட்டி, நகரத்தின் பல தெருக்களின் வழியாக இழுத்துச் சென்றனர். குடிக்கத் தண்ணீரைக் கையில் எடுக்கச் சென்றபோது, சிப்பாய்கள் தடுத்து விட்டனர்.

மேலும் ஒன்பதின்மருடன் அவர், ஓர் அறையில் அடைக்கப்பட்டார். பின்னர், ஜெனரல் டையர் முன்கொண்டு போகப் பட்டார்.

அங்கு ஆத்மசிங்குக்கு எட்டுநாள் கால்பங்கு காவல் தண்டனை கிடைத்தது. அவர் மேல் எவ்விதக் குற்றமும் காட்டப்படவில்லை. அவரது பொன் மோதிரத்தையும் அவரின் பெயர் பொறித்திருந்த உயர்தரக் கெடிகாரத்தையும் சார்ஜண்ட் ஒருவர் பறித்துக் கொண்டார்.

மகமது இசுமேல்

மகமது இசுமேல் ஓர் கசாப்புக் கடைக்காரர். அவர் தம் தந்தையாருடன் கைது ஆனார். அவரின் சகோதரர் தீனா கைதான பின்னர், அவர்கள் விடுதலை பெற்றனர்.

அப்துல் அஜிஸ்

அப்துல் அஜிஸ் ஒரு காய்கறி வணிகர். அவர் இரண்டு நாள் சிறை வாசமும் பத்து அடியும் தண்டனையாகப் பெற்றார். பத்து நாள்வரை கடை திறக்கலாகாது என்றும் கட்டளையிடப்பட்டார். தண்டனை வழங்கியவர் டையர்.

லாலா ராலிய ராம்

தாடியை இழுத்துத் தெருவில் நடக்கவிட்டு;ப பிரம்படி தரப்பட்டவர், லாலா ராலியராம் என்ற 58 வயதான ஓய்வு பெற்றவர்.

லாலா தாதுமல்

லாலா தாதுமல்லும் காரணமில்லாமல் அடிக்கப் பட்டார். ஊர்ந்து செல்லும்படி கட்டளையிடப்பட்டார். அவரும் அவரின் மகனும் மீண்டும் மீண்டும் கைது செய்யப்பட்டனர். போலீசாருக்கு நூறு ரூபாய் கொடுத்த பிறகே விடுதலை பெற்றனர். மறுபடியும் கைது ஆகி ரூபாய் ஐம்பது தர நேர்ந்தது. போலீசார் அவரின் கடைக்குச் சென்று பொருள்களைச் சூறையிட்டுச் சென்றனர். அவர் மகன் எட்டு நாள் காவலில் அடிபட்டான். மயக்க முற்ற பின்பும் விடவில்லை. முப்பது அடிகள் பெற்றான். இரத்தம் ஒழுக வலி தாளாமல் கூச்சலிட்டான்.

தனிராம்

தனிராம் கைது செய்யப்பட்டு, கீழே அமர்ந்து கால்களுக்குள்ளாகக் கைகளை நுழைத்துக் காதுகளைப் பிடித்துக் கொள்ளும்படி துனபுறுத்தப்பட்டார்.

குலாம் காதிறு

குலாம் காதிறுவைக் கைது செய்து, அவர் தலைப் பாகையால் கைகளைக் கட்டிப் பத்து நிமிட நேரம் மரத்தில் தொங்க விட்டனர்.

பீராகுஜர்

பீராகுஜர் என்பவரைத் தரையில் குப்புறக் கிடத்தி ஆசனத்துளையில் ஒரு கழியைச் சொருகினர். அப்போது அவர் அலறிய அலறல் நெஞ்சை உலுக்கியது. மூன்றுநாள் வரை உணவே தரப்படவில்லை.

இமாம் குலாம் ஜிலானி

மசூதியின் இமாம் குலாம் ஜியானி, இராம நவமி விழாவில் அதிகக் கவனம் செலுத்தினார். இந்து - முசுலீம் ஒற்றுமைக்குப் பாடுபடுவது பெருங் குற்றம் அல்லவா! அதை டையரால் பொறுத்துக் கொள்ள முடியுமா? அவர் கைது செய்யப்பட்டு, பீரா குஜருக்குத் தந்த அதே தண்டனை தந்தனர்.

மாதிரிக்குச் சில மட்டுமே

இரண்டோர் ஐரோப்பியர் கொலைப்பட்டதற்கும் மிஸ். ஷெர்வுட் துன்புறுத்தப்பட்டதற்கும் இறுமாப்புக் கொண்ட ஈஸ்டனைத் துன்புறுத்த முயன்றதற்கும் பழி வாங்கும் நோக்கத்துடன், பலரைக் கொன்று காயப்படுத்திக் கைது செய்து சித்திரவதை செய்த வரலாறு மிகமிகப் பெரியது. அவ்வளவும் விரிக்கின் பாரதமாகும். ஆதலால் மாதிரிக்காக ஒரு சில மட்டும் இங்கே காட்டப்பட்டன.

அடக்கு முறை தொடர்ந்தது

ஜாலியன் வாலா தோட்டத்துப் படுகொலையாவது, கண நேரத்தில் நிகழ்ந்துவிட்டது. அங்கு இறந்தவர்கள் சில நிமிடங்களே துடித்தனர். காயமுற்றவர் இரண்டொரு நாள் வேதனையுற்று மூச்சு அடங்கினர்.

ஆனால், அதன் பிறகு அரசு மேற்கொண்ட அடக்கு முறைக் காட்டாட்சியால், மக்கள் பட்ட துன்பம் நெடுநாள் தொடர்ந்தது. எந் நேரம் கைது ஆவோமோ! எத்தகைய சித்திரவதை நேருமோ என்று மக்கள் அஞ்சி அஞ்சி நடுங்கியதை இன்று நினைத்தாலும் நெஞ்சு பொறுக்குதில்லையே!

காங்கிரசுக் கமிட்டியின் அறிக்கை

> "டாக்டர் கிச்சுலுவையும் சத்திய பாலுவையும் இரகசியமாகப் பஞ்சாப்பை விட்டு வெளியேற்றியதன் மூலம் அரசு பெருங் குற்றவாளி யாகியது. துப்பாக்கிச் சூட்டிலும் அவசியமின்றி அவசரப்பட்டுவிட்டனர். அதிகாரிகள் ஆலோசனையுடனும் சாதுரியத்துடனும் நடந்து கொண்டிருப்பின், தலைவர்கள் வெளியேற்றப் பட்டமையால் உணர்ச்சிவசப்பட்ட கூட்டத்தாரின் வரம்பு கடந்த செயல்களைத் தடுத்திருக்க முடியும். வரம்பு கடந்த செயல்கள் எவ்விதமாக நோக்கினும் வருந்தத் தக்கனவே! கண்டிக்கத் தக்கனவே!

“ஜாலியன்வாலா தோட்டத்தில் நடைபெற்ற படுகொலை யானது, அப்போதும் அதன் பிறகும் நடந்த எந்த நிகழ்ச்சியாலும் சரியானது எனக் கருத முடியாதது. மனிதத் தன்மைக்கு மாறானது. பழிக்குப் பழி வாங்கும் படுபாதகச் செயலாகும்.

“அமிருத சரசில் இராணுவச் சட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டதற்கு, அங்கு நிகழ்ந்த எந்தச் செயலுமே காரணம் அல்ல என்று ஜெனரல் டையரே ஒப்புக் கொண்டுள்ளான். அது நீண்ட காலமாகப் புகைந்து கொண்டிருந்த அதிகாரத் திமிரை வேண்டுமென்றே வெளிக் காட்டிய விபரீதக் கொடுமையாகும். நாகரிக முள்ள எந்த அரசும் செய்யாத - செய்ய விரும்பாத காட்டு மிராண்டித் தனமாகும்”

என்று பஞ்சாப் படுகொலையை ஆய்வு செய்த காங்கிரசுக் கமிட்டியாரின் அறிக்கை விமரிசனம் செய்கின்றது.

“பஞ்சாபில் நடந்த வெகுஜனப் படுகொலையும் சவுக்கடி போன்ற அநாகரிகத் தண்டனைகளும் பிரிட்டிஷார் கையாளும் அடக்கு முறைகளும் விலங்குத் தன்மையும் அதிவிரைவில் பெரும் புரட்சியாக உருவெடுக்கும்” என்று மாமேதை லெனின் அன்றே வாய் மலர்ந்தார்.

★★★

5 லாகூர்

இதுகாறும் டையரின் திருவிளையாடல் நடந்த அமிருத சரசு பற்றிய செய்திகளை ஒருவாறு கண்டோம். அமிருத சரசில் மட்டுமல்ல! பஞ்சாப் மாநிலம் முழுவதுமே இத்தகைய கொடுமைகள் நடைபெற்றன. அவற்றையெல்லாம் தனித்தனியாகக் கூறுதல் இயலாது. சிலவற்றை மட்டும் தொகுத்துக் காண்போம்:

தலைநகரம்

பஞ்சாப்பின் தலை நகரம் லாகூர். பெஷாவர், கல்கத்தா, கராச்சி, பம்பாய் ஆகிய இடங்களுக்குச் செல்லும் இருப்புப் பாதைகள் சந்திக்கும் இடம். அங்கிருந்து டெல்லி 298 கல். 1919 இல் மக்கள் தொகை 2,50,000. மகமதியரே பெரும்பான்மையினர். இந்துக்கள் மகமதியரில் மூன்றில் ஒரு பங்கினரே யாவர்.

பஞ்சாப் பல்கலைக் கழகம் அமைந்துள்ள இடம் லாகூர். ஆண்கள் கல்லூரிகள் பத்தும் பெண்கள் கல்லூரிகள் இரண்டும் பலஉயர் பள்ளிகளும் உண்டு. ஆங்கில நாளிதழ்கள் இரண்டும் தேசிய மொழி இதழ்கள் சிலவும் வெளி வந்து கொண்டிருந்தன.

பஞ்சாப்பின் பிற பகுதிகளைக் காட்டிலும், லாகூரிலேயே படித்தவர் தொகை அதிகம். பெரும்பாலும் அரசியலில் ஈடுபாடு காட்டாமல் இருந்தது லாகூர். ஆதலால், சர் மைக்கேலின் பாராட்டுக்குப் பாத்திரமாகியது லாகூர்.

ஊர்வலம்

நாடெங்கும் ஒத்துழையாமை இயக்கம் நடைபெற்ற போது, லாகூரும் அதில் பங்கு கொண்டது.

பெண்களும் சிறுவரும் உட்படப் பல்லாயிரவர் ஊர்வலமாக வந்தனர். ஊர்வலம் அஞ்சல் நிலையத்தைத் தாண்டிச் செல்லாமல்

தடுக்கப்பட்டது. உடனே தலைவர்கள் முன் வந்து, ஊர்வலத்தைக் கலைந்து செல்லுமாறு செய்துவிட்டனர்.

பொதுக் கூட்டம்

மாலையில் பிராட்லா மன்றத்தில் ஒரு கூட்டம் நடைபெற்றது.

“அரசு ரௌலட் சட்டத்தை விலக்கிக் கொள்ளும்படி செய்வதற்காக, சாத்துவிக முறையில் போராட வேண்டும். எவ்வித வன்முறையிலும் ஈடுபடலாகாது” என்பதே கூட்டத்தில் தலைவர்கள் பேசிய கருத்து. அவர்கள் பேச்சில் இராஜத் துரோகம் மருந்துக்கும் இல்லை.

இராம நவமி விழா

ஏப்ரல் 9இல் அமிருத சரசைப் போலவே லாகூரிலும் இராம நவமி விழா கொண்டாடப்பட்டது. அதில் இந்து இசுலாம் இரு பிரிவினரும் ஒரு பிரிவினராகக் கலந்து கொண்டனர். சமய விழாவானது, தேசிய விழாவாக மலர்ந்தது. சில அதிகாரிகள்கூட, விழாவில் கலந்து கொண்டமையால், மக்கள் பெருமகிழ்ச்சி யுற்றனர்.

மைக்கேலின் சிந்தனை

இந் நிலையில் சர் மைக்கேலின் சிந்தனை, குறுக்கு வழியில் சென்று கொண்டிருந்தது.

மகாத்மாவின் பஞ்சாப் பயணம்

“மக்களுக்குச் சாத்துவிக ஒத்துழையாமையைப் போதிப்பதற்காகப் பஞ்சாப்புக்கு வருக” என்று மகாத்மாவைச் சத்தியபாலுவும் சுவாமி சிரத்தானந்தரும் அழைத்தனர். அழைப்பை ஏற்றுக் காந்தியடிகள், பம்பாயினின்றும் பஞ்சாப்பை நோக்கிப் புறப்பட்டார்.

மகாத்மா கைது

சர் மைக்கேல் சும்மா இருப்பானா? காந்தியடிகள் பஞ்சாப்பிற்குள் நுழையலாகாது என்று தடை விதித்தான். காந்தியடிகளைப் பஞ்சாப் எல்லைக்கு அப்பால் கைது செய்து, பம்பாய்க்கு அனுப்பி அங்கேயே காவலில் வைக்கும்படி ஏற்பாடு செய்தான்.

மக்கள் கொதிப்பு

காந்தியடிகள் பஞ்சாப்பிற்குள் நுழையாமல் தடுக்கப் பட்டதும் காவலில் வைக்கப்பட்டதும், ஆகிய செய்தி ஏப்ரல்

10இல்லாகூருக்கு எட்டியது. யாருடைய தூண்டுதலும் இல்லாமல், மக்கள் தாமாகவே கடைகளை மூடினர். முழு வேலைநிறுத்தம் நடைபெற்றது. ஊர்வலம் ஒன்று புறப்பட்டது. போகப் போக ஊர்வலம் மிகப் பெரியதாக வளர்ந்து விட்டது. கிறிஸ்தவக் கல்லூரி அருகே ஊர்வலம் நின்றது.

அரசு மாளிகையை நோக்கி

காந்தியடிகளை விடுதலை செய்யுமாறு வேண்டிக் கொள்வதற்காக, முந்நூறு நானூறு பேர் மட்டும், அரசு மாளிகையை நோக்கிச் செல்லலாயினர்.

துப்பாக்கிச் சூடு

அவர்களை மேலே செல்லவிடாமல் சிப்பாய்கள் தடுத்தனர். தடையை மீறி மக்கள் மேலே செல்ல முயன்றனர். உடனே துப்பாக்கிப் பிரயோகம் நடந்தது. இரண்டு மூன்று பேர் மாண்டனர். பலர் காயமுற்றனர். கூட்டம் பின்னடைந்தது. இறந்தவரையும் காயமுற்றவரையும் போலீசார் அப்புறப்படுத்தினர். காயமுற்றவர்க்கு மருத்துவ உதவி மறுக்கப்பட்டது.

அதிகாரிகள், மக்களைக் கலைந்து செல்லுமாறு கட்டளையிட்டனர். ஆனால், மக்கள் கலைந்து போக மறுத்தனர்.

இரு நிமிட அவகாசம்

பண்டித ராம் பஜ்தத் என்பவர், விரைந்து வந்து கூட்டத்தைக் கலைந்து செல்லுமாறு செய்ய முயன்றார். போலீசார் அவசரப் படுத்தினர். சிறிது அவகாசம் தரும்படி ராம் பஜ்தத் மன்றாடினார். “இரு நிமிடங்களே அவகாசம்” என்று போலீசார் பிடிவாதமாகக் கூறிவிட்டனர். “கூட்டத்தை அமைதிப்படுத்தி அனுப்ப, இரண்டு நிமிடங்கள் போதாது” என்று எவ்வளவோ எடுத்துக் கூறியும் பயன்படவில்லை.

சுடத் தொடங்கிவிட்டனர்

விபரீதம் நேர்ந்து விடக் கூடாதே என்பதற்காகப் பண்டிதர் முயன்றார். இரண்டு நிமிடம் முடிந்தவுடன், போலீசார் சுடத் தொடங்கிவிட்டனர். சேதம் மிகமிக அதிகம்.

மக்கள் கையில் எவ்வித ஆயுதமும் இல்லை. எவ்வித வன்முறையிலும் ஈடுபடவில்லை. போலீசார் சுடுவதற்குக் காரணமே இல்லை. இதனால் மக்கள் உள்ளம் குமுறினர்.

தலைவர்கள் வேண்டுகோள்

காயமுற்றவரையும் இறந்தவரையும் எடுத்துச் செல்ல அனுமதி கிடைக்கவில்லை. இதனால், வெறுப்பு மேலும் வளர்ந்தது. காயமுற்றவரையும் இறந்தவரையும் தருமாறு, தலைவர்கள் வந்து வேண்டினர். போலீசார் மனம் இரங்கவில்லை.

அர்த்தால் தொடர்ந்தது

எனவே மறுநாளும் சத்தியாக்கிரகமும் வேலை நிறுத்தமும் தொடர்ந்தது. மக்களைச் சமாதானப் படுத்தாமல், வேலை நிறுத்தத்தைக் குலைப்பதிலேயே அதிகாரிகள் கவனம் செலுத்தினர்.

பொதுக் கூட்டம்

மறுநாள் பாட் ஷாஹி மசூதியில் ஒரு கூட்டம் நடந்தது. வேலை நிறுத்தம் விலக்கிக் கொள்வது பற்றி ஆலோசனை செய்யப்பட்டது. யாதொரு முடிவும் ஏற்பட வில்லை.

மீண்டும் துப்பாக்கிச் சூடு

கூட்டம் முடிந்து மக்கள் அமைதியாகத் திரும்பிச் சென்று கொண்டிருந்தபோது, மீண்டும் வேண்டுமென்றே சுடப்பட்டனர். உயிர்ச் சேதமும் ஏற்பட்டது. அதனால் மக்கள் எரிமலையாயினர். தலைவர்களின் ஆணையையும் மீறும் நிலை ஏற்பட்டது.

லங்கர் கானாக்கள்

வேலை நிறுத்தம் தொடர்ந்தது. மக்களுக்கு உணவு கிடைக்க வழியின்றிப் பட்டினி நிலை வரும் போலிருந்தது. அதற்காகப் பொது மக்களிடம் பணவசூல் செய்து 'லங்கர் கானா'க்கள் (இலவசச் சிற்றுண்டி விடுதிகள்) நிறுவப்பட்டன.

தலைவர்கள் மூவர் வெளியேற்றம்

டெபுடி கமிஷனர், தலைவர்கள் மூவரைத் தம்மை வந்து காணுமாறு அழைத்தார். அவரைக் காணச் சென்றவர் மூவரையும் பஞ்சாப்பிலிருந்து வெளியேற்றினார். இராணுவச் சட்டம் லாகூரில் அமலுக்கு வந்தது.

அதிகாரிகளின் எச்சரிக்கை

கடைகள் திறக்கப்படாவிட்டால், இராணுவமே கடைகளைத் திறக்கும் என்று எச்சரிக்கை விடப்பட்டது. இராணுவ

நிர்ப்பந்தத்தால், வியாபாரிகள் தங்கள் கடைகளைத் திறக்க நேர்ந்தது. அமிருத சரசில் மக்கள் அனுபவித்த துயரத்தைவிட எவ்வகையிலும் குறைந்ததல்ல லாகூரின் துயரம்.

உயிருக்கோ பொருளுக்கோ யாதொரு தீங்கும் லாகூர் மக்கள் செய்யவில்லை. இருந்தும் பல முறை துப்பாக்கிச் சூடு நடந்தது.

இராணுவச் சட்டத்துக்குக் காரணம்

"பாட் ஷாஹி மசூதியில் கூட்டம் நடைபெற்ற போது, குற்ற ஆய்வுத்துறை அதிகாரி ஒருவர் கொடுமைப்படுத்தப் பட்டார். அதனாலேயே இராணுவச் சட்டம் கொண்டு வரப்பட்டது" என்று இராணுவச் சட்டத்துக்குக் காரணம் காட்டினர் அதிகாரிகள்.

அந்த அதிகாரி தாக்கப்பட்டிருந்தால், அது மக்கள் செய்த தவறுதான். ஆனால், அத்தகைய சிறு நிகழ்ச்சியே இராணுவச் சட்டத்துக்கு நியாயம் கற்பிக்கப் போதுமான தாயின், எப்போதும் எங்கும் நிரந்தரமாக இராணுவச் சட்டம் நடைமுறைக்கு வந்துவிடலாமே!

லாகூர் மக்களின் நோக்கம்

ஜாலியன் வாலா தோட்டத்துப் படுகொலை நடந்த அமிருத சரசுக்கும் லாகூருக்கும் யாதொரு தொடர்பும் இல்லை. சட்டத்தையும் ஒழுங்கையும் கடைப்டிப்பதிலேயே லாகூர் மக்கள் கண்ணும் கருத்துமாக இருந்தனர்.

மைக்கேல் வளர்த்த வெறுப்பு

லெப்டினெண்ட் கவர்னர் சர் மைக்கேல் முதலிலிருந்தே படித்த வர்க்கத்தாரின் பகையைத் தேடிக் கொண்டார் என்பதை முன்பே கண்டோம். போருக்குப் பணம் சேர்ப்பதிலும் படை திரட்டுவதிலும் பிடிவாதம் காட்டி, மக்களிடம் வெறுப்புத் தீயை மேன்மேலும் மூட்டிவிட்டார்.

அதிகாரிகளின் கொடுமை

மைக்கேலின் இத்தகைய ஆணவச் செயலாலேயே, லாகூரில் பயங்கர விளைவுகள் நேர்ந்தன. மேல் நிலை அதிகாரிகளிடம் நல்ல பெயர் எடுத்தல் வேண்டும் என்ற ஆர்வத்தால், கீழ்நிலை அதிகாரிகள், தாங்கள் நினைத்தபடியெல்லாம் மக்கள்மேல் கொடுமைகளைச் சுமத்த லாயினர்.

இவையெல்லாம் பஞ்சாப் மக்களின் வெறுப்புக்குக் காரணமாயின. மக்கள் அந்த வெறுப்பை வெளியே காட்டிக் கொள்ளாமல், அமைதியாகவே இருந்தனர்.

எவ்விதக் குற்றச் செயலிலும் ஈடுபடாமலிருந்த மக்கள் அநியாயமாகச் சுடப்பட்டார்கள். தெரிந்தோ தெரியாமலோ ஊர்வலம் சென்ற மக்கள், குற்றவாளிகளைப் போல் பழி வாங்கப்பட்டனர்.

அதிகாரிகள் செய்த எச்சரிக்கை

சிப்பாய்களின்மேல் வெடிகுண்டு வீசப் பட்டால், நூறு கஜ தூரத்துக்குள் இருப்போர் யாவரையும் வெளியேற்றி விட்டு, அங்குள்ள கட்டடங்கள் யாவும் தரை மட்டம் ஆக்கப்படும் என்பது அதிகாரிகளின் எச்சரிக்கை.

இரயில் பயணக் கட்டுப்பாடு

டாங்கா வண்டிகள் அனைத்தையும் அரசினர் கைப்பற்றிக் கொண்டனர். இந்தியருக்குச் சொந்தமான கார்களும் அதிகாரிகள் வசமாயின. இரயில் பயணமும் கட்டுப்படுத்தப்பட்டது.

தீங்கிழைக்கும் நோக்கத்துடன் நகரத்தை விட்டு வெளி மாவட்டங்களுக்கு மக்கள் செல்வதைத் தடுக்கவே இந்த ஏற்பாடு என்று அதற்குக் காரணம் சொல்லப்பட்டது.

அரசின் உத்தரவு

உணவுப் பஞ்சம் வரும் என்று முன்னேற்பாடாக மக்கள், லங்கர் கானாக்கள் (இலவசச் சிற்றுண்டி விடுதிகள்) ஏற்படுத்திக் கொண்டமையை முன்பே கண்டோம். அந்த விடுதிகளை உடனே மூடிவிடல் வேண்டும் என்று உத்தரவு பிறந்தது.

முதன் முதலில் மக்கள் கூட்டம் கூடிய பாட் ஷாஹி மசூதி மூடப்படல் வேண்டும் என்றும் உத்தரவிடப்பட்டது. மசூதியில் எந்த ஓர் இந்துவையும் விடமாட்டோம் என்று இணங்கியதன் பேரில், அந்த உத்தரவு விலக்கிக் கொள்ளப்பட்டது.

அவசரகால நீதிமன்றங்கள்

அவசரகால நீதிமன்றங்கள் திறக்கப்பட்டன. வழக்குக்கள் குவியலாயின. இரண்டு ஆண்டுச் சிறையும் ஆயிர ரூபாய் அபராதமும் சவுக்கடியும் எல்லோருக்கும் தண்டனையாகக் கிடைத்தன. சவுக்கடியின் தொகை உயர்ந்த பட்சம் முப்பது. குறைந்த பட்சம் ஐந்து.

உடல் நலம் குன்றியவர்கள் கூடச் சவுக்கடியிலிருந்து விலக்குப் பெற இயலவில்லை. உடல் சவுக்கடியைத் தாங்குமா என்று மருத்துவப் பரிசோதனையும் செய்யப்படவில்லை.

அன்புள்ள தண்டனை

"இந்தத் தண்டனையானது, கொடுமையான பின் விளைவுகளை ஏற்படுத்தும் என்று நினைக்கவில்லையா?" என்று கேட்கப்பட்ட போது, "இது மிக்க அன்புள்ள தண்டனை" என்று ஓர் அதிகாரி புலைவாய் மலர்ந்தான்.

சவுக்கடிக்குக் காரணம்

"சிறை வாழ்வு மட்டும் தண்டனையாக இருந்தால், மக்கள் அஞ்சமாட்டார்கள். ஏனெனில், அவர்களின் வீட்டு வாழ்க்கையைவிடச் சிறை வாழ்க்கை எவ்வளவோ மேலானது. சிறையில் அவர்களுக்கு நல்ல உணவு கிடைக்கும். சிறையின் சூழ்நிலை விரைவில் பழகிப் போகும். ஆதலால், அது தண்டனையாகத் தெரியாது. அது மட்டுமல்ல. இவ்வளவு பேரையும் அடைக்கச் சிறையில் இடம் ஏது!"

என்று சவுக்கடிக்கு அதிகாரிகள் நியாயம் கற்பித்தனர்.

"ஒரு சவுக்கடி ஆயிரம் சிப்பாய்களுக்குச் சமம்" என்பது கர்னல் ஜான்சனின் கருத்து.

திரு மனோகரலாலுக்குக் கொடுமை

சாதாரண மக்கள் தாம், இக் கொடிய தண்டனையை அனுபவித்தார்கள் என்பதில்லை. படித்துப் பட்டம் பெற்றுப் பதவியில் இருந்தவர்களும் இக் கொடுமைகளுக்கு ஆளாயினர்.

திரு மனோகர லால் பஞ்சாப் பல்கலைக் கழகத்தின் எம்.ஏ., பட்டம் பெற்றவர். கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தின் பி.ஏ., பட்டமும் அவருக்கு உண்டு. பஞ்சாப் பல்கலைக் கழகத்தின் சிறப்பு உறுப்பினராகப் பதவி வகித்தார். கேம்பிரிட்ஜ் செயின்ட் ஜான் கல்லூரியின் நிறுவனர் என்ற பெருமை அவருக்கு உண்டு. உயர்நீதிமன்ற வக்கீல்கள் சங்கத்தின் துணைத்தலைவர்; பார்மன் கல்லூரி பட்டதாரிகள் சங்கத் தலைவர் அவர்.

தேசியத்தை ஆதரிக்கும் டிரிபியூன் பத்திரிகையின் புரவலர்களுள் ஒருவர்என்ற காரணத்துக்காக, அவர் கைது செய்யப்பட்டு, மத்தியச் சிறைக்கு அனுப்பப்பட்டார்.

அங்குக் கைக் கெடிகாரம், தங்கச் சங்கிலி, பேனா, பணம் எல்லாம் பறித்துக் கொண்டனர். ஆபாசம் நிரம்பிய ஓர் அறையில் அடைத்தனர். உடை மாற்றவும் அனுமதி தரவில்லை.. அவர் கைதான செய்தி, குடும்பத்தினர்க்கு அறிவிக்கப்படவே இல்லை. அவர் சிறையிலிருந்தபோது, அவர் குடும்பத்தினரை வெளியேற்றிவிட்டு, வீட்டைச் சோதனை யிட்டனர். வீட்டைப் பூட்டி விட்டனர். வேறு வழியின்றிக் குடும்பத்தினர் வேலைக்காரர்களின் விடுதியில் தங்க நேர்ந்தது. படுக்கப் பாய் இல்லாமல், நண்பர்கள் கொடுத்த பாயில் படுத்தனர்.

இதில்அதிசயம்என்னவென்றால்,அவர்விடுதலையாகும்வரை இன்ன குற்றத்திற்காகக் காவலில் வைக்கப்பட்டார் என்பது தெரிவிக்கப்படவே இல்லை.

அரசின் அறிக்கை வீடுகளில்

இராஜத் துரோகிகள் எனக் கருதப்படுவோர்தம் வீடுகளில் அரசின் அறிக்கைகளை ஒட்டி வைத்து விடுவர். அவை அழுக்கு ஆனாலும் கிழிந்து போனாலும் வீட்டுக்கு உரியவர் தண்டனை பெற நேரும்.

கண்ணிற் பட்டவர் அனைவரும் கைது

சனாதன தர்ம சாலையின் கதவிலும் அரசின் அறிக்கை ஒட்டப்பட்டது. யாரோ அதைக் கிழித்து விட்டனர். அதற்காக, அந்த எல்லைக்குள் கண்ணில் பட்டவர் எல்லோரையும் கைது செய்யும்படி உத்தரவு பிறந்தது. சுமார் ஐந்நூற்றுவர் கைதாயினர். அவருள் ஆசிரியரும் மாணவரும் அடங்குவர். மூன்று கல் தொலைவுக்கு அப்பாலிருந்த கோட்டைக்குத் தங்கள் படுக்கைகளைத் தலையில் சுமந்துகொண்டு கடுமையான வெயில் அவர்களை நடத்திச் சென்றனர்.

அங்கு இரண்டு நாள் காவலில் அவதிப்பட்ட பிறகு, 'இனி இத்தகைய செயல் நிகழ விடமாட்டோம்' என்று உறுதிமொழி தந்த பின்னரே விடுதலை கிடைத்தது.

அதிகார உளறல்

அவ்வாறு ஐந்நூறு பேரைத் தண்டித்தது அவர்களின் நன்மைக்காகவே என்று ஜான்சன் என்ற அதிகாரி வேதாந்தம் பேசினான்.

"இராணுவச் சட்டத்தின் கொடுமையைக் காட்டுவதற்கு வாய்ப்பை எதிர் பார்த்திருந்தேன். அந்த வாய்ப்பாக இதைப் பயன்படுத்திக் கொண்டேன்"

என்பதும் அந்த அதிகாரியின் அதிகார உளறல்.

இதைப் போலவே டி.ஏ.பி. கல்லூரி, தயாள்சிங் கல்லூரி, மருத்துவக் கல்லூரி முதலியவற்றிலும் தண்டனைகள் கையாளப்பட்டன. "தண்டனை தருவது நேரக்கமல்ல. மாணவர்கள் குறும்பு செய்யாமலிருக்கும் பொருட்டே இந்த நடவடிக்கை" என்று அதே அதிகாரி ஞாயம் பேசினார்.

காலை 7 மணி, 11 மணி, மாலை 3 மணி, இரவு 7-30 மணி. ஆக ஒரு நாளைக்கு நான்கு முறை மாணவர்களின் பெயர்களைக் கூப்பிட்டு, அவர்கள் கல்லூரியில் உள்ளனரா என்று சரி பார்க்க வேண்டும் என்று ஆணையிடப்பட்டது.

17 கல் அல்ல. 16 கல் தூரந்தான்!

மருத்துவக் கல்லூரி மாணவர்கள் மூன்று வார காலம் நாடோறும் கடிய வெயிலில் 17 கல் தூரம் நடக்கவைக்கப்பட்டனர். "17 கல் தூரம் நடந்தது உண்மையா?" என்று கேட்டதற்கு, "இல்லை, இல்லை. 16 கல் தான்" என்று கிண்டலாகப் பதில் அளித்தான் ஜான்சன்.

அவ்வாறு நடந்ததனால், மாணவர்களுக்கு எவ்விதத் துன்பமும் ஏற்படவில்லை என்பதும் அவன் கூற்று.

கல்லூரி முதல்வர்கள் தந்த தண்டனை

ஐரோப்பிய மாதர் சிலர் இழிவு படுத்தப்பட்டனர் என்று வீண் பழி சுமத்தி, கல்லூரி மாணவர்கள் சிலர் த்ண்டிக்கப்பட்டனர். கல்லூரி முதல்வர்களே தண்டனைகளை நிர்ணயிக்குமாறு ஏற்பாடு செய்தனர்.

அதன்படி கல்லூரி முதல்வர்கள் சில தண்டனைகளை வழங்கினர். ஆனால், அந்தத் தண்டனைகள் போதாது என்று கூறி, மேலும் கடுமையான தண்டனை தருமாறு செய்தனர். அவ்வாறு கடுமையான தண்டனை தாராவிட்டால், கல்லூரிகள் மூடப்படும். மாணவர்கள் தேர்வு எழுதாமல் தடை செய்யப்படுவர் என்றும் அச்சுறுத்தினர். ஆயிரத்துப் பதினொருவர் மாணவர்கள் அதன்படி தண்டிக்கப்பட்டனர்.

இராஜத் துரோகப் பிரசுரம்

தயாள் சிங் கல்லூரியிலும் ஒட்டப்பட்ட அரசின் அறிக்கையின் அருகே, யாரோ ஒருவர் இராஜத் துரோகத்துண்டுப் பிரசுரம் ஒன்றினை ஒட்டிவிட்டார். இதை அதிகாரிகள் எப்படிப் பொறுப்பர்!

கல்லூரி முதல்வருக்கு உத்தரவு

மறுநாள் பகல் 12 மணிக்குள், துண்டுப் பிரசுரம் ஒட்டியவரைக் கண்டு பிடித்துக் கமாண்டிங் அதிகாரியிடம் ஒப்படைத்தல் வேண்டும் என்று கல்லூரி முதல்வருக்கு உத்தரவு வந்தது.

எவ்வளவோ முயன்றும், துண்டுப் பிரசுரம் ஒட்டியவரைக் கண்டு பிடிக்க முடியவில்லை. அதற்காக, கல்லூரி முதல்வருக்கு ரூபாய் 250 அபராதம் விதித்தனர். அபராதம் கட்டாவிட்டால், மூன்று மாதச் சிறை என்றும் கூறினர். அபராதம் அப்போதே செலுத்தப்பட்டது.

குற்றம் செய்தார்களோ இல்லையோ, அதைப்பற்றிக் கவலையில்லை. ஒவ்வொரு கல்லூரியிலும் இத்தனை இத்தனை மாணவர்கள் தண்டிக்கப்படல் வேண்டும் என்று அதிகாரிகளே உத்தரவிட்டனர்.

தண்டனை போதாது

அந்த உத்தரவின்படி கல்லூரி நிர்வாகம் அளித்த தண்டனைகள் போதா. உயர்த்தப்படல் வேண்டும் என்றும் வற்புறுத்தினர்.

தண்டனை பலவகை

அதன்படி எக் கல்லூரியிலும் சேரக் கூடாது என்று அறுவரும், எந்தத் தேர்வும் எழுதலாகாது என்று அறுவரும், ஓர் ஆண்டுவரை கிராமத்தில் வசித்தல் வேண்டும் என்று அறுவரும், உபகாரச் சம்பளம் கிடைக்காது என்று பதினைவரும், வேறு வகையில் நூற்றுப் பன்னிருவரும் தண்டனை பெற்றனர்.

இவ்வாறே தயாள்சிங் கல்லூரியிலும் குற்ற மற்ற அப்பாவி மாணவர்கள் பலருக்குத் தண்டனை கிடைத்தது.

எழுவர் கல்லூரியைவிட்டு விலக்கப்பட்டனர்.

ஐவர் ஓர் ஆண்டுக்கு நாட்டுப்புறம் அனுப்பப்பட்டனர்.

பதினால்வர் ஓர் ஆண்டு குறைந்த வகுப்பில் சேர்க்கப்பட்டனர்.

பதினால்வர் மூன்று மாதம் படிப்பினின்று விலக்கப்பட்டனர்.

இருவர் உதவிச் சம்பளம் இழந்தனர்.

இரு நூற்று நாற்பத்து ஐவர் நன்னடத்தை ஜாமீன் அளிக்குமாறு கட்டளையிடப்பட்டனர்.

அபராதம்

இவை தவிர, மாணவர்களிடம் கணிசமான தொகை அபராதமாகவும் வசூலிக்கப்பட்டது. அந்தத் தொகை போர்வீரர் உதவி நிதிக்காக என்று கூறிக் கொண்டனர்.

இருவர் செல்ல லாகாது

சுதேசிகள் இருவருக்குமேல் வந்து, ஐரோப்பியர் ஒருவருக்கு வழி விடாதிருப்பின், அதனால் அமைதி குலையும் என்று காரணம் காட்டி, இந்தியர் இருவருக்குமேல் ஒருவருக்குப் பக்கத்தில் ஒருவராகச் செல்லுதல் கூடாது என்றும் பணித்தனர்.

மோட்டார் வாகனங்கள் பறிமுதல்

'மக்கள் கலகங்கள் செய்தல் இயலாது என்பதை அவர்களுக்கு உணர்த்துவதற்காகவே' என்று மோட்டார் வாகனங்கள் கைப்பற்றப்பட்டன.

திருமண வீட்டார் கைது

இந்தக் கொடிய உத்தரவுகள் நடைமுறையில் இருந்த போது, லாகூரில் ஒரு திருமணம் நடந்தது. அதில் பத்துப் பேருக்கு மேல் கூடியிருந்தனர். மணமகன், புரோகிதர் உட்பட அனைவரும் கைது செய்யப்பட்டனர். அபராதமும் விதிக்கப்பட்டது. புரோகிதருட்படப் பலர் சவுக்கடி பட்டனர்.

பின்னர் கர்னல் ஜான்சன் தலையிட்டு அவர்களை விடுதலை செய்தார். அபராதமும் திருப்பித் தரப்பட்டது.

அரசின் அகம்பாவமான உத்தரவுகள் அப்பாவி மக்களுக்கு எவ்வளவு துன்பத்தையும் மனக் கசப்பையும் உண்டாக்கின என்பதற்கு இச் சம்பவம் போதுமான சான்று ஆகும்.

ஏடுகளுக்குத் தண்டனை

இவை தவிர ஏடுகள் பலவும் தண்டனைக்குள்ளாயின.

'டிரிப்யூன்' ஏட்டின் புரவலரான மனோகர லால் கைது ஆனமை முன்பே அறிவோம்.

சர்மைக்கேலின் ஆணவப் போக்கைச் சுட்டிக்காட்டி, 'பிரசித்தமான அறிவீனம்' என்ற தலைப்பில் கட்டுரை எழுதியதற்காக அதன் ஆசிரியர் காளிநாத் ராய் கைது செய்யப்பட்டுத் தண்டனை அடைந்தார். உண்மையில் அந்தக் கட்டுரையில் இராஜத் துவேஷம் அணுவளவுகூட இல்லை என்று காங்கிரசு ஆய்வுக் குழுவினர் அறுதியிட்டு உரைத்துள்ளனர்.

'பிரதாப்' ஆசிரியரும் தண்டனைக் குள்ளானார்.

இத்தகைய தண்டனைகளால், டிரிப்யூன், பிரதாப் பஞ்சாபி முதலிய தேசிய ஏடுகள் வெளி வராது நின்று போயின.

இராணுவச் சட்டக் கமிஷன்

இவ்வளவு கொடுமைகளுக்கும் வழி வகுத்துக் கொண்டு அராஜகத்தைக் கையாண்ட அரசினர், தங்கள் செயல்களுக்கு ஞாயம் கற்பிப்பதற்காக இராணுவச் சட்டக் கமிஷன் என்ற புதிய நீதிமன்றங்களை நிறுவினர்.

இராஜத் துரோகம் முதலிய பெரிய குற்றங்கள் மட்டுமே அங்கு விசாரணைக்கு வரும். நீதி விசாரணைக்கென நிறுவிய அந்த நீதிமன்றங்களும் கொடுமைக்கு உறைவிடங்களாகவே இருந்தன.

பதினொருவர் பட்ட பாடு

பொதுநலத் தொண்டில் ஈடுபட்ட பிரமுகர்கள் பதினொருவர் காவலில் வைக்கப்பட்டனர். அவர்களில் எழுவர் பாரிஸ்டர்களும் வக்கீல்களும் ஆவர்.

அரிகிஷன்லாலின் சோக வரலாறு

அவர்களுள் முதன்மையானவர் லாலா அரிகிஷன் லால். அவரை ஏன் கைது செய்தனர்! மக்களிடம் அவர் பெற்றிருந்த செல்வாக்கு சர் மைக்கேலின் கண்ணை உறுத்தியது; கருத்தை வருத்தியது. அதுதான் காரணம்!

அரிகிஷன் பல கம்பெனிகளின் இயக்குனர். அவரது தொடர்புடைய கம்பெனிகளையெல்லாம் நாசமாகிவிட சர் மைக்கேல் முயன்றார். திடீரென்று ஊரைவிட்டு வெளியேறும்படி உத்தரவிட்டார். அவர் மேல் ஏதோ ஒரு வழக்குக் கொண்டு வரப்பட்டது. சிறையில் வைக்கப்பட்டார்.

அவர்மேல் சுமத்தப்பட்ட குற்றச் சாட்டு ஒரு கட்டுக்கதை.

இலண்டனுக்குப் போய் நம் மக்களின் குறைகளை எடுத்துக் கூறும் பொருட்டு ஒரு பிரதிநிதிக் குழுவைக் காங்கிரசு மகாசபை நியமித்தது. அரிகிஷன் அக் குழுவில் ஒருவர். அந்த ஆண்டு ஜலந்தரில் நடைபெற்ற காங்கிரசு மகாசபை மாநாட்டுக்கும் அவரே தலைவர்.

அவரும் இன்னும் சிலரும் அரசுடன் போர் இயற்றினார்கள் என்பது குற்றச்சாட்டு.

இராணுவச் சட்டக் கோர்ட்டில் வாதாடுவதற்காக அரிகிஷன் செலவிட்ட தொகை பல்லாயிரம். அந்த வழக்குச் சமயம் வணிகத்தில் ஏற்பட்ட இழப்பு மூன்று இலட்சம் ரூபாய்கள் இருக்கலாம். அரிகிஷனுக்கு அது ஒரு பொருட்டல்ல. ஆனால் வேறு பலர் இராணுவக் கோர்ட்டு வழக்குகள் மூலம் நடுத்தெருவில் நிற்க நேர்ந்தது.

சந்தானம் பேசுகின்றார்

சந்தானம் என்பவர் லாகூரில் ஒரு பாரிஸ்டர். ஏப்ரல் 10இல் நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டினை நேரில் பார்த்தவர் அவர். இராணுவக் கோர்ட்டுகளில் நடந்த அநியாயங்கள் பற்றி அவர் கூறுவதைச் சிறிது கேட்போம்:

“இந்தியர் எவ்வளவு செல்வாக்கு உள்ளவ ராயினும் இழிவு படுத்தப்பட்டனர். இராணுவச் சட்டக் கோர்ட்டுகளில் நூற்று கணக்கான வழக்குகள் குவிந்தன. குற்றம் சாட்டப்பட்டவர்கள் வக்கீல் வைத்துக் கொள்ள வாய்ப்புக் கிடையாது.

“வழக்கு விசாரணைக்கு வரும்போது, அரசினர் பேரளவில் பத்துப் பதினைந்து பேருக்கு யாரோ ஒரு வக்கீலை நியமிப்பர். அந்த வக்கீலுக்குத் தன் கட்சிக்காரர் வழக்கு இன்னதென்றே தெரியாது. கட்சிக்காரரோ சிறையில் இருப்பார்! அவரைக் கண்டு பேசவும் அவகாசம் கிடையாது! வழக்கோ அதிகம்! விசாரணையோ வேடிக்கை!

“ஒரே நேரத்தில் முப்பது நாற்பது பேர் கோர்ட்டில் நிறுத்தப்படுவர். அவர்களுக்குத் தங்கள் மேல் சுமத்தப்பட்டுள்ள குற்றம் எது என்று தெரியாது. கொண்டு வந்து நிறுத்தப்பட்டவுடன், “சாட்சிகள் உண்டா?” என்று

கேட்பர். ஆனால் சாட்சிகளை அழைத்து வர அவகாசமோ வசதியோ தர மாட்டார்கள்.

"அப்படியே யாராவது சாட்சிகள் வந்தாலும் அவர்களிடம் வாக்கு மூலம் பெற மாட்டார்கள். ஒரே நாளில் அத்தனை வழக்குக்களுக்கும் தீர்ப்பு வழங்கப்பட்டுவிடும். அனைவருக்குமே தண்டனை கிடைப்பது உறுதி. விடுதலை என்பது மிக அரிது.

"ஏழைகளின் தலையெழுத்து இது என்றால், செல்வம் படைத்தவர்கள் நல்ல வக்கீல்களை நியமித்துக் கொள்ளலாமே! நியமிக்கும் வாய்ப்பு அவர்களுக்கு உண்டுதான்! ஆனால், வழக்கு என்றைக்கு விசாரணைக்கு வரும் என்பது யாருக்குத் தெரியும்! வக்கீல்கள் குறித்தநேரத்தில் வந்து வாதிடுவது எப்படி? அப்படியே வாய்ப்புக் கிடைத்தாலும் வக்கீல்களுக்கு வாதிடுவதற்கு வசதி யிருக்காது. அவமரியாதைதான் கிடைக்கும். வக்கீல்கள் ஏதாவது விவரங்கள் கேட்டாலும் பதில் கிடைக்காது.

"அரசினருக்கு விரோதமாகக் குற்றவாளிகள் தரப்பில் வாதிட்டால், அரசின் வெறுப்புக்கு ஆளாக நேருமே என்ற அச்சத்தால், பல வக்கீல்கள் வாதிட மறுத்து விடுவர்.

"வெளியூர் வக்கீல்கள் வரக் கூடாது என்றும் அரசு தடுத்தது. அங்கு நடக்கும் அநியாயங்கள் வெளியே தெரியக் கூடாது என்பதற்காகவே இந்தத் தடை.

"வழக்குக்கள் எப்படி நடந்தன என்பதற்குப் பதச் சோறாக ஒன்றினை மட்டும் குறிப்பிட்டால் போதும்."

"ஒரு வழக்கில் அரசுத் தரப்பில் ஒரு சாட்சி ஆஜர் ஆனார். அவர் ஒரு போலீசு அதிகாரி. எதிர்க்கட்சி வக்கீல் அவரை அரைமணி நேரம் குறுக்கு விசாரணை செய்தார். முதலில் அவர் கொடுத்த வாக்குமூலம் முழுவதும் பொய் என்பது நிரூபணம் ஆகிவிட்டது. ஆயினும் எதிர்க் கட்சி வக்கீலின் குறுக்கு விசாரணை புறக்கணிக்கப்பட்டது. அதனால் எதிரிக்குப் பயன் ஏதும் இல்லை. தண்டனை கிடைத்தேவிட்டது.

"இத்தனை முறைதான் குறுக்கு விசாரணை செய்யலாம். இவ்வளவு நேரந்தான் கேள்வி கேட்கலாம் என்று வரையறை செய்தனர்."

"சிக்கலான கேள்விகள் கேட்டால் பதில் சொல்லல் வேண்டா என்று அரசுத் தரப்புச் சாட்சிகளிடம் கூறப்பட்டது.

"ஒரு சாட்சி, குறுக்கு விசாரணையில் சிக்கிக் கொண்டால், 'ஞாபகம் இல்லை என்று சொல்' என்பார்கள்."

உதவிக்குக் கைம்மாறு

இவ்வளவு கொடுமையும் லாகூரில் நடந்தது. அப்பாவி மக்கள் அதிகாரிகளுக்கு இயன்ற அளவு உதவியே செய்தார்கள்! அவர்கள் செய்த உதவிக்கு இராணுவச் சட்டமும் தண்டனையுமே கைம்மாறாகக் கிடைத்தது. இரக்கம் இல்லாத அரக்கன் ஒருவன் அங்கு அதிகாரியாகத் திணிக்கப்பட்டான்.

ஐயோ! லாகூர் வாசிகளே! அன்று நீங்கள் பட்ட பாட்டை இன்று நினைத்தாலும் எங்கள் நெஞ்சு வெடித்து விடும் போல் உள்ளது. கண்களில் நீர் சுரக்கின்றது. எழுதுகின்ற கை நடுங்குகின்றது. நீங்கள் பட்ட துன்பம் இன்று எங்கள் கண்ணுக்குத் தியாக தீபமாகச் சுடர்விரிக்கின்றது. அந்த விளக் கொளிதான் பின்னர் சுதந்தர வேள்வியாக மலர்ந்து விடுதலைப் பயனைத் தந்தது. உலகம் உள்ளவரை உங்களை நினைவில் வைத்துப் போற்றுவோம். அதுதான் எங்களால் உங்களுக்குச் செய்ய முடிந்த கைம்மாறு!

★★★

6 காசூர்

லாகூர் மாவட்டத்திலுள்ள முக்கிய நகரங்களில் ஒன்று காசூர். லாகூரிலிருந்து 40 கல் தொலைவிலுள்ள ஒரு பிரதான இரயில்நிலையம். ஒரு வணிக மையமான அதன் மக்கள் தொகை 24,000.

ஏப்ரல் 10 வரை அங்கு எந்த நிகழ்ச்சியுமே நடைபெறவில்லை.

செய்தி எட்டியது

ஏப்ரல் 11இல் தான் மகாத்மா சிறைப்பட்ட செய்தியும் கிச்சுலு - சத்தியபாலு பஞ்சாப்பிலிருந்து கடத்தப்பட்ட செய்தியும் காசூருக்கு எட்டியது.

பொதுக் கூட்டமும் அர்த்தாலும்

உடனே அர்த்தால் அனுசரிக்கப்பட்டது. அன்று மாலையில் ஒரு பொதுக் கூட்டம் நடந்தது. அங்கு ரௌலட் சட்டத்தின் தீமைகளை மட்டுமே தலைவர்கள் விளக்கிப் பேசினர். இராஜத் துவேஷமாக ஏதுமே பேசவில்லை. மறுநாளும் அர்த்தால் தொடர்ந்தது. மக்கள் அமைதியாகவே வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

திடீர் திருப்பம்

ஆனால் திடீரென்று ஒரு திருப்பம் ஏற்பட்டது. அமிருத சரசி லிருந்து வந்த சிலர், ஜாலியன் வாலா தோட்ட நிகழ்ச்சியைப் பற்றி மிகைப்படுத்திக் கூறினர். மக்கள் மனம் கொதிப்படைந்தனர். ஆயினும் எவ்விதக் கிளர்ச்சியும் செய்ய முயலவில்லை.

இரயில் நிலையத்தில் தீ

இந் நிலையில் சில குண்டர்களும் ரவுடிகளும் கூடி இரயில் நிலையத்துக்குத் தீயிட முயன்றனர். இதை அறிந்த தலைவர்கள்

இரயில் நிலையத்துக்கு விரைந்து, நெருப்பை அணைத்து விட்டனர்.

குண்டர்களின் வெறிச் செயல்

விஷமம் செய்வதற்கென்றே புறப்பட்ட குண்டர்கள் சும்மா இருப்பரோ! இரயிலில் ஏற்றியிருந்த மண் எண்ணெயைக் கீழே கொட்டிவிட்டனர். கண்ணில் எதிர்ப்பட்ட ஐரோப்பியரைத் தாக்கவும் முனைந்தனர்.

குலாம் மொகிதீனின் அமைதிப் பணி

காசூரின் பிரபல வக்கீலான குலாம் மொகிதீன், தம் நண்பர்கள் சிலருடன் வந்து குண்டர்களை விரட்டி அடித்தார். குலாம் மொகிதீன் தக்க சமயத்தில் தலையிட்டதால், வண்டியிலிருந்த ஷெர்போர்ன் என்ற ஐரோப்பியரும் அவர் குடும்பமும் காப்பாற்றப்பட்டனர்.

சிப்பாய்கள் கொலை

அந்த இரயில் வண்டியில், வேறு இரண்டு ஐரோப்பியச் சிப்பாய்களும் இருந்தனர். கலகக் கூட்டத்தைக் கண்டு நடுங்கிய அவர்கள், தங்கள் உயிரைக் காத்துக் கொள்வதற்காக இரயிலை விட்டு இறங்கித் துப்பாக்கியால் சுட்டனர். கூட்டம் அஞ்சி பின் வாங்கவில்லை. ஆத்திரம் அதிகமாகியது. அந்த இரு சிப்பாய்களும் தடியால் அடித்துக் கொல்லப்பட்டனர்.

குண்டர்கள் ஓட்டம்

சிப்பாய்களைக் கொன்ற குண்டர்கள், ரெவின்யூ அலுவலகம் சென்று அதற்குத் தீயிட்டனர். இறுதியில் போலீசார் வந்த பிறகு கலைந்து ஓடி விட்டனர்.

குண்டர்களின் இந்த வெறிச் செயலை மக்கள் விரும்பவில்லை. ஆதலால் மக்கள் அவர்களுடன் சேரவில்லை. தலைவர்கள் அந்தக் குண்டர்களை அடக்குவதற்கு மிகவும் முயன்றார்கள்.

அதிகாரிகளின் அடக்கு முறை

இவ்வளவு போதாதா? அதிகாரிகள் அடக்கு முறையைக் கட்டவிழ்த்து விட்டனர்.

குற்றம் செய்த குண்டர்களை ஒன்றும் செய்ய இயலவில்லை. குற்றமற்ற மக்கள்மேல் தங்கள் ஆத்திரத்தைக் காட்டலாயினர் அரசு அதிகாரிகள்.

நூற்றுக் கணக்கானவர் சிறைப் பட்டனர். சிறைப் பட்டவர்களில் குலாம் மொகிதீனும் மௌல்வி அப்துல் காதரும் அடங்குவர். இவர்கள் ஷெர்போர்ன் என்ற ஐரோப்பியரையும் அவர் குடும்பத்தையும் காப்பாற்றியவர்கள்; குண்டர்கள் மேலும் குற்றம் செய்யாதபடி விரட்டி யடித்தவர்கள். அவர்கள் செய்த உதவிக்குக் கைம்மேல்பலனாகச் சிறை வாழ்வு கிடைத்தது. அவர்களின் வீடுகளும் சோதனையிடப்பட்டன.

மக்கள் பட்ட பாடு

காசூரிலுள்ள ஆண் பெண் குழந்தைகள் அனைவருமே மே 1 இல் இரயில்வே நிலையத்துக்கு வருதல் வேண்டும் என்று உத்தரவிடப் பட்டது.

அவ்வாறு வந்தவர்களைப் பகல் 2 மணிவரை உணவோ தண்ணீரோ இல்லாமல் வெயிலில் அமரச் செய்தனர். வெயிலை மறைக்கத் தலையில் துண்டு போட்டுக் கொள்வதையும் தடுத்தனர்.

இவ்வாறு மக்களுக்குத் தொந்தரவு தருவதால் எவ்விதப்பயனும் இல்லை என்பது அதிகாரிகளுக்குத் தெரியும். ஆயினும் துன்புறுத்தி அவமானப் படுத்துதல் வேண்டும் என்ற அகம்பாவம் அவர்களை அவ்வாறு செய்யத் தூண்டியது.

விசாரணை நாடகம்

வழக்கம்போல விசாரணை நாடகம் நடந்தது. நாற்பதின்மருக்குச் சவுக்கடி தண்டனை தந்தனர். மொத்தம் எழுநூற்றுப் பத்து அடிகள். சவுக்கடிக் கம்பம் இரயில் நிலையத்திலேயே நிறுவினர். பள்ளிச் சிறாரும் சவுக்கடி பட நேர்ந்தது.

கழுவுக்கு ஏற்ற கோமுட்டி

‘கழுவுக்கு ஏற்ற கோமுட்டி’ என ஒரு பழமொழி உண்டு. அதன்படி பள்ளிச் சிறுவர்களையெல்லாம் ஒருங்கு திரட்டி, சவுக்கடிபடத் தகுந்த பலம் வாய்ந்த பையன்களைப் பொறுக்கி, மற்றப் பையன்களுக்கு முன்னால் சவுக்கடி தந்தனர்.

வினோதமான வாக்குமூலம்

இந்தச் சவுக்கடி தண்டனை விதித்த அதிகாரி இது பற்றிக் கொடுத்த வாக்கு மூலம் வினோதமானது. அதில் மாதிரிக்கு இதோ ஒன்று:

கேள்வி : சவுக்கடி தருவதற்காகப் பையன்களைப் பொறுக்கச் சொன்னீரா?

விடை : ஆம்!

கேள்வி : அந்தப் பையன்கள் பெரியவர்களாக, அதாவது அடிதாங்கும் வலிமையுடையவர்களாக இருந்தது அவர்கள் தலையெழுத்தா?

விடை : சந்தேகம் என்ன?

கேள்வி : அந்தக் கட்டளை சரிதானா?

விடை : சரிதான். மீண்டும் வாய்ப்புக் கிடைத்தால் அப்படியேதான் செய்வேன்!

ஐயோ! அகம்பாவமே! உன் பெயர்தான் அதிகார வெறியா!

இன்னொரு வினோதம்

இன்னொரு வினோதமும் காசூரில் நடந்தது. விபசாரப் பெண்களை வரவழைத்து மக்கள் சவுக்கடி படுவதனை வேடிக்கை பார்க்கச் செய்வதே அந்த வினோதம்!

கண்டபடி சுட்டனர்

சவுக்கடி மட்டுமா! சிறை வாழ்வு மட்டுமா! சிப்பாய்கள் கண்டவரையெல்லாம் கண்டபடி சுடலாயினர். ஓர் அப்பாவி ஊமை சுடப்பட்டு மாண்டான்.

தண்டனை பலவிதம்

தண்டனைகள் பலவிதமாக அமைந்தன. சிலர் ஏணி மேல் ஏற்றப்பட்டனர். சிலர் மீது சுண்ணாம்பைக் கரைத்துக் கொட்டினர். சிலர் மேல் பாரமான மூட்டைகளை ஏற்றினர்.

அமிருத சரசைப் போலவே ஐரோப்பியரைக் கண்டால் சல்யூட் செய்ய வேண்டும் என்ற உத்தரவு நடைமுறைப் படுத்தப்பட்டது. சல்யூட் செய்யத் தவறியவர்கள் தங்கள் மூக்கினைத் தரையில் தேய்த்தல் வேண்டும் என்று விதித்தனர்.

டவ்டன் என்ற அதிகாரி, தனக்குப் பாராட்டுப்பத்திரம் படித்தளிக்கும்படி மக்களை வற்புறுத்தினான். தன் மீது ஒரு பாடல் பாடும்படி ஒரு மகமதியனுக்குக் கட்டளையிட்டான். இன்னும் சிலரைத் தவளை போல் இருபது முறை இடைவிடாமல் தாவும்படி செய்தான்.

வேடிக்கையாக இருந்தது

இவ்வாறு வினோதமான தண்டனைகள் தரலாமா என்று கேட்டதற்கு, "மக்களுக்கு அந்தத் தண்டனைகள் வேடிக்கையாக இருந்தது. அதனால் அவர்கள் விரும்பினார்கள்" என்று இறுமாப்பாக விடையிறுத்தான் டவ்டன்.

அதிகாரியின் திமிர்ப் பேச்சு

கூப்பிட்டும் வாராதிருந்த மக்களின் வீடுகளைக் கொளுத்தச் செய்தான் டவ்டன். "இந்தக் கொடிய செயலுக்கு இராணுவச் சட்டம் இடம் கொடுக்கின்றதா" என்று பின்னர் கேட்கப் பட்டபோது, "நான் செய்தது சரி என்று உறுதியாக நம்புகின்றேன்' என்று பதில் கூறினான்.

வீடுகள் நாசம்

ஏழைகளின் வீடுகளும் அவர்கள் பாடுபட்டுத் தேடிய அன்றாட உணவுப் பண்டங்களும் இரக்கமில்லாமல் அழிக்கப் பட்டன.

கழு மரங்கள்

விசாரணைக்கு முன்பே தண்டனை தருவதற்காகக் கழுமரங்கள் நடத்தெருவில் நடப்பட்டன. சர் மைக்கேலே நேரிடையாக இத்தகைய உத்தரவு பிறப்பித்தானாம்.

கழுவேற்றும் தண்டனையைக் கேள்விப்பட்ட மக்கள் மனம் புழுங்கினர். ஏடுகள் இச் செயலைத் துணிந்து கண்டித்தன. ஆயினும் பதினெண்மர் கழுவேற்றப்பட்டனர்.

கழுவேற்றம் நின்றது

நல்லகாலமாகக் கழுவேற்றும் கொடுமை மேலும் தொடரவில்லை. தொடராததற்குக் காரணம் அதிகாரிகளின் இரக்கமோ நியாய உணர்வோ அல்ல.

பண்டித மோதிலால் நேரு அவர்கள், இந்தக் கழுவேற்றும் கொடுமைபற்றி பிரிட்டிஷ் அரசின் செயலருக்குத் தந்தி மூலம் அறிவித்தார். 'இந்தக் கொடுமையை உடனே நிறுத்துக!' என்று அந்தத் தந்தி வேண்டிக் கொண்டது. அதன் காரணமாகவே கழுவேற்றம் நின்றது.

★★★

7

குஜ்ரன் வாலா

இதுகாறும் கூறிய வரலாறு முழுவதிலும் இந்து - இசுலாம் வேறுபாடு இன்றி மக்களிடையே ஒற்றுமைப் பிணைப்பு வலுத்து நின்றதையே காண்கின்றோம்.

பிளவு படுத்தும் முயற்சி

இந்து முசுலீம்களைப் பிளவு படுத்தவும் அரசினர் மேற்கொண்ட முயற்சி குஜ்ரன் வாலாவில் நிகழ்ந்தது. குஜ்ரன் வாலா நகரம் முப்பதாயிரம் மக்கள் தொகை கொண்டது.

சத்தியாக்கிரகம் தொடங்கியது

மகாத்மாவின் சத்தியாக்கிரக வேண்டுகோளை ஆராய்வதற்காக முதன் முதலில் ஏப்ரல் 5இல் ஒரு கூட்டம் கூடியது. அங்குத் தலைவர் பேச்சுக்களில் மிதமான போக்கும் அமைதியுமே இருந்தன. அன்று முடிவெடுத்த படி ஏப்ரல் 6இல் வேலை நிறுத்தம் நடந்தது. மக்கள் தெய்வ வழிபாடு செய்து உண்ணாவிரதம் இருந்தனர்.

மகாத்மா சிறைப்பட்ட செய்தி

ஏப்ரல் 12இல் மகாத்மா சிறைப்பட்ட செய்தியும் கிச்சுலு - சத்தியபாலு கடத்தப்பட்ட செய்தியும் ஜாலியன் வாலா தோட்டத்தில் நடந்த கொடுமையும் குஜ்ரன் வாலா மக்களை எட்டியது.

அதிகாரிகள் தடை

தலைவர்களைச் சிறையி லிட்டதும் கடத்தியதும் தவறு என்று தீர்மானம் நிறைவேற்றவும், அமிருத சரசில் கொலையுண்டவர்களுக்கு அனுதாபம் தெரிவிக்கவும், இந்தக் கொடுமைகளுக்காக உடனே அர்த்தால் செய்ய வேண்டியதில்லை என்று முடிவெடுக்கவும் ஒரு கூட்டம் நடத்த முயற்சி

செய்யப்பட்டது. அக் கூட்டத்தை அதிகாரிகள் தடுத்துவிட்டனர். அதிகாரிகளின் செயலானது ஏப்ரல் 14இல் முழு அர்த்தாலுக்கே வழி வகுத்து விட்டது.

குடியரின் கும்பல்

ஏப்ரல் 13,14 வைசாகிப் பெருவிழா நாள்கள் ஆனதால் கிராம மக்கள் வேடிக்கை பார்ப்பதற்காகக் குஜ்ரன் வாலாவில் கூடினர். அவர்களில் பலர் மது அருந்திய நிலையில் இருந்தனர். ஆதலால் அவர்கள் ஓரளவு கலக மனப் பான்மையினராக இருந்ததில் வியப்பில்லை.

செத்த கன்றுக் குட்டி

இந்த நிலையில் ஒரு பாலத்தில் செத்த கன்றுக் குட்டி ஒன்று தொங்க விடப் பட்டிருப்பதாக ஒரு செய்தி பரவியது. இத்தகைய செயல் பசுவைத் தெய்வமாக வணங்கும் இந்துக்களின் உணர்ச்சியைப் புண்படுத்தத்தான் செய்யும். இந்து - இசுலாம் ஒற்றுமையைக் குலைப்பதற்காக அதிகாரிகளே இதைச் செய்தார்கள் என்று உண்மை உணர்ந்தவர்கள் பேசிக் கொண்டனர்.

பன்றி மாமிசம்

பள்ளி வாசல்களில் பன்றி மாமிசம் வீசப்பட்டதாகவும் செய்தி வந்தது. முகமதியர்க்குப் பன்றி என்பது அருவருப்பானது. ஆதலால் அவர்களும் சிறிது உணர்ச்சி வசப்படலாயினர்.

முயற்சி வெற்றி பெறவில்லை

ஆயினும், அதிகாரிகளின் பிளவுபடுத்தும் முயற்சி வெற்றி பெறவில்லை. அரசினரின் சூழ்ச்சிதான் இது என்று உணர்ந்து கொண்டமையால், இந்து - இசுலாமியர் முன்னிலும் பன்மடங்காக ஒன்றுபட்டு நின்றனர்.

கலகம் தொடங்கியது

லாகூரில் நடந்த கொடுமைச் செய்திகளும் நகரில் பரவின. அதனால் உணர்ச்சி வசப்பட்ட மக்கள் (குடி வெறியிலிருந்த கிராம மக்கள்) இரயில் வண்டியை நிறுத்த முயன்றனர். ரெயிலைக் கல்லால் அடித்தனர். ஒரு பாலத்துக்கு நெருப்பு வைத்தனர்.

நெருப்பை அவிப்பதற்கு அதிகாரிகளுடன் மக்கள் ஒத்துழைத்தனர்.

துப்பாக்கிச் சூடு

பின்னர் கலகக் கூட்டம் வேறொரு பாலத்தை நோக்கி முன்னேறியது. சூப்ரிண்டெண்டெண்டு ஹரின் துப்பாக்கிச் சூட்டுக்கு உத்தரவிட்டார். அதனால் பலர் மாண்டனர். துப்பாக்கிச் சூட்டினால் ஆத்திர முற்ற கும்பல், அஞ்சல் நிலையம், மாதா கோயில், நீதிமன்றம் ஆகியவற்றை இடித்துத் தகர்த்தனர்.

இதைப் போலீசார் பார்த்துக் கொண்டே வாளா இருந்தனர். அவர்கள் தடுத்திருக்க முடியும். அமிருத சரசில் நடந்தது போலவே, மக்கள் மேல் குற்றம் சுமத்துவதற்காக அவர்களைக் குற்றம் செய்வதற்கு அனுமதித்தனர் (போலும்) என்பதற்கு இதைப் போன்ற பல ஆதாரங்கள் உள்ளன.

குண்டுவீச்சு

இந் நிலையில் கர்னல் ஓபிரயன் குஜ்ரன் வாலாவுக்கு வந்தான். விமானத்திலிருந்து மக்கள் மேல் குண்டு வீசும் படி உத்தரவிட்டான். அதனால் பற்பலர் உயிரிழந்தனர் காயமுற்றனர்.

பள்ளிக் கூடங்களைக் குறி வைத்து விமானங்கள் குண்டு வீசின. ஒரு சீக்கியப் பள்ளியின் சமையற்காரார் குண்டுக்குப் பலியானார். ஒரு பையன் கையை இழந்தான். பலர் இடிபாடுகளில் சிக்கினர். வெடி குண்டு விழுந்தபோது, அப்பள்ளியில் மாணவர்கள் அதிகம் இல்லை. அதனால் சேதம் குறைவானது. விமானக் குண்டுகள் பல வீடுகளையும் சேதப்படுத்தின. யந்திர பீரங்கிகளும் தாராளமாகப் பயன்படுத்தப் பட்டன. பயந்து ஓடியவர்களையும் விடாமல் சுட்டனர். பலபேர் கொல்லப்பட்டனர்.

ஓபிரயன் வருத்தம்

'இன்னும் அதிகமான உயிர்ச் சேதம் எற்படுத்த இயலாமல் போனதே' என்று ஓபிரயன் வருத்தப்பட்டான். இதை அவனே பின்னர் கூறியுள்ளான். சுற்றுப்புறக் கிராமங்களையும் குண்டு வீசித் தாக்கச் செய்தான். குஜ்ரன் வாலாவிலிருந்து உயிர் தப்பிக் கிராமம் நோக்கி ஓடிய பலர் உயிரிழந்தனர். குஜ்ரன் வாலா நகரின் மையத்திலிருந்து நாலா புறமும் குண்டுகள் வீசப்பட்டன.

"வீடுகளின்மேல் குண்டு போட்டதால் கருதிய பயன் கிட்ட வில்லை. ஆதலால் மக்கள்மேல் நேரடியாகவே சுடச் செய்தேன்"

என்று ஓபிரயன் மார் தட்டிக் கொண்டான்.

முட்டைகளைப்போல் உருட்டினர்

இது தவிரப் பலர் கைது செய்யப்பட்டனர். இருவர் இருவராக விலங்கிடப்பட்டு இரண்டு கல் தூரம் இழுக்கடித்தனர். நடுத் தெருவில் ஓட வைத்தனர். மொட்டை ரயிலில் வெகு தூரம் கொண்டு சென்றனர். இடையில் உணவோ தண்ணீரோ தரவில்லை. சிறு உபாதைக்குக் கூட அவகாசம் தர மறுத்தனர். இரயிலிலிருந்து தாமே இறங்க விடாமல், மூட்டைகளைப் போல் கீழே உருட்டி விட்டனர். "இந்தத் தண்டனைகள் மிகவும் எளிதானது" என்று வேறு ஓபிரயன் கூறிக் கொண்டான்.

சல்யூட் உத்தரவு

ஐரோப்பியர்களைக் கண்டால் சல்யூட் செய்தல் வேண்டும் என்ற உத்தரவு குஜ்ரன் வாலாவிலும் நடைமுறைக்கு வந்தது. அந்த உத்தரவின் பகுதி வருமாறு:

"குஜ்ரன் வாலா மக்கள் அரசு அதிகாரிகளுக்குத் தக்க மரியாதை செய்வதில்லை என்று தெரிகின்றது. தங்கள் பெரியவர்களுக்கு எப்படி மரியாதை தருவார்களோ அப்படி அதிகாரிகளுக்கும் மரியாதை தரவேண்டும் என்பது எங்கள் ஆணை. "குதிரையிலோ வண்டியிலோ போகும்போது, ஓர் அதிகாரி எதிர்ப்பட்டால், இறங்கிச் சல்யூட் அடித்து மரியாதை செய்தல் வேண்டும். யாராவது குடைபிடித்துக் கொண்டாவது குடை வைத்துக் கொண்டாவது இருந்தால், அதைக் கீழே வைத்து விட்டு அதிகாரிகளுக்கு வலக் கையால் சல்யூட் அடித்தல் வேண்டும்"

இந்தஅற்புதமான ஆணை இந்திய மரபுக்கு ஏற்புடையதே என்று வாதிட்டான் ஓபிரயன். இந்த உத்தரவுப்படி சாதாரண சிப்பாயைக்கூட வணங்க வேண்டியிருந்தது. வணங்காவிட்டால் முதுகிலே மூன்று நான்கு அடிகள் விழும். கடைகளுக்கு முன்னால் யாரும் அமர்ந்திருப்பதுவும் குற்றமாகக் கருதப்பட்டது. அதற்காகச் சவுக்கடி வழங்கப்பட்டது. மாணவர்களை ஆங்காங்கே ஒன்று திரட்டி நிற்கச் செய்த யூனியன் ஜாக் கொடியை வணங்கும்படி செய்தனர். சல்யூட் செய்யாதவர்கள் (கனவான்கள்கூட) சாக்கடை அள்ளும் வேலை செய்யுமாறு ஏவப்பட்டனர். மக்கள் கையில் தடி வைத்துக் கொள்ளத் தடை விதிக்கப்பட்டது. ரயில் பயணமும் தடுக்கப்பட்டது.

★★★

8

வாசீரா பாத்

குஜ்ரன் வாலாவிற்கு இருபது கல் தொலைவிலுள்ள இரயில் நிலையம் வாசீராபாத். மக்கள் தொகை பத்து ஆயிரம். ஆண்டுதோறும் வைகாசிச் சந்தை இங்கே கூடும்.

அர்த்தால் நடைபெறவில்லை

நாடெங்கும் மார்ச்சு 30, ஏப்ரல் 6 ஆகிய நாள்களில் நடை பெற்ற அர்த்தால் இங்கு நடைபெறவில்லை. அமிருத சரசு, லாகூர், குஜ்ரன் வாலா ஆகிய இடங்களில் நடந்த கொடுமைகளைக் கேள்விப்பட்டும் மக்களிடம் எந்தவிதப் பிரதிபலிப்பும் ஏற்படவில்லை.

சம்பந்தம் செய்யக் கூடாது

"இந்தவாசீராபாத்துமக்கள் அர்த்தால்நடத்தாமையால்,இனி இவர்களோடு சம்பந்தம் செய்யக்கூடாது. ஒதுக்கிவைத்துவிடல் வேண்டும்"

என்று சிலர் ரோஷத்தைத் தூண்டி விட்டனர்.

இதனால் உத்வேகம் கொண்ட மக்கள் ஏப்ரல் 14இல் முடிவெடுத்து 15இல் அர்த்தால் மேற்கொண்டனர்.

போக்கிலிகள் செயல்

அன்று கடையடைப்பது மட்டும் போதாது என்று கருதிய சில போக்கிலிகள், தந்திக் கம்பங்களைப் பிடுங்குவதற்கும் தண்டவாளங்களை அகற்றுவதற்கும் துணிந்தனர். அவர்கள் செல்லும் வழியில் ரெவரண்டு பெய்லியின் வீடு இருந்தது. அங்கே இன்னும் சிலரும் சேர்ந்து கொண்டனர்.

பெய்லியின் வீடு கொளுத்தப்பட்டது. சில அரிய நூல்கள் தீக்கு இரையாகின.

போலீசாரின் செயலின்மை

போலீசார் அதனைத் தடுத்திருக்கலாம். ஆனால் தடுக்காமல் பார்த்துக் கொண்டே இருந்தனர். காரணம் கடவுளுக்குத்தான் வெளிச்சம்! மேலும் குற்றம் செய்யட்டும்! தண்டிப்பதற்கு நல்ல வாய்ப்பு வரட்டும் என்று எதிர்பார்த்தனர் போலும்! அமிருத சரசிலும் குஜ்ரன் வாலாவிலும் அதைத்தானே போலீசார் செய்தனர்! நல்ல வேளையாக உயிர்ச் சேதம் ஏதும் இல்லை.

ஓபிரயன் முழக்கம்

கர்னல் ஓபிரயன் ஏப்ரல் 16இல் வாசீரா பாத்துக்கு வந்தான். ஏப்ரல் 18 இல் தர்பார் கூட்டிப் பின் வருமாறு முழக்க மிட்டான்.

"ஏ! மூடர்களே! பைத்தியக்காரர்களே! கேளுங்கள்! நீங்கள் பிரிட்டிஷ் ஆட்சி தொலைந்து போய் விட்டது என்று தப்புக் கணக்குப் போட்டு விட்டீர்கள். உங்கள் முட்டாள் தனத்துக்கு வைத்தியம் எங்களுக்குத் தெரியும். எங்கள் கையில் மருந்து உள்ளது. உங்கள் வீடுகளை இடிக்கவும் சொத்துக்களைப் பறிமுதல் செய்யவும் எங்களுக்கு அதிகாரம் உண்டு" என்று முழங்கியது மட்டுமல்ல, அதைச் செயலில் காட்டவும் முனைந்தான்.

ஜெமியத் சிங்கு பாகா

முதன் முதலாக ஜெமியத் சிங்கு பாகா என்பவரின் சொத்துக்கள் பறிமுதல் ஆயின. போர்நிதிக்குக் கணிசமான தொகை தந்தவர் ஜெமியத் சிங். போருக்குப் படையும் திரட்டி அளித்தவர் அவர் என்பது குறிப்பிடத் தக்கது.

இராணுவச் சட்டம்

மறு நாள் இராணுவச் சட்டம் அங்கே புகுந்தது. இராணுவச் சட்ட அறிக்கைகள் வீடுகளிலும் பொதுவிடங்களிலும் ஒட்டப்பட்டன. ஆரிய சமாஜத்துக்கும் கலகங்களுக்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லை. இது அரசுக்கும் தெரியும். அப்படி யிருந்தும் ஆரிய சமாஜக் கட்டடத்தில் இராணுவ அறிக்கை ஒட்டப்பட்டது. அறிக்கைகள் கிழியாமல் பார்த்துக் கொள்ள வேண்டியது அந்தச் சமாஜத்தின் பொறுப்பு. கிழிந்தோ தொலைந்தோ போனால், சமாஜத்தாரின் உயிர், இராணுவச்சட்ட அதிகாரிகள் கையில் இருக்கும்.

டாக்டர் டாலட் சிங்

டாக்டர் டாலட் சிங் என்பவர் ஆரிய சமாஜத்தின் செயலாளர். அவர் இராணுவ அறிக்கையை மிகவும் கவனமாகப்

பாதுகாத்தார். ஆயினும் அவர் கைது செய்யப்பட்டார். சமாஜத்தின் கணக்குக்களைச் சிப்பாய்கள் அள்ளிச் சென்றனர். குற்றவாளிகள் என்று சிலரின் பெயர்களைக் கூறும்படி டாக்டர் சிங் வற்புறுத்தப்பட்டார்.

டாலட் சிங் கைது செய்யப்பட்டதற்கு எவ்வித காரணமும் கூறப்படவில்லை. "ஆரிய சமாஜத்தைச் சேர்ந்த தேசியப்பெ பெருந்தலைவர் சுவாமி சிரத்தனாந்தர் தேசியத்தில் ஈடுபட்டுள்ளமையால், நீவிரும் தலையிட்டுக் கொண்டிருக்கலாமே! அதற்காகவே கைது செய்துள்ளோம்" என்று ஓபிரயன் காரணம் கற்பித்துக் கூறினான்.

சல்யூட் செய்யாவிடில்

இராணுவச் சட்டம் கடுமையாக நடைமுறைப் படுத்தப்பட்டது. யாராவது ஒருவர் தமக்கு முன்னே வரும் ஐரோப்பியனுக்குச் சல்யூட் செய்யாவிட்டால், அவரின் தலைப்பாகையை எடுத்துக் கழுத்தைக் கட்டி இராணுவக் கூடாரத்துக்கு இழுத்துச் செல்லுவர். அங்கே இடைவிடாமல் அடிவிழும். அபராதமும் விதிக்கப்படும். ஒருவர் ஓர் ஐரோப்பியனைக் கண்டு சல்யூட் செய்தார். ஆனால் அவன் கவனிக்கவில்லை. அந்த ஐரோப்பியன் அவரைப் பிடித்து, தன் செருப்பை முத்தமிடச் செய்தான்.

கட்டாய வசூல்

இராணுவ வீரர்கள் பணம் தராமலே வீட்டுக்கு வீடு வெண்ணெய் வாங்கினர். தலைக்கு ஒரு ரூபாய் வீதம் கட்டாய வசூலும் நடந்தது. இப்படி அந்த ஊரில் மட்டுமே 67,000 ரூபாய் வாங்கப்பட்டது என்று தெரிகின்றது.

பொய்ச் சாட்சி சொல்வதற்காகவும் கைதானவர்களை விடுதலை செய்வதற்காகவும் போலீசார் ஏராளமாக இலஞ்சம் வாங்கினர். வீடுகளிலுள்ள கட்டில்கள் எல்லாம் இராணுவத்தினரின் உபயோகத்துக்காக எடுத்துச் செல்லப்பட்டன.

மாணவர்களை ஒன்று கூட்டி நாடோறும் மூன்று முறை யூனியன் ஜாக் கொடியை வணங்குமாறு செய்தனர். சிறுவர்களைக் கடிய வெயிலில் நெடுந் தூரம் நடக்க வைத்தனர். பொய்ச் சாட்சியம் கூறும்படி சிறுவர்களை அச் சுறுத்திக் கற்பித்தனர்.

★★★

9 நைசாமா பாத்

வாசீராபாத்தில் ரெவரெண்டு பெய்லியின் வீட்டைக் கொளுத்தியதில் பங்கு கொண்டவர்கள் என்று கருதப்பட்ட சிலர் நைசாமாபாத்தில் இருந்தனர். அது ஒரு சிற்றூர். கத்தி, கத்தரி முதலிய சிறு கருவிகள் செய்யும் கைத் தொழிலாளர்கள் வாழும் இடம் அது.

இரயிலில் சிப்பாய்கள்

ஏப்ரல் 18இல் ஐரோப்பியச் சிப்பாய்களைச் சுமந்து கொண்டு ஒரு ரயில் நைசாமா பாத்தை அடைந்தது.

சிப்பாய்கள், வேட்டைக்காரர்கள் மிருகங்களை வளைப்பது போல், கிராமத்தை வளைத்துக் கொண்டனர். பூட்டியிருந்த கடைகள் உடைகப்பட்டன. மாவு, நெய், சீனி முதலியவற்றை அள்ளிக் கொண்டதும் அல்லாமல், கடைச் சொந்தக்காரர்களே அவற்றை இரயிலுக்குச் சுமந்து செல்லுமாறு செய்தனர்.

இரு வாரம் வரை அனைவரும் காவல் நிலையத்துக்கு நாடோறும் வருதல் வேண்டும் என்று உத்தரவிடப் பட்டது. அங்குக் காலை 7 மணி முதல் வெயிலில் மக்கள் அமர்த்தப்பட்டனர். மக்களுக்கு வருவாய் தந்த சிறு தொழில்கள் அனைத்தும் நின்று போயின. மக்கள் பட்டினி கிடக்க நேர்ந்தது.

ஆடு மேய்த்தவன் கொலை

ஓர் இளைஞன், இராணுவ எல்லைக்குள் ஆட மேய்க்கச் சென்று விட்டான். எச்சரிக்கை யில்லாமலே அவன் சுடப்பட்டு மாண்டான். இராணுவத்தினர் அவன் உடலை அவன் தலைப்பாகையால் கட்டி இழுத்துச் சென்று ஊருக்கு அருகிலுள்ள குளத்தண்டை போட்டுப் போய் விட்டனர்.

★★★

10

அகல்கார்

சீக்கியர் ஆட்சியின் இறுதிக் காலத்தில் ஆளுநர்களாக இருந்த திவான் சமன் லாலும் அவர் மகன் மல்ராஜுவும் வாழ்ந்த இடம் என்ற பெருமைக்கு உரியது அகல்கார். நாலாயிரம் மக்களே வாழும் சிற்றூர் அது. ஓர் இரயில் நிலையம் அங்கு உண்டு.

ஏப்ரல் 6 இல் நாடெங்கும் நடைபெற்ற அர்த்தால் இங்கும் நடை பெற்றது. மறுபடியும் 14 இலும் அர்த்தால் அனுசரிக்கப்பட்டது. அர்த்தால் நடந்த இரு நாள்களிலும் எந்தவிதமான அசம்பாவிதமும் நடைபெற வில்லை.

குண்டர் செயல்

அர்த்தால் நடை பெறாத ஏப்ரல் 15இல் ஒரு கல் தூரம் வரை தந்திக் கம்பிகள் அறுக்கப்பட்டன. அகல்கார் மக்களே அறுத்தனர் என்பதற்கு எவ்விதமான ஆதாரமும் இல்லை. யாரோ சில குண்டர்களின் செயல் அது!

சாலை அகலப்படுத்துக!

இதைக் கேள்வியுற்ற டிப்டி கமிஷனர் ஏப்ரல் 22 இல் அகல்கார் மக்கள் அனைவரையும் வருமாறு கட்டளையிட்டான். தம் மோட்டார் கார் செல்வதற்காக டாக் பங்களாவுக்குச் சாலையை அகலப்படுத்துதல் வேண்டும் என்று மக்களை ஏவினான்.

சாலை அகலப்படுத்தும் செலவுக்காக ரூபாய் இரண்டாயிரம் வசூல் செய்யப்பட்டது. இந்தத் தொகை மக்களின் சக்திக்கு அப்பாற்பட்டது.

பலவிதத் தண்டனைகள்

அகல்கார் நகரிலும் பலர் கைது செய்யப்பட்டனர். பொய்ச் சாட்சியம் கூறும்படி சிலரைத் துன்புறுத்தினர்.

மாட்டேன் என்றவர்கள் கடிய வெயிலில் நிற்பது முதலிய பலவித தண்டனைகள் பெற்றனர்.

இலஞ்சம் தர மறுத்தவர் கதி

வருவாய் அலுவலர் ஒருவர் திவான்கோபால் லாலிடம் இலஞ்சம் கேட்டார். அவர் மறுத்ததால் கைது செய்யப்பட்டார். பின்னர் ரூபாய் ஐயாயிரம் இலஞ்சமாகக் கொடுத்த பிறகே விடுதலை கிடைத்தது.

லாலா கணேச தாசு சகோதரர்களும் கைது செய்யப்பட்டு ரூபாய் இரண்டாயிரம் இலஞ்சம் தர நேர்ந்தது. இலஞ்சம் கொடுத்த பிறகும் விடுதலை தரவில்லை. அவர்கள் சொத்துக்கள் பறிமுதல் ஆயின.

முன்பே சொல்லியபடி டாக் பங்களாவுக்குச் சாலை அமைத்தபோது, கூலியில்லாமலே மக்கள் வேலை வாங்கப்பட்டார்கள். சாலை போடுவதற்காக வசூலான தொகையில் பாதிதான் செலவானது. மீதிப் பணம் என்ன ஆனது! அதிகாரிகள் பையில் சேர்ந்துவிட்டது!

பீரங்கிக் குண்டு

சாலை போட்ட பிறகு, மக்களை யெல்லாம் டாக் பங்களாவுக்கு வரவழைத்து, அவர்களுக்குப் பீரங்கிக் குண்டுகள் வெடித்துக் காட்டப்பட்டன.

மக்களை அச்சுறுத்தவும் அதிகாரத்தின் வலிமையைக் காட்டவும் வெடிக்கப்பட்ட ஆயிரம் குண்டுகளுக்கும் ஆன செலவும் மக்கள் தலையிலேயே கட்டடப்பட்டது.

அறுந்த தந்திக் கம்பிகளைச் செய்வதற்கும் மக்களே பணம் தர நேர்ந்தது.

★★★

11

ராம் நகர்

ராம் நகர் என்பது சினாப் நதிக்கரையில் உள்ள ஒரு சிற்றூர். மகா ராஜா ரண்சித் சிங்குக்கு அங்கே பாரதாரி என்ற அரண்மனை உண்டு.

ராம் நகரிலும் ஏப்ரல் 6, 15 தேதிகளில் அர்த்தால் நடந்தது. ஆனால் எவ்விதமான கலகமும் நடைபெற வில்லை.

கொடும் பாவி

பிரிட்டிஷ் சக்கரவர்த்தியின் கொடும் பாவி கொளுத்தப் பட்டதாக ஒரு வதந்தி பரவியது. அதற்கு எந்த விதமான ஆதாரமும் இல்லை. அரசு அதிகாரிகளும் அந்தச் செய்தியை ஒப்புக் கொள்ளவில்லை. கர்னல் ஓபிரயன் அடக்குமுறையைக் கையாள்வதற்காக, தாமே இப்படி வதந்தியைப் பரப்பியிருக்கலாம்!

சிறுவர் கோஷம்

சில சிறுவர்கள் கடைத் தெருவில் "ஹை ஹை ரௌலட் பில்" (ரௌலட் சட்டமே! ஐயோ! ஐயோ!) என்று கோஷம் போட்டனராம்!

மேலிடத்துக்குத் தந்தி

காரணம் காட்டப்படாமலே ராம் நகரிலும் பலர் கைது செய்யப்பட்டனர். இந்த அநியாயத்தைப் பொறுக்காமல், லாலா சுந்தரதாசும் மற்றும் சிலரும் மேலிடத்துக்குத் தந்தி மூலம் முறையிட்டனர்.

ஓபிரயன் கட்டளை

கர்னல் ஓபிரயன் இதைப் பொறுப்பாரா? உடனே லாலா சுந்தரதாசு முதலியோரைக் குஜ்ரன் வாலாவுக்கு வருமாறு கட்டளை யிட்டார்.

அதிசயத் தண்டனை

மூக்குக்களைப் பூமியில் தேய்த்தல் வேண்டும் என்பது அவர்கள் பெற்ற வினோதமான தண்டனை!

இலஞ்சம் தாராவிட்டால் கைது செய்வோம் என்று அச்சுறுத்தப்பட்டனர்.

இலஞ்சமா! சிறையா!

லாலா ஹன்ஸ்ராஜ் இலஞ்சம் கொடுக்க மறுத்து விட்டமையால், அவரைச் சில குண்டர்கள் இழுத்துச் சென்று துன்புறுத்தினர். அப்போதும் அவர் இலஞ்சம் தர இணங்கவில்லை. ஆதலால் அவர் காவலில் வைக்கப்பட்டார்.

சக்கரவர்த்தியின் கொடும்பாவியைக் கொளுத்தியவர் இன்னார்தாம் என்று பொய்ச் சாட்சியம் சொல்லும் படி சிலர் வற்புறுத்தப்பட்டனர். அடி உதைக்குப் பயந்த சிலர் வேறுவழியின்றிப் பொய்ச் சாட்சியமும் கூற இணங்கினர்.

சிறைவாசம், சொத்துப் பறிமுதல், அவமானம் முதலிய கொடுமைகளை ராம் நகரம் நன்றாகவே அனுபவித்தது.

★★★

12

ஹாபிசா பாத்

ஐயாயிரம் மக்கள் வாழும் சிற்றூர் ஹாபிசா பாத்து எங்கும் போல் அங்கும் ஏப்ரல் 14இல் அர்த்தால் நடந்தது.

குடிவெறியர் செயல்

வழக்கம்போல்சிலகுண்டர்கள் அமைதியைக்குலைப்பதற்குத் துணிந்து முன் வந்தனர். அவர்கள் குடிவெறியில் ஆர்ப்பாட்டம் செய்தனர். இரயில் வண்டியை நிறுத்தினர். முதல்வகுப்பில் இருந்த லெட்படினண்டு டாடம் என்பவரைக் கொல்ல முயன்றனர். வண்டியின் கண்ணாடிகளை உடைத்தனர்.

கூட்டத்திலிருந்த மக்கள் சிலர், குண்டர்களின் மிருகத் தனமான செயலைத் தடுத்து, டாடம் உயிருக்கு ஆபத்து நேராமல் பாதுகாத்தனர்.

குடிகாரன் பிடிபட்டான்

ஏப்ரல் 15 இல் டாப் என்ற குடிகாரன் நூறு பேருடன் சென்று தந்திக் கம்பிகளை அறுத்து விட்டான். அவன் கையும் களவுமாகப் பிடிக்கப்பட்டுவிட்டான்.

அவன் காவலில் வைக்கப்பட்ட தாசில்தார் அலுவலகத்தை உடைத்து அவனை மீட்பதற்கு, அவனைச் சேர்ந்தவர்கள் முயன்றனர். ஆனால் துப்பாக்கிச் சத்தம் கேட்டவுடன் ஓடிவிட்டனர்.

இதுகாறும் கூறிய செய்திகளை ஒட்டு மொத்தமாகக் காணும்போது, மக்கள் மேல் எவ்விதமான குற்றமும் சுமத்த இயலாது. மக்கள் குற்றம் செய்யாதது மட்டும் அல்ல. குற்றம் செய்தவர்களையும் தடுத்து லெப்டினண்டு டாடம் உயிரையும் காப்பாற்றி யுள்ளனர்.

ஓபிரயனின் கொடுமை

ஆனால் கர்னல் ஓபிரயன் சும்மா இருப்பானா? இரயில் வண்டியைத் தாக்க முயன்றனர் என்று குற்றம் சாட்டிப் பலரைக் கைது செய்தான். பொய்ச் சாட்சியம் தரும்படி பலரை வற்புறுத்தினான்.

இலஞ்சம் கொடுத்தவர் சிலர் மட்டும கைது ஆகாமல் தப்ப முடிந்தது.

பல பிரமுகர்கள் கைவிலங்குடன் தெருவில் அழைத்துச் செல்லப்பட்டனர்; அடிக்கப்பட்டனர்; உதைக்கப்பட்டனர்; ஏளனத்துக்கு ஆளாயினர்.

கைது ஆனவர் தொகை போதாது என்று ஓபிரயன் கருதினான். குறைவாகக் கைது செய்த அலுவலர்களை வேலை நீக்கம் செய்தான். அவர்களுக்குப் பதிலாகத் தன் மனம் போல் நடக்கும் இராணுவத்தினரை நியமித்தான்.

ஓபிரயன் ஆணை

ஏப்ரல் 30 மாலை தலைப்பாகை அணிந்தவர் அனைவரும் தாசில்தார் அலுவலகம் வருதல் வேண்டும். இல்லையேல், சுடப்படுவர் என்று ஆணையிட்டான்.

சிப்பாய்கள் பணம் தாராமலே கடைப் பண்டங்களை அள்ளிச் சென்றனர்.

நாலுபேர் இருக்க முடியாத சிறிய அறைகளில்,கைது ஆனவர் இருபது முப்பது பேரை அடைத்து வைத்தனர். இயற்கைக் கடன் கழிக்கவும் விடவில்லை. இருந்த இடத்திலேயே அந்தக் கடன்களைக் கழிக்க நேர்ந்தது.

இது தவிர மக்களிட மிருந்து ரூபாய் ஆறாயிரம் அபராதமாக வாங்கப்பட்டது. போலீஸ் செலவையும் மக்கள் தலையிலேயே கட்டினர்.

இலட்சிய வீரர் லாலா ராம்

சோதனை வந்த காலத்திலும் கொண்ட கொள்கையையும் வாய்மையையும் விடாமல் காப்பவர்கள் பாராட்டுக்கு உரியவர்கள். அத்தகைய பாராட்டைப் பெறுகின்றார் லாலா ராம்.

அவர் ஆங்கில, சமஸ்கிருதப் பள்ளியின் தலைமை ஆசிரியர். பொய்ச்சாட்சியம் தரும்படி அவரை வற்புறுத்தினர். அவர் கல்வித்

தகுதியையும் அறிவுக் கூர்மையையும் பலபடப் புகழ்ந்து, புகழ்ப் போதையில் ஆழ்த்த முயன்றனர். முகத் துதியானது யாரையும் மயக்கிவிடும் என்பது மனோதத்துவம். அந்த முகத்துதி அவரை மயக்கவில்லை.

சொத்துக்கள் பறிமுதலாகும்; தூக்கு மேடை ஏற நேரிடும்; தீவாந்தரத் தண்டனை கிடைக்கும் என்று பயமுறுத்தினர். "உச்சிமீது வான் இடிந்து வீழுகின்ற போதினும் அச்சம் இல்லை. என் வாயிலிருந்து பொய்ச் சொல் வாராது" என்று இமையமாகி உயர்ந்து நின்றார்.

"உயிருக்கு இடர்ப்பாடு நேரும் என்பதற்காக ஒரு நாளும் நாட்டின் மானத்தை விற்கமாட்டேன்" என்று அவர் தலைநிமிர்ந்து முழங்கினார்.

கை விலங்குகளுடன் வெட்ட வெளியில் வெறுந்தரையில் படுக்க நேர்ந்தது. இருந்த இடத்திலேயே இயற்கைக் கடன்கள் கழிக்க நேர்ந்தது. ஆயிரம் ரூபாய் ஜாமீன் கொடுத்த பின்பே விடுதலை கிடைத்தது.

இந்தக் கொடுமைகள் இறுதியில் அவரின் அசையாத மனத்தையும் சிறிது அசைத்து விட்டது. மன்னிப்புக் கேட்கும்படி வற்புறுத்தித் தற்காலிகமாக இணங்க வைத்து விட்டனர். ஆயினும் அவர் இறுதியில் 'இப்போதும் கூறுவேன். மக்கள் யாதொரு குற்றமும் செய்யவில்லை என்பது உறுதி' என்று உண்மையையே வெளியிட்டார்.

★★★

13 சாங்லா ஹில்

லாகூருக்கு 62 கல் தொலைவில் நாலாயிரம் மக்களைக் கொண்ட சாங்லா ஹில்லில் ஏப்ரல் 15 ஆம் நாள் யாரோ தந்திக் கம்பிகளை அறுத்துவிட்டனர்.

ஆதாரம் இல்லாத குற்றச்சாட்டுக்கள்

ஒரு சீக்கியன் இரயில் நிலையத்தில் காவலில் இருந்த ஒரு குற்றவாளியை வன்முறையால் விடுவித்து விட்டான். தந்தி ஆய்வாளர் வெல்ஸ் என்பவரைக் கொல்ல முயன்றனர் என்பன அவ்வூர் மக்கள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள். ஆனால் இவற்றுக்கு எவ்விதமான ஆதாரமும் இல்லை.

வழக்கம்போல் பலர் கைது ஆயினர். அவர்கள் விடுதலையாக வேண்டுமாயின், ரூபாய் ஐம்பதாயிரம் தருதல் வேண்டும் என்று பாஸ் வொர்த் ஸ்மித் என்ற அதிகாரி கூறினான். பலருக்கு அபராதம் விதிக்கப்பட்டது. பலர் சவுக்கடி பட்டனர். கடைகள் சூறையாடப்பட்டன. பிரமுகர்கள் பலர் அதிகாரிகளுக்குப் பங்கா இழுக்க நேர்ந்தது. கடுமையான வெயிலில் அனைவரும் நிறுத்தப்பட்டனர்.

பள்ளிச் சிறுவர் பட்டபாடு

பள்ளிக் குழந்தைகளை வெயிலில் நிறுத்தி வைத்து, "ஐயா! நாங்கள் குற்றம் செய்யவில்லை. இனியும் செய்ய மாட்டோம்" என்று கூறும்படி செய்தனர். ஒரு பையன் வெயிலில் நடந்து செல்லும்போது மயங்கிக் கீழே விழுந்து வாந்தி யெடுத்து இறந்து போனான். காவலில் இருந்தவர்கள், தடவைக்கு இரண்டு ரூபாய் கொடுத்தால்தான் இயற்கைக் கடன் கழிக்க அனுமதிக்கப் பட்டனர்.

சத்திரங்கள் இராணுவப் பாசறைகளாக மாறின.

செய்தாலும் குற்றம் செய்யாவிட்டபலும் குற்றம்

துணைக் கமிஷனருக்குப் பால் வேண்டும் என்று ஒருவன் ஒரு கடைக்கு வந்தான். கடைக்காரர் பால் கொடுத்தே தீரவேண்டும். இல்லையேல் தண்டனை கிடைக்குமே! என்ன செய்வார்! அது இரவு நேரம். எழுந்து கடையைத் திறந்து விளக்கை ஏற்றினார். அவ்வளவுதான்! ஊரடங்கு உத்தரவை மீறிவிட்டதாகக் குற்றம் சுமத்தி அவரைக் கைது செய்தனர்.

பால் தருவதற்காகக் கடை திறக்காவிட்டாலும் தண்டனை! திறந்தாலும் தண்டனை! என்னே அதிசயம்!

“வெளிச்சம் இல்லாமல் பால் கொடுக்க இயலாமையால் விளக்கை ஏற்றினேன் என்று உண்மையைக் கூறிக் கெஞ்சிப் பார்த்தார் கடைக்காரர். பயன் இல்லை. பின்னர் ஜாமீனில் விடப்பட்டார். ஐம்பது ரூபாய் அபராதமும் ஆறு சாட்டையடியும் தண்டனையாகக் கிடைத்தன. சாட்டையடி தாங்குவதற்குச் சக்தி யில்லை என்று மருத்துவச் சான்றிதழைத் தந்தமையால், சாட்டை யடியை நிறுத்தி, அபராதத்தை இரட்டித்தனர்.

ஒருவரைக் கைது செய்வதற்காகச் சிப்பாய்கள் வரும் போது, அவர் வீட்டில் இல்லையேல், அவருக்கு மாற்றாக வேறு யாரையாவது கைது செய்து அழைத்துச் சென்று விடுவர். இதன்படி தம் மருமகனுக்காக ஒரு வயோதிகர் சிறைப்பட நேர்ந்தது. வெளியில் நிறுத்தப் பட்டமையால் அந்த வயோதிகர் மூன்று முறை மூர்ச்சையடைந்தார். அப்போதும் அதிகாரிகளின் மனம் இரங்கவில்லை. தண்டனை யடையவே நேர்ந்தது.

★★★

14 மணியன் வாலா

ஆத்திரச் செயல்

ஐந்நூறே மக்கள் வாழும் சிற்றூர் மணியன் வாலா. ஏப்ரல் 16 இல் இரயில்வே நிலையம் கொள்ளையடிக்கப்பட்டுத் தீயிடப்பட்டது. அமிருத சரசு கொலைகளைக் கேள்விப்பட்ட சிலரின் ஆத்திரச் செயல் அது. ஆனால் அதற்காக அவ் வூரார் அனுபவிக்க நேர்ந்த தண்டனை மிகமிக அதிகம்.

துப்பாக்கிச் சூடு

ஏப்ரல் 19 இல் ஓர் இரயில் வண்டி வந்து கொண்டிருந்தது. வரும்போதே இரயிலிலிருந்த சிப்பாய்கள் ஊரை நோக்கிச் சுட்டனர். ஒருவர் மாண்டார். சிலர் காயமுற்றனர்.

நூற்றுப் பதினைந்து வயதினர்

நூற்றுப் பதினைந்து அகவையினர் அட்டர்சிங்கு. அவர் கைது செய்யப்பட்டார். அவரால் நடக்க இயலவில்லை. ஆதலால் குதிரையில் கொண்டு செல்லப்பட்டார். வெயிலால் வெப்பம் ஏறித் தகித்துக் கொண்டிருந்த சரக்கு இரயிலில் அவரை ஏற்றினர். அந்த முதியவர் என்ன பாடு பட்டிருப்பார்!

முக்காடு பிடுங்கினர்

வழக்கம்போல் பொய்ச் சாட்சியம் கூறும்படி பலர் வற்புறுத்தப்பட்டனர். மறுத்தவர்கள் சிறைப்பட நேர்ந்தது. பெண்கள் அவமானப்படுத்தப்பட்டனர். அவர்களின் முக்காட்டைப் பிடுங்கி எறிந்தனர். வாயில்வந்தபடி ஏசினர். ஈக்கள், பெட்டை நாய்கள், கழுதைகள் என்பன அவர்கள் மேல் வீசிய வசவுகளில் சில.

“உங்கள் உடைகளைக் களைந்து சோதனை யிடுவோம்” என்று பெண்களை அச்சுறுத்தினர்.

"நீங்கள் கணவன்மாரோடு படுக்கையில் படுத்துக் கொண்டிருந்தபோது, அவர்களை எப்படி வெளியே போக விட்டீர்கள்!"

என்று இடக்கராகப் பேசினர். அவர்கள் மேல் எச்சில் உமிழ்ந்தனர்.

குருதேவி பேசுகின்றார்

காலம் சென்ற மங்கள் சாதின் மனைவி குருதேவி. அவர் கூறுவதைச் சிறிது காது மடுப்போம்.

"இராணுவச் சட்டம் நடைமுறைக்கு வந்தபோது ஒரு நாள் எங்கள் கிராமத்திலுள்ள எட்டு வயதுக்கு மேற்பட்ட ஆடவர்களையெல்லாம் சில கல் தொலைவிலுள்ள பங்களாவுக்கு விசாரணைக்காக வரும்படி கட்டளை யிட்டான், பாஸ்வொர்த் ஸ்மித் என்ற அதிகாரி.

"அந்த உத்தரவுப்படி ஆடவர் அனைவரும் சென்ற பிறகு, அவன் கிராமத்திற்குக் குதிரையில் வந்தான். பங்களாவுக்குச் சென்ற கணவன்மாருக்கு உணவு கொண்டு சென்ற பெண்களையும் தடுத்துவிட்டான்.

"கையில் தடியைச் சுழற்றிய வண்ணம் தெருவில் பவனி வந்தான். அனைத்துப் பெண்களும் வெளியே வருதல் வேண்டும் என்று கட்டளை யிட்டான்.

"பெண்கள் என்ன செய்ய இயலும்! வெளியே வந்து கைகட்டி நின்றனர்.

"பெண்கள் சிலரைத் தடியால் அடித்தான். சிலர்மேல் எச்சில் உமிழ்ந்தான். பெண்கள் அனைவரின் முக்காட்டையும் தன் தடியினால் விலக்கி எறிந்தான். 'பெண் கழுதைகள்', 'பன்றிகள்' என்று அவன் அருச்சனை புரிந்தான்.

"கைகளைக் கால்களில் நுழைத்து வளைத்துக் காதுகளைப் பிடித்துக் கொண்டு குனிந்திருக்குமாறு செய்தான்."

என்பது குருதேவியின் அனுபவப் பேச்சு.

முடிவில் அவ் வூரார் நட்ட ஈடாகப் பெருந் தொகை தரவும் நேர்ந்தது. பலர் தீவாந்தரத் தண்டனையும் அடைந்தனர் என்று தெரிகின்றது.

★★★

15 நவான் பிண்டு

மணியன் வாலா இரயில் நிலையத்தைக் கொளுத்தியதில் நவான் பிண்டு மக்களுக்கும் பங்கு உண்டு என்று அதிகாரிகள் கருதினர்.

மணியன் வாலாவைவிடச் சிறிய ஊர் நவான் பிண்டு.

போர்ட்டர்கள்

"இரயில்வே நிலையத்துக்குத் தீ வைத்தவர் யார்?" என்று இரயில்வே போர்ட்டர்கள் விசாரிக்கப்பட்டனர்,. "இருட்டில் கூட்டமாக இருந்ததால் அடையாளம் அறியக்கூடவில்லை" என்று விடை கிடைத்தது.

நயமாகவும் பயமாகவும் கேட்டுக் கொண்டமையால், வேறு வழியின்றி யாரையாவது அடையாளம் காட்டுவதாகப் போர்ட்டர்கள் ஒப்பினர்.

பலர் கைது

கிராம மக்கள் வரிசையாக நிறுத்தப்பட்டனர். போர்ட்டர்கள் யாரோ சிலரைச் சுட்டிக் காட்டினர். காட்டப்பட்டவர்கள் விலங்கிடப்பட்டனர். உண்மையில் அவர்கள் குற்றவாளிகள் அல்லர்.

கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர், "நிலையத்தை எரித்த அன்று நான் வீட்டைவிட்டு வெளியே வரவே இல்லை" என்று சாதித்தார். அதற்காக அவர் ஒரு மரத்தில் கட்டப்பட்டார். பன்னிரண்டு சாட்டை யடிகள் படநேர்ந்தது.

கைது ஆனவர் அனைவரும் ஒரு சத்திரத்து அறையில் கை விலங்குடன் அடைக்கப்பட்டனர். உணவோ நீரோ இரண்டு நாள்வரை தரப்படவில்லை. உணவு கொண்டு வந்த உறவினர்கள் விரட்டியடிக்கப்பட்டார்கள்.

சிலர் மூன்று வருடக் கடுங் காவலும் இருநூறு ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டனர்.

இரயில் நிலையம் எரிந்த அன்று தாங்கள் அவ்வூரில் இல்லை என்று பல சாட்சிகளைக் கொண்டு நிரூபணம் செய்தும் பயன் இல்லை. தண்டனைதான் கிடைத்தது.

அடையாளம் காட்டிய போர்ட்டர்களுக்கு அவர்களின் முகங்கூடத் தெரியாது. பணத்துக்காகச் சிலரைக் காட்டினர். பயத்தால் சிலரைச் சுட்டினர்.

கடைப் பொருள் சூறை

வழக்ம்போல் கடைப் பொருள்கள் அள்ளிச் செல்லப்பட்டன. சர்க்கரை, பால், நெய் முதலியன கொள்ளையிடப்பட்டன.

நானூறு ரூபாய்கள் பெறுமானமுள்ள உணவுப் பண்டங்கள் தருதல் வேண்டும் என்று ஒருவன் கட்டாயப்படுத்தப்பட்டான். அவனால் தர இயலவில்லை. ஊர் மக்கள் வசூல் செய்து தந்து, அவனைத் தண்டனையிலிருந்து காப்பாற்றினார்கள்.

உணவு தர இலஞ்சம்

காவலில் இருந்தவர்க்கு உறவினர் உணவு தரவேண்டுமாயின் தடவை ஒன்றுக்கு ஒரு ரூபாய் வீதம் இலஞ்சம் தரவேண்டியிருந்தது.

பத்து வயதுக்கு மேற்பட்ட ஆடவர் அனைவரும் வரிசையாக வெயிலில் நிறுத்தப்பட்டனர்.யாராவது தாம் தவறு செய்யவில்லை என்று சொன்னால் போதும்! உடனே அவர்களை மரத்தில் கட்டி வைத்து அடித்தார்கள்.

முடிவாக ஊருக்குப் பொதுவில் பத்தாயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது. ராபி விளைச்சலில் மூன்றில் ஒரு பங்கும் தர நேர்ந்தது.

★★★

16 சுகர் கானா

சுகர் கானா ஒரு சந்தை கூடும் இடம். ஏப்ரல் 12 இல் அங்கு அர்த்தால் நடந்தது. ஏப்ரல் 15இல் இரயில்வே நிலையம் தீயிடப்பட்டது.

இராணுவ வீரர்கள் அன்றே இரயிலில் வந்து இறங்கிக் கண்டபடி மக்களைச் சுட்டனர்.

அதிகாரியின் ஆணவம்

"மக்கள் கூட்டமாக இருந்தமையால், கொள்ளை

யடிக்கப் போவதாகக் கருதிச் சுட்டோம்"

என்று அதிகாரிகள் பின்னர் நடந்த விசாரணையில் கூறினர்.

"மக்கள் அங்கும் இங்கும் சென்று கொண்டிருக்கக் கண்டேன். பயங்கரமான வன் செயலில் ஈடுபடத்தான் இவ்வாறு கூடுகின்றனர் என்று நினைத்தேன். அதனால்தான் சுட்டேன்"

என்று வேறு ஓர் அதிகாரி கூறினான்.

மக்கள் தவறு செய்ய வேண்டியதே இல்லை. தவறு செய்வார்கள் என்று அதிகாரிகள் கருதினால் போதும்! உடனே சுடலாம்! என்னே ஐரோப்பிய அரசநீதி!

குண்டுகள் பாய்ந்து கொண்டே இருந்தன

சுடும்போது மக்கள் சிதறி ஓடினார்கள். ஓடியவர்களையும் விடவில்லை. மீண்டும் மீண்டும் இயந்திர பீரங்கியிலிருந்து குண்டுகள் வெளியே பாய்ந்து கொண்டே இருந்தன.

பின்னர், கிராமத்திலிருந்து ஆடு, கோழி, பால், முட்டை, பாத்திர பண்டம், உணவுப் பொருள், படுக்கை ஆகிய அனைத்தும் கொள்ளை யிடப்பட்டன.

பயிர்கள் நாசம்

பயிர்கள் குதிரைகளுக்கு இரையாக்கப்பட்டன. குழந்தைகளுக்காக இருந்த பாலைக்கூட எடுத்துச் சென்று விட்டனர்.

சிப்பாய்களின் உணவுச் செலவினை மக்களே ஏற்க வேண்டும் என்று கட்டாயப் படுத்தினர்.

பயிர்கள் அறுவடை செய்யலாகாது என்று தடுத்தனர். அறுவடை செய்யாமல்லிருப்பதற்காக வயல்களுக்குக் காவல் போடப்பட்டது.

நோய்வாய்ப்பட்ட மகனுக்கு மருந்து வாங்கச் சென்ற ஒருவர் கைது செய்யப்பட்டார். "நான் மருந்து வாங்கத்தான் போகின்றேன்" என்று கெஞ்சியும் மரத்தில் கட்டி அவரை அடித்தனர்.

அரபிக் குதிரை

கான்சிங் என்பவர் கைது செய்யப்பட்டார். அவரிடம் ஓர் அரபிக் குதிரை இருந்தது. அவருக்கு விடுதலை வேண்டுமானால், 'விடுதலையின் விலை அந்த அரபிக் குதிரை' என்றனர். அவர் குதிரையைத் தர மறுத்தமையால், "சுட்டு விடுவோம்" என்று பயமுறுத்தினர். "குதிரையைத் தருதல் வேண்டும். இல்லையேல், ஐந்நூறு ரூபாய் இலஞ்சம் தருதல் வேண்டும்" என்று அவரின் சகோதரரிடம் கேட்டனர். அவர் மறுக்கவே அவரையும் காவலில் வைத்தனர். அவர் மனைவி எங்கேயோ கடன் பெற்று ஐந்நூறு ரூபாய் கொடுத்த பிறகே விடுதலை கிடைத்தது.

கூட்டு அபராதம்

கிராமங்களுக்கு மொத்தமாக ஆயிரத்து ஐந்நூறு ரூபாய் அபதாதம் விதித்தனர். தனிப்பட்டவர் பலரும் அபராதம் செலுத்த நேர்ந்தது.

இராணுவத்தினரின் உணவுச் செலவுக்கு என்றும் போலீசுச் செலவுக்கு என்றும் லெப்டினண்டு கவர்னர் நினைவுச் சின்னத்திற்கு என்றும் மக்களிடம் பணம் கறந்தனர்.

★★★

17 செயிக்கு புரா

குஜ்ரன் வாலா மாவட்டத்தின் எல்லைக் கிராமம் செயிக்கு புரா. லாகூரிலிருந்து 25 மைலுக்கு அப்பால் உள்ளது. மகாராஜா ரண்சித் சிங்கின் மனைவி ராணி நாகேயின் இருப்பிடம் அது. இரண்டாயிரத்து ஐந்நூறு மக்கள் தொகையுடையது.

அர்த்தால்கள்

ஏப்ரல் 6 இல் அங்கும் அர்த்தால் நடந்தது. அன்று மாலை நடந்த கூட்டமும் அமைதியாகவே முடிந்தது.

ஏப்ரல் 14இல் மறுமுறையும் அர்த்தால் திடீரென்று நடந்தது. அன்றும் அசம்பாவிதம் எதுவும் நேரவில்லை.

ரொட்டிக்கடை ஒன்று பலவந்தமாக மூடப்பட்டது என்றும் கடைக்காரர் தாக்கப் பட்டார் என்றும் ஒரு செய்தி பரவியது.

தந்திக் கம்பி அறுப்பு

அன்று இரவு யாரோ சிலர் தந்திக் கம்பிகளையும் சிக்னல்களையும் அறுத்துவிட்டனர். அறுத்தவர்கள் செயிக்கு புரா வாசிகளாக இருப்பினும் இருக்கலாம்.

ஏப்ரல் 19இல் இராணுவச் சட்டம் நடைமுறைக்கு வந்தது. வழக்கம்போல் பிற இடங்களில் நடைபெற்ற கொடுமைகள் அனைத்தும் அங்கும் அரங்கேற்றப்பட்டன.

பூமியைப் பெருக்கு

எங்கும் காண இயலாத தண்டனை ஒன்று இங்கு அறிமுகம் ஆனது! பத்து வயதுக்கு மேற்பட்ட ஆடவர் அனைவருமே, அதிகமான அகலம் நீளம் உள்ள பூமியைத் துடைப்பத்தால் பெருக்கிச் சுத்தம் செய்தல் வேண்டும் என்பதே அந்த அதிசயத் தண்டனை!

அதிகாரிகள் காண விரும்பியபோது, ஊரில் இல்லாத காரணத்தால் சிலர் கைது செய்யப் பட்டனர். அவர்களின் சொத்துக்கள் பறிமுதல் ஆயின.

விளைந்த தானியங்கள் அறுவடை யாகாமல் தடுக்கப் பட்டன. வழக்கம் போல் மக்களுடைய பொருள்கள் கொள்ளை யிடப்பட்டன.

வக்கீல்களின் பரிதாபம்

முக்கியமாக அதிகாரிகளின் கவனத்துக்கு வக்கீல்கள் உள்ளானார்கள். அவர்கள் அவமானப் படுத்தப்பட்டனர். நாற்பது நாள்வரை காவலில் துன்பப்பட நேர்ந்தது.

வக்கீல்களின் சன்னதுகள் திரும்பப் பெறப்பட்டன. கைது ஆன வக்கீல்களை நகர் வலம் வரச் செய்தனர். மக்களின் கண்ணெதிரே அசுத்தமான இடங்களில் அமர்த்தப் பட்டனர்.

பின்னர் வக்கீல்கள் லாகூருக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். இடையில் இயற்கைக் கடன்கள் கழிக்கவும் அனுமதிக்கவில்லை. இயற்கை கடன்க் கழிக்க அனுமதி கேட்டபோது, “நீங்கள் அதை உண்டுவிடுவதுதானே!” என்று அருவருப்பான பதில் தந்தனர்.

முன்பு இயற்கைக் கடன் கழிப்பதற்காக உபயோகப்படுத்தப்பட்ட தனியறைகளில் வக்கீல்கள் கை விலங்குகளுடன் அடைக்கப்பட்டனர். அங்கு நாற்றம் மூக்கை அடைத்தது.

கைவிலங்குகளுடன் மீண்டும் செயிக்குபுராவிற்குக் கொண்டு செல்லப்பட்டு, அங்குப் போலீசு நிலையம் வரை நடக்கவிட்டு, அதன் பின்னரே வக்கீல்களுக்கு விடுதலை கிடைத்தது.

இந்தக் கொடுமைகள் யாவும் வக்கீல்களை இழிவுபடுத்தும் பொருட்டே நடந்தன.

சீக்கியர் தலைப்பாகை

சீக்கியர்கள் தங்கள் தலைப் பாகையைப் புனிதமாகக் கருதுவர். அதைக் கழற்றுவது சமய விரோத மாகும். சீக்கியர்களின் தலைப்பாகையை அகற்றச் செய்தனர். தடியினால் முதியோர்களின் முகவாய்க் கட்டையில் குத்தினர்.

பீரங்கிகளைக் கொண்டு வந்து மேடான இடங்களில் நிறுத்தினர். எதிரே இரும்புத் துண்டங்கள் வைக்கப்பட்டன.

பீரங்கிகளால் சுட்டு அந்த இரும்புத் துண்டங்கள் நெருப்பு மயமாவதைப் பார்க்கும்படி மக்களை ஏவினர். அரசுக்கு விரோதமாகச் செயல்படுவோர் கதி இதுதான் என்று காட்டுவதற்காகவே அவ்வாறு செய்யப்பட்டது.

வசவுகள்

பன்றிகள், அருவருப்பான புழுக்கள், கருப்பு நாய்கள், வெறுக்கத் தக்க சென்மங்கள் முதலியன மக்களை ஏசுவதற்குப் பயன்படுத்திய சொற்களிற் சில.

தந்திக் கம்பிகளின் சேதம் ஐந்து ரூபாய்க்கு மேல் இராது. ஆனால் நட்ட ஈடு தொள்ளாயிரம் ரூபாய் கேட்கப்பட்டது. பிறகு இரக்கப்பட்டு, அறுபது ரூபாயாகக் குறைத்து அத் தொகையை வக்கீல்களிடம் வசூல் செய்தனர்.

வினோதமான குற்றச் சாட்டுக்கள்

வக்கீல்கள் மீது சாட்டப்பட்ட குற்றங்கள் மிகமிக வினோதமானவை. இதோ! மாதிரிக்குச் சில.

ஸ்ரீராம் சத் ஒரு வக்கீல். அவர் 'டிரிப்யூன்' பத்திரிகையின் சந்தாதாரராக இருந்தும், அர்த்தால் நடந்த அன்று வெறுந் தலையுடன் காணப்பட்டதும் அவர் செய்த மாபெருங் குற்றங்கள்.

'மாஸ்லெம் ஹெரல்ட்' பத்திரிகையின் சந்தாதாரராக இருந்ததும் அர்த்தால் அன்று வேறு ஒரு வக்கீலின் வீட்டில் காணப்பட்டதும் இன்னொருவர் செய்த மன்னிக்க முடியாத குற்றங்கள்.

இக் குற்றங்களுக்காக அவர்கள் கைது ஆகி அடைந்த அவமானமும் துன்பமும் கொஞ்சம் அன்று.

★★★

18 லையால்பூர்

தமிழ் நாட்டின் நெற் களஞ்சியம் தஞ்சாவூர். பாஞ்சாலத்தின் கோதுமைக் களஞ்சியம் லையால்பூர்.

பதினையாயிரம் மக்களைக் கொண்ட இங்கு ஏப்ரல் 6இல் அர்த்தால் நடந்தது. அமிருத சரசுப் படுகொலைச் செய்தி, மக்களின் ஆத்திரத்தைத் தூண்டி யிருந்தாலும், தலைவர்கள் கலகம் ஏதும் நடவாமல் அமைதிப் படுத்தி வந்தனர்.

வதந்தி

அமிருத சரசு பொற்கோயிலில் குண்டு போடப்பட்ட தாகப் பரவிய வதந்தியினால், சீக்கியர்கள் உள்ளம் கனன்றாலும் அவர்களையும் தலைவர்கள் அமைதிப் படுத்துவதில் வெற்றி கண்டனர்.

இந் நிலையில் சில தந்திக் கம்பிகள் அறுக்கப் பட்டன. அதற்கும் லையால்பூர் வாசிகளுக்கும் யாதொரு தொடர்பும் இல்லை.

இரயில் நிலையத்தில் அடுக்கி வைக்கப்பட்டிருந்த உமி மூட்டைகள் எரிந்து போயின. அங்கு நான்கு இயந்திரங்கள் இயங்கிக் கொண்டிருந்தன. அவற்றுள் ஒன்று உமி மூட்டைகளின் அருகில் இருந்தது. அதன் புகையில் பிறந்த தீப் பொறியே நெருப்புக்குக் காரணம் என்று சிலர் உறுதியாகக் கூறினர்.

பலவித கொடுமைகள்

வேறு கலகம் ஏதும் அந்த நகரில் நிகழவில்லை. இருந்தும் உமி மூட்டை எரிந்ததைக் காரணம் காட்டிப் பலர் கைது செய்யப்பட்டனர். அதன் தொடர்ச்சியாகப் பல கொடுமைகளும் இங்குக் கட்டவிழ்த்து விடப்பட்டன. வக்கீல்களுக்கு வாய்ப்பூட்டு உத்தரவு இடப்பட்டது.

இராணுவச் சட்ட அறிக்கைகள் கதவுகளில் ஒட்டப்பட்டன. அவற்றைப் பாதுகாக்கும் பொறுப்பு வீட்டுக் காரர்களுடையது. அது கிழிந்து போனாலும் காணாமல் போனாலும் காணாமல் போனாலும் தண்டனை தப்பாது.

"என் வீட்டுக் கதவில் ஒட்டினால் அது கிழிந்து போகலாம். ஆதலால், அதை என் கையில் தாருங்கள்! ஒரு பலகையில் ஒட்டிப் பகலில் மக்கள் பார்வைக்கு வைத்து, இரவில் எடுத்துப் பத்திரப் படுத்திக் கொள்வேன்"

என்று ஒரு வக்கீல் மன்றாடினார். அவர் கோரிக்கை மறுக்கப்பட்டது.

★★★

19

குஜ்ரத்து

குஜராத்து மாநிலம் வேறு. இது வேறு. இந்தக் குஜ்ரத்து பஞ்சாப் மாநிலத்திலுள்ள ஒரு நகரம். இருபதாயிரம் மக்களைக் கொண்ட இந் நகரில் ஏப்ரல் 6இல் அர்த்தால் நடந்தது. அர்த்தால் நடப்பதைச் சனாதன சபையின் தலைவராகிய ஒரு வியாபாரி தடுத்தார்.

மக்கள் இறங்கினர்

ஏப்ரல் 13இல் குஜ்ரத்து வாலிபர் சிலரும் வைசாகிப் பெருவிழாக் காண்பதற்கு வாசீராபாத் சென்ற மக்கள் சிலரும் இரவு 11 மணி இரயிலில் வந்து இறங்கினர். அவர்கள் ஒரு கூட்டமாக ரெளலட் சட்டத்தை எதிர்த்துக் குரலெழுப்பிக் கொண்டே நகரினுட் புகுந்தனர். மறுநாள் காலையில் லாகூரில் நடந்த கொடுமைகளைத் தெரிவித்து அர்த்தால் செய்யும்படி தூண்டினர். ஏப்ரல் 15இல் மிஷன் பள்ளிக்குச் சென்று பள்ளியை மூடும்படி வேண்டினர். தலைமையாசிரியர், பள்ளியை மூடுவதற்கு இணங்காததோடு, மூடும்படி வேண்டியவர்களைப் பிரம்பால் அடித்தும் விட்டார்.

துப்பாக்கிச் சூடு

அடிபட்டவர்கள் சினம் கொண்டு கற்களை வீசிச் சன்னல் கதவுகளை உடைத்தனர். பின்னர் இரயில் நிலையம் சென்று அதற்கு நெருப்பூட்டிக் கண்ணாடிகளை உடைக்க முயன்றனர். போலீசார் வந்து சுட்டுக் கூட்டத்தைக் கலைத்தனர். உயிர்ச் சேதம் ஏதும் இல்லை.

இராணுவச் சட்டம்

இராணுவச் சட்டச் சனியன் குஜ்ரத்திலும் புகுந்தது. வழக்கம் போல் வக்கீல்களே மிகவும் துன்புறுத்தப்பட்டனர். ரூபாய் நாற்பத்து இரண்டாயிரம் கூட்டு அபராதம் விதிக்கப்பட்டது. அத் தொகையில் கால்பாகம் ஒரே ஒருவரிடம் வசூலித்தனர். மற்றும் பெரும் பகுதியை வக்கீல்களே தர நேர்ந்தது.

★★★

20

மலாக் வால்

ஏழு வாயிரம் மக்கள் வாழும் சிற்றூர் மலாக் வால். அது ஓர் இரயில்வே சந்திப்பு.

தண்டவாள நீக்கம்

ஏப்ரல் 17 இல் இரயில் நிலையத்தில் வேலை செய்யும் கூலிகள் ஒரு தண்டவாளத்தை அகற்றிவிட்டனர். அதனால் தண்டவாளத்தை விட்டு ஓர் இரயில் இறங்கிவிட்டது. ஆனால் எந்தவிதச் சேதமும் இல்லை.

எப்போது எப்போது என்று காத்துக் கொண்டிருந்த இராணுவப் பூதத்துக்கு இந்தக் காரணம் போதாதா? உடனே அது மலாக்வாலில் பிரவேசம் செய்து விட்டது. இரயில்வே குமாஸ்தாக்கள் உட்படப் பலர் கைது ஆயினர்.

பங்கா இழுக்க

நகரப் பிரமுகர்கள், அதிகாரிகளுக்குப் பங்கா இழுக்கும்படி கட்டளையிடப்பட்டனர். சாக்கடைகளைக் கழுவுவதற்கும் ஏவப் பட்டனர்.

பள்ளிச் சிறுவர்கள் நாடோறும் மும்முறை யூனியன் ஜாக் கொடியை வணங்க வேண்டுமென்று வற்புறுத்தப் பட்டனர்.

குற்ற மற்றவர்கள் என்று அறிந்த போதிலும் இரயில் குமாஸ்தாக்கள் அனைவரும் வேலை நீக்கம் செய்யப்பட்டனர்.

★★★

21

நிறைவுரை

ரௌலட் சட்டம் தலைகாட்டியபோது, பாஞ்சாலத்தில் சில நகரங்களில் நடந்த மக்கள் எழுச்சிகளையும் அரசின் அடக்குமுறைக் கொடுமைகளையும் இதுகாறும் சுற்றிப் பார்த்தோம்.

மக்கள் அடைந்த தண்டனைகளையும் தந்த இலஞ்சங்களையும் பட்ட அவமானங்களையும் இதைவிடச் சுருக்க மாகக் கூற இயலாது.

இதுகாறும் நாம் கண்டவற்றிலிருந்து, அதிகாரிகள் வரம்பு மீறி நடந்து கொண்டனர் என்பது தெளிவாகின்றது.

கட்டடங்களை எரித்தல், தந்திக் கம்பிகளை அறுத்தல், கம்பங்களை முறித்தல், ஐரோப்பியரைக் கொலை செய்தல், கொலை செய்ய முயலுதல், பாலங்களைத் தகர்த்தல், தண்டவாளங்களைப் பெயர்த்தல் முதலிய குற்றங்களும் மறுக்கப்பட இயலாது.

அனைத்துப் பஞ்சாப் மக்களும் அந்தக் குற்றங்களில் ஈடுபடவில்லை. ஒரு சிறிய பகுதியினரே நேரடிப் பங்கு கொண்டனர் என்பதும் வெள்ளிடை மலை.

மக்கள் நாச வேலைகளில் ஈடுபட்டது எதனால்? அரசு மக்கள் மனத்தைப் புண்டுத்தியதுதான் காரணம். இதனை எளிதில் தெரிந்து கொள்ளலாம்.

பத்திரிகைகளை அடக்கியது, படித்தவகுப்பாரை அவமானப் படுத்தியது, வன்முறையைப் பயன்படுத்திப் போருக்கு ஆள் சேர்த்தது, பணம் திரட்டியது, இலஞ்சம் பெற்றது, கொடுத்தது முதலிய செயல்களால், லெப்டினண்டு கவர்னர் மைக்கேல், மக்களின் வெறுப்பை மேன்மேலும் தேடிக் கொண்டான்.

மக்களை அமைதிப் படுத்தி அகிம்சை வழியில் கட்டுப்படுத்தி வைத்திருந்த மகாத்மா காந்தியடிகள், டாக்டர் கிச்சுலு, டாக்டர் சத்தியபாலு முதலியோரைக் காவலில் வைத்தும் வெளியேற்றியும் மக்கள் மனக் கொதிப்பை மேலும் அதிகமாக்கினான் மைக்கேல்.

இந்தத் தலைவர்கள் வெளியேற்றப் படாமல் இருந்திருப்பின், குற்றமற்ற ஐரோப்பியர் உயிர்கள் உறுதியாகக் காக்கப்பட்டிருக்கும். கட்டடங்கள் முதலியன சேதமாகி இரா.

ஏப்ரல் 6 இல் நடந்த அர்த்தாலைத் தடுப்பதற்காகச் சட்டபூர்வமான வழியைக் கையாளாமல், இராணுவச் சட்டத்தை நடைமுறைப் படுத்தியது, எரிகிற நெருப்பில் எண்ணெய் ஊற்றிவிட்டது.

துப்பாக்கிகளைச் சிப்பாய்கள் விருப்பம்போல் பயன்படுத்தலாகாது. மேலிடத்து உத்தரவுப்ப தான் பயன்படுத்துதல் வேண்டும் என்ற சாதாரண விதியைக் கடைப்பிடித்திருந்தால் கூட, இவ்வளவு விபரீதங்கள் நேர்ந்திரா.

அமிருத சரசில் டையர் என்ற அரக்கன் செய்த இரக்கமற்ற செயல்,மக்களை அறிவிழக்கச்செய்துவிட்டது.கொலை,கொள்ளி முதலிய வன்முறைகளில் ஈடுபட மக்களைத் தூண்டிவிட்டது. ஆயினும், மக்களின் ஆத்திரம் சில மணி நேரமே நீடித்தது.

உண்மையில் நோக்குவோமாயின், மக்களின் கிளர்ச்சியைச் சாதாரண சட்டங்களின் மூலமே சமாளித்திருக்க முடியும் என்பது தெளிவு.

இராணுவச் சட்டம் கொண்டு வந்தது தேவையற்றது என்பதைப் பின்னர், அதிகாரிகள் சிலரே ஒப்புக்கொண்டுள்ளனர்.

மக்களின் எழுச்சியை அரசுக்கு எதிரான கலகம் அல்லது போர் என்று வாயால் அதிகாரிகள் சாதித்தாலும், அதற்கு ஆதாரம் காட்ட அவர்களால் இயலவில்லை.

இராணுவச் சட்டத்தைக் கடுமையாகக் கையாண்ட கர்னல் ஓபரீனே, கலகம் என்பதற்கோ போர் என்பதற்கோ எவ்வித ஆதாரமும் இல்லை என்றும் தலைவர்களைக் கைது செய்ததும் வெளியேற்றியதும் வதந்திகளின் விளைவே என்றும் ஒப்புக் கொண்டுள்ளான்.

வன்முறைக்கும் தலைவர்களுக்கும் தொடர்பே இல்லை என்பதும் அவன் வாக்கு மூலம்.

அரசைக் கவிழ்ப்பதற்குச் சதி நடந்தது என்பதை நிலைநாட்டுதல் வேண்டுமம்என்பது மைக்கேலின் விருப்பம்.

தலைவர்களின் பேச்சில் இராஜத் துரோகத்தையும் அர்த்தால் சதித்திட்டத்தையும், இந்து-இசுலாம் ஒற்றுமையால் விளையும் அச்சுறுத்தலையும் அவன் கற்பனை செய்துகொண்டான்.

இராணுவச் சட்டம் கொண்டு வந்தது அநியாயம். எங்கும் அமைதி ஏற்பட்ட பிறகும், எவ்விதமான கிளர்ச்சியும் இல்லாத நிலையிலும், இரு மாதங்கள் அச்சட்டத்தை நீடிக்கச் செய்தது அதைவிட அநியாயம்.

இராணுவச் சட்டத்தின்போது கையாண்ட முறைகள், நாகரிகத்துக்கு உரிமை பாராட்டும் எந்த அரசையும் தலைகுனியச் செய்துவிடும்.

இராணுவச் சட்டம் வருவதற்கு முன்பே, ஜாலியன் வாலா தோட்டத்துப் படுகொலை நடந்தது. அதன் பின் இரண்டு மாதங்களும் ஜெனரல் டையர் செய்த அட்டூழியங்களைச் சர் மைக்கேல் அங்கீகரிக்கவே செய்துள்ளான்.

சர் மைக்கேலின் அதிகாரத்தின் கீழ் நடந்த கொடுமைச் செயல்களால் உயிர் இழந்தவர் ஆயிரத்து இருநூற்றுவர். காயமுற்றவரும் உடல் ஊனமுற்றவரும் மூவாயிரத்து அறுநூற்றுவர் என்று கண்டறியப் பட்டுள்ளது.

சித்திரவதைக்கு ஆளானவர் பல்லாயிரவர். சித்திரவதைகள் எத்தகையன என்பதை நூல் முழுவதும் கண்டோம் அன்றோ!

கைது ஆனோரும் அபராதம் செலுத்தினோரும் அளவிலர்.

இந்திய மக்களின் எதிர்ப்புக் கண்டு - எழுச்சி கண்டு அஞ்சிய அன்னியர்கள், கொடுமை செய்த டையருக்குத் தண்டனை தந்தனர். என்ன தண்டனை தெரியுமா! அவனை இலண்டனுக்கு அழைத்துக் கொண்டதுதான் அந்தத் தண்டனை!

அது மட்டுமா! எரிகிற புண்ணில் எண்ணெய் காய்ச்சி ஊற்றியதுபோல், இன்னொரு கொடுமையும் நடந்தது.

ஆம்! ஜெனரல் செய்த செயற் கரிய செயலைப் பாராட்டி, அவனுக்கு இலண்டனில் தங்கவாள் பரிசும் தரப்பட்டது!

என்னே! பிரிட்டிஷாரின் நேர்மை!

இதுகாறும் கண்ட வரலாறு உணர்த்தும் பாடம் யாது? அடிமை வாழ்வு சகிக்க முடியாதது. அடிமைப்படுத்தியவர்

நல்லவராக அமைந்தாலும் அடிமை வாழ்வு துன்பமயமாகவே இருக்கும் என்றால், கொடியவர் ஆட்சியால் என்ன நேரும் என்று சொல்லித் தெரிய வேண்டுமோ?

எளிதிலே பூட்டிக் கொண்ட அடிமை விலங்கை அறுப்பதற்கு எவ்வளவு உயிர்களை விலையாகத் தரவேண்டியுள்ளது? எவ்வளவு கண்ணீரைச் சிந்த வேண்டியுள்ளது? எத்தனை சிறைகளை நிரப்ப வேண்டியுள்ளது? எத்தனை சொத்துக்களை இழக்க வேண்டியுள்ளது? எத்தனை உடல்களைச் சித்திரவதைக்கு உள்ளாக்க வேண்டியுள்ளது? எத்தனை உறுப்புக்களை இழக்க வேண்டியுள்ளது? என்ற வினாக்களுக்கு இந்த வரலாறு தக்க விடையாக அமைந்துள்ளது.

தண்ணீர் விட்டு வளர்க்காமல் கண்ணீர்விட்டு வளர்த்த பயிர்தான் இன்று நாம் பெற்ற சுதந்தரம். இதை நாம் எளிதில்அடைந்து விடவில்லை. ஆண்டவன் அருளால், தானே பழுத்து விழுந்து விடவும் இல்லை.

நாம் சிந்திய கண்ணீரால் - இல்லை; இல்லை - இரத்தத்தால் கிடைத்தது இந்தச் சுதந்தரப் பேறு. அடிமைச் சுவை இத்தகைய தென்று நன்கு அனுபவித்து அறிந்து கொண்டோம்.

மீண்டும் அந்த அவலத்தைச் சுவைக்காமல், விடுதலைக் கொடியை விண்ணுயரப் பிடித்துக் கொண்டே யிருப்போம்!

ஜாலியன் வாலாபாக்கில் 1919 ஏப்ரல் 13இல் இந்துக்கள், முகமதியர், சீக்கியர் சிந்திய இரத்தம் நமது நாட்டின் ஜாதி, மதப் பாகுபாடு அற்ற சுதந்தரப் போராட்டப் பயிருக்கு நீர் ஊற்றி வளர்த்தது.

ஊழல், அரசியல் சுயநலம், வகுப்புவாதம், வன்முறை முதலியவற்றால், நம் ஒருமைப்பாட்டுக்கும் கண்ணீர் விட்டு வளர்த்த சுதந்தரத்திற்கும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ள இக் காலத்தில், இவ்வரலாற்றினை நெஞ்சில் நிறுத்துவது இன்றியமையாததாகும்.

விழித்திருப்போம்! வேற்றுமைக்கு இடம் கொடோம்!

அடிமைப்படோம்! அடிமைப்படுத்தோம்!

★★★

இணைப்பு:

ஒளிவிளக்கு உதம்சிங்

பஞ்சாப் படுகொலை பற்றிய செய்திகள் நாடெங்கும் பரவின. தலைவர்களும் பொது மக்களும் ஒரு முகமாக கண்டித்தனர். பத்திரிகைகள் எதிர்ப்புக் குரல் எழுப்பின.

மழை விட்டும் துவானம் விடவில்லை. லாகூரில் பொதுமக்கள் பலர் கைது செய்யப் பட்டனர். இராணுவச் சட்டக் குழு பலருக்குக் கடும் தண்டனைகள் அளித்தது.

அரசுத் தரப்பில் சாட்சி சொன்னவர்கள் தப்பினர்

சத்தியபால், கிச்சுலு ஆகியோர் நாடு கடத்தப்பட்டது அறிந்து, இங்கிலாந்து அதிர்ச்சியடைந்தது. முழுவிபரம் அறிவிக்கவேண்டும் என்று பார்லி மெண்டில் மாண்டேகு நெருக்கப் பட்டார். அதன் பலனாக பிரிட்டிஷ் அரசு விசாரணைக் குழு அமைக்க நேர்ந்தது.

அதற்கு முன்பே, காங்கிரஸ் விசாரணைக் குழு அமைத்தது. அது 1920 மார்ச்சு 20 இல் அறிக்கை வெளியிட்டது.

டையரைக் கடுமையாகச் சாடிய காங்கிரஸ் அறிக்கை "துணைநிலை ஆளுநர் மைக்கேலையும் டையரையும் பதவி நீக்கம் செய்து இலண்டனுக்கு அழைக்க வேண்டும். இந்தப் படுகொலைக்குக் காரணமான ரௌலட் சட்டம் வாபஸ் பெறப்பட வேண்டும்" என்று தீர்ப்பு வழங்கியது.

வில்லியம் ஹண்டர் என்பார் தலைமையில் அமைந்த அரசின் விசாரணைக் குழுவில் நால்வர் வெள்ளையரும் இருவர் இந்தியரும் உறுப்பினராக இருந்தனர்.

நவம்பரில் லாகூரில் அரசின் விசாரணைக் குழு, தன் நடவடிக்கையைத் தொடங்கியது. டையர் வினாக்களுக்கு மேல்

வினாக்களால் துளைக்கப்பட்டான். ஆயினும் அகந்தையை விடாமல் டையர் பதிலளித்தான்.

"ஒரு படிப்பினையாக இருக்க வேண்டும் என்பதற்காகவே சுடுவதற்கு உத்தரவிட்டேன்" என்றான். "காயம் அடைந்தவருக்கு மருத்துவ உதவி செய்யாமல் இருந்தது ஏன்?" என்று கேட்டதற்கு, "மருத்துவ உதவி தர வேண்டியது என் பொறுப்பல்ல" என்று தன் திமிரை ஒழுகவிட்டான்.

மைக்கேலும், டையருக்குத் தான் சற்றும் சளைத்தவன் அல்லன் என்று விசாரணையின் போது காட்டிக் கொண்டான்.

"தான் செய்தது யாவும் சரியே. இல்லையேல் பெரும் புரட்சி வெடித்திருக்கும்" என்பது அந்தச் சாத்தான் ஓதிய வேதம்.

1920 மார்ச்சில் டையர் விடுப்பில் இலண்டனுக்கு அழைக்கப்பட்டான். "இனிப் பாரதத்துக்குத் திரும்பலாகாது". இதுதான் விசாரணைக் குழுவின் தீர்ப்பின்படி அரசு வழங்கிய தண்டனை.

இலண்டனில் டையரின் தீரச் செயலைப் பாராட்டி, 'மார்னிங் ஸ்டார்' என்ற இதழ், நிதி திரட்டி முப்பதாயிரம் பவுண்டு வெகுமதி அளித்தது. "பிரிட்டிஷ் ஆதிக்கத்திலிருந்து நழுவி விடாமல், இந்தியாவைக் காப்பாற்றியவன்" என்று பொறிக்கப்பட்ட வீரவாள் ஒன்றும் அவனுக்குப் பரிசளிக்கப்பட்டது.

செய்த தவற்றுக்கு அரசு தண்டனை பெறாமல் வெகுமதி பெற்ற இந்தப் பேய்க்கு. நோய்தான் தண்டனை தந்தது. ஆம் 1927 ஜூலை 27இல் புல்லியன் ஒருவன் உடலைச் சுமக்கும் கொடுமையிலிருந்து பூமித்தாய் விடுபட்டாள். அதாவது டையர் என்ற அரக்கன் செத்துத் தொலைந்தான்.

மைக்கேல் இலண்டனில் ஓய்வூதியம் பெற்று வாழ்ந்து வரலானான்.

பஞ்சாப் படுகொலையில் தப்பியவன் உதம் சிங். சீக்கிய சிங்கமாகிய அவன், பழிக்குப் பழி வாங்கியே தீருவேன் என்று சபதம் செய்தான்.

அவன் படிப்புக்காக வெளிநாடு சென்று மீண்டான். ஐயத்துக்கு இடமானவன் என்று காவலர் அவனைக் கண்காணித்து வந்தனர்.

1930 மார்ச்சில் பகத்சிங், இராஜகுரு, சுகதேவ் என்ற முப்பெருஞ் சிங்கங்கள் அரசத் துரோகக் குற்றம் சாட்டப்பட்டுத்

தூக்கில் தொங்கிய கொடுமை தனது, வீர சபதத்தை அவனுக்கு நினைவுறுத்தியது.

காவலரின் கண்காணியிப்புக்குத் தப்பி ஜெர்மனி வழியாக இலண்டன் அடைந்தான் உதம்சிங்.

1940 இல் இலண்டன் தெரு வழியே உதம்சிங் நடந்து போய்க் கொண்டிருந்தான். தற்செயலாக ஒரு துண்டுப் பிரசுரம் அவன் கைக்குக் கிடைத்தது.

"காக்ஸ்டன் ஹாலில் மார்ச் 13இல் ஒரு பொதுக் கூட்டம்" என்பது அந்த துண்டுப் பிரசுரம் அறிவித்த செய்தி. படுபாவி மைக்கேலின் பெயரும் அதில் இருந்தது.

கூட்டத்தில் கலந்திருந்த உதம் சிங்கின் குண்டு மைக்கேலின் உதிரத்தை ருசி பார்த்தது. அதே இடத்தில் சுருண்டு விழுந்தது அந்த மிருகம். வாய்ப்பிருந்தும் உதம்சிங் தப்பியோட முயலவில்லை.

தூக்குத் தண்டனை, அவன் காட்டிய வீரத்துக்கு பரிசாகத் தரப்பட்டது.

1940 ஜூலை கடைசி நாள், தூக்கு மேடை ஏறினான் 'என் நாட்டு மக்கள் சர்வாதிகாரத்தின் கால்களா தரையிலே பூச்சிகள் போல் தேய்க்கப்பட்டதை நேரில் கண்டேன். என் வெறுப்பை இப்படித்தான் காட்ட முடிந்தது. என் செயலுக்காக நான் வருத்தப்படவில்லை. சாவுக்கு அஞ்சவில்லை. இளமையிலேயே நாட்டுக்காக உயிர்த் தியாகம் செய்யும் வாய்ப்புக் கிடைத்தமைக்காக மகிழ்கின்றேன்."

என்பது தூக்கில் தொங்கும் முன்பு அந்த வீர மறவன்வாய் மலர்ந்த வீரவாசகம்.

நாடு விடுதலை பெற்றபின் 1974 ஜூலை மாதம் உதம்சிங்கின் அஸ்தியின் ஒரு பகுதி, ஒரு தங்கப் பேழையில் இந்தியத் திரு நாட்டை அடைந்தது. அந்த அஸ்தி கங்கை சட்லெஜ் நதிகளில் கரைக்கப் பட்டது. அந்த நிகழ்ச்சியில் பல்லாயிரவர் கலந்து கொண்டு அந்த வீர இளைஞனுக்கு வீர வணக்கம் செலுத்தினர்.

1919 இல் உயிர் நீத்த தியாகிகளின் நினைவுச் சின்னமாக ஜாலியன் வாலாபாக் மலர்ந்தது. அந்தத் தியாக தீபங்களுக்கிடையே உதம்சிங் ஓர் ஒப்பற்ற தீபமாக ஒளிவீசிக் கொண்டுள்ளான்.

★★★

இந்நூல் எழுத உதவிய ஆதாரங்கள்

1. காங்கிரஸ் மகாசபை சரித்திரம் - பட்டாபி சீதாராமையா

2. இந்தியாவின் வரலாறு - முன்னேற்றப் பதிப்பகம் மாஸ்கோ

3. சத்திய சோதனை - மகாத்மா காந்தி

4. காந்தி வாழ்க்கை - லூயி பிஷர்

5. மகாத்மா காந்தி- வின்செண்ட் ஷீல்

6. A History of Freedom Struggle of India - K. Rajayyan

7. Nationalism in Asia - R.S. Chavan

8. Freedom at Midnight - Larry Collins

9. Gandhi - Attan Borough

10. காந்திஜியின் கட்டுரைகள், கடிதங்கள்

11. 1919 பஞ்சாப் படுகொலை

12. காங்கிரஸ் கமிட்டி அறிக்கை

13. ஹண்டர் கமிட்டி அறிக்கை

14. சபர்மதி ஆசிரமம் ஒலி, ஒளிக்காட்சி மற்றும் சில நூல்கள்

1. குடகு
2. தமிழகம்
3. சதுரகராதி
4. வள்ளுவம்
5. கோபுர தீபம்
6. நீதி நூல்கள்
7. மொழிவளம்
8. கல்வி நிலை
9. இசைத்தமிழ்
10. ஔவையார்
11. முத்தொள்ளாயிரம்
12. லெனின் வாழ்கிறார்
13. பழந்தமிழர் நாகரிகம்
14. புகழேந்தி நளன் கதை
15. இலக்கியக் கட்டுரைகள்
16. வெளிச்சத்தை நோக்கி...
17. பாரதியின் புதிய ஆத்திசூடி
18. தமிழர் திருமணத்தில் தாலி
19. சங்கப் புலவர் சன்மார்க்கம்
20. கனவுகளின் பலாபலன்கள்
21. பாரதிதாசனின் சிறு கதைகள்
22. சுதந்திரப் போரின் எழுச்சிக் களம்
23. அண்ணா போற்றிய பெருமக்கள்
24. தொல் திராவிட மொழி கண்டுபிடிப்பு
25. புதுமைப்பித்தன் கதைகள் விமர்சனங்களும் விஷமதனங்களும்
26. அன்புப் பணிக்கு ஓர் அன்னை தெரேசா
27. 19ஆம் நூற்றாண்டில் தமிழ் இலக்கியம்

T148

தமிழ் வளர்ச்சித் துறை

100.00